பக்கங்கள்: இருபத்து எட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 29 வியாழக்கிழமை (15.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 293



14 தலைமைத்துவ பயிற்சி பயனுள்ளதா?



21 அரக்கோண ரயில் விபத்து 200 பேர் காயம்



25 வீழ்ந்தார் நடப்புச் சம்பியன்

# அரசியல் தீர்வு உடன் இல்லையேல் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும்

## ஆபத்துக் குறித்து எச்சரிக்கிறார் பிளேக்

## அரசு – கூட்டமைப்புப் பேச்சுக் குறித்தும் நம்பிக்கை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 15

"யுத்தத்தின் பின்னரான நிலைமைகளை ஆராய்ந்து அதற்கேற்ப அரசியல் தீர்வை அரசு முன்வைக்கத் தவறினால் 10 வருடங்களுக்குள் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் ஆபத்து 60 விதம் உள்ளது. இந்த ஆபத்து இலங்கையில் மாத்திரமன்றி யுத்தம் இடம்பெற்ற எல்லா நாடுகளிலும் உள்ளது"

- இவ்வாறு இலங்கை வந்திருந்த தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் நேற்றுக் கூறினார்.

கொழும்பில் உள்ள அமெரிக்க நிலையத்தில் நேற்று அவர் ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசியபோதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பக். 27



## திருட்டு முயற்சி; சிக்கினார் சிப்பாய்

யாழ்ப்பாணம், செப்.15

திருட்டு முயற்சியில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் 51ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 7.30 மணியள

பக். 04

## மாணவியைக் காணவில்லை

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை, நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் கடந்த ஐந்து நாள்களாகக் காணாமல் போயுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் பெற்றோரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற மாணவி இதுவரை வீடு திரும்ப

பக். 27

## துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

கொழும்பு, செப்.15

வடக்கு, கிழக்கில் செயற்பட்டு வரும் துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்கள் உடனடியாகக் களையப்பட வேண் டும் - இவ்வாறு நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் ரொபேர்ட் ஓ பிளேக் குறிப்பிட்டுக் கூறினார்.

இந்த ஆயுதக் களைவு விடயம் குறித்து நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடினேன். வெளியாரிடம் ஆயுதங்கள் இருப்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்து விளக்கினேன். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் புரிந்து கொண்டுள்ளனர். இந்த விவகாரத்தில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

அதேசமயம் மர்ம மனிதர்கள் தொடர்புடையசம்பவங்களுக்கும் முடிவு காணப்பட வேண்டியது அவசியமாகும். இந்த மர்ம மனிதர்கள் விவகாரம் பாதுகாப்பு தொடர்பாக நிச்சயமற்ற தன்மை அதிகரித்துச் செல்ல

பக். 04

## மாணவிகளை மோ.சைக்கிளில் இழுத்து ஏற்ற முயன்ற நபர்

### மீசாலையில் நேற்றுப் பரபரப்பு

யாழ்ப்பாணம், செப்.15

தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சென்று கொண்டிருந்த மாணவிகளைப் பிடித்துத் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றுவதற்கு முயன்ற நபரினால் நேற்று மாலை மீசாலைப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மீசாலை, புத்தூர்ச் சந்திப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் இயங்கி வரும் தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு நேற்றுப் பிற்பகல் மாணவிகள் சென்றுகொண்டிருந்தனர்.

பக். 27

## மக்களை மிரட்டும் ஈ.பி.டி.பி

கொழும்பு, செப்.15

யாழ். குடாநாட்டில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் செயற்பாடுகள் குறித்து அங்குள்ள மக்களில் பலர் அதிருப்தியுடன் உள்ளனர். இதனை அங்குள்ள மக்கள் என்னிடம் நேரில் தெரிவித்தனர். மக்கள் மிரட்டப்படுவது குறித்தும் அவர்கள் விவரித்தனர்.

கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் பிளேக் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

வடக்கில் தமிழ்ப் பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்த வேண்டும். இதனால் அங்குள்ள மக்கள் கூடுதல் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பக். 04

## வெளியேற்றப்பட்ட 'தினக்குரல்' பத்திரிகையாளர்கள்



கொழும்பு, செப்.15

கொழும்பில் இயங்கி வரும் 'தினக்குரல்' பத்திரிகையின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் நேற்று புதன்கிழமை அவர்களின் கடமைகளுக்காக அலுவலகத்தினுள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

நிர்வாகத்தினரின் அறிவுறுத்தலின்படி அலுவலகத்துக்குச் சென்றவர்கள் முன் 'கேற்'றடியில் வைத்து தடுக்கப்பட்ட

பக். 27

## நவாலியில் நேற்றுப் பதற்றம்

யாழ்ப்பாணம், செப்.15

நவாலி வடக்குப் பகுதியில் நேற்று இரவு வீடொன்றுக்குள் நுழைந்த மர்ம மனிதர்கள் அங்கு மக்கள் திரண்டதையடுத்து ஓடித் தப்பினார்கள்.

நேற்று இரவு 9 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தால் நவாலிப் பகுதியில் பல மணி நேரம் பதற்ற நிலைமை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வயல் வெளிப் பிரதேசமாக மேற்படி பிரதேசத்துக்குள் கறுப்பு நிற உடையுடன் உள் நுழைந்த இரு மர்ம மனிதர்களைக் கண்ட வீட்டுக்காரரர் கூக்குரல் இட்டுள்ளார். சத்தம் கேட்டு அங்கு திரண்டு வந்த ஊர் மக்கள் மோட்டார்

பக். 04

### இலங்கை மீதான விசாரணையில் தாமதம்

## ஐ.நா. இராஜதந்திரிகளிடையே பெரும் கருத்து முரண்பாடு!

கொழும்பு, செப்.15

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் சபைக் கூட்டத்தில் இலங்கைக் கெதிரான குற்றச்சாட்டுகளை விசாரித்து ஆக்கபூர்வமான நடவடிக்கையொன்று எடுக்கப்படாமை குறித்து ஐ.நா. இராஜதந்திரிகளிடையே பெரும் கருத்து முரண்பாடு ஏற்பட்டிருப்பதாக அறியமுடிகின்றது.

மனித உரிமைகள் சபையின் இந்தக் கூட்டத்தொடரின்போது இலங் கைக்கு எதிரான மனித உரிமைகள் குற்றச்சாட்டுகள் தொடர்பில் உறுதியான தீர்மானமொன்று எடுக்கப்பட வேண்டுமென்று ஐ.நாவின்

பக். 27

## நாட்டைக் கூறுபோட சர்வதேச சமூகம் முயற்சி 13ஆவது திருத்தத்தை உடன் ரத்துச் செய்க!

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, செப்.15

இலங்கையைக் கூறு போடுவதற்கு சர்வதேச சமூகம் முனைப்புடன் சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. எனவே அரசு உடனடியாக 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையை எப்படியாவது தமது வழிக்குக் கொண்டு வரவேண்டும் என்ற

பக். 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி மின்னலுடன் கூடிய வானிலை நிலவக் கூடிய சாத்தியம்.

COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
புரட்டாதி 14, 2011

பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,895.61↓
மிலங்கா(MPI) 6,227.65↓

உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,637.47Mn
பங்குகளின் அளவு(No.) 117.71Mn
வியாபாரம்(No.) 18,933

விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ரெஸ் அக்குரோ 5.80
அலுஃபிட் 78.00
சிலோன் காடியன் 350.00
உடபுசலாவ 39.90
ஈஸ்ரேன் மேச்சன் 2500.00

குறைவு(Top 5 losers) - விலை Rs.
கொழும்பு பாமசி 1701.00
அலயன் பைனான்ஸ் 1100.00
ஈக்குற்றி ரு 29.30
லங்கா சிமென் 22.90
பி.டி.எல் 67.10

மேலதிக தகவல்கள்- www.cse.lk

# முள்ளிக்குளம் மக்கள் அமைதிப் பேரணி

மன்னார், செப்.15

இடம்பெயர்ந்த தம்மை தமது சொந்தமண்ணில் மீள்குடியமர்த்த வலியுறுத்தி, மன்னாரில் முள்ளிக்குளம் மக்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அமைதிப் பேரணி ஒன்றினை நடத்தினர். 2007ஆம் ஆண்டு மன்னாரில் தென்பகுதியான முசலிப் பிரதேசத்தில் இருந்து இந்த மக்கள் இடம்பெயர்ந்தனர்.

முசலிப் பிரதேசத்தின் முள்ளிக்குளம் கிராமத்தை தவிர்ந்த ஏனைய கிராமங்களில் தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் மீளக்குடியேறியிருக்கின்றனர்.

இந்த நிலையில் தம்மையும் தமது மண்ணில் குடியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரி, செவ்வாய்க்கிழமை இந்த கவனயீர்ப்பு அமைதிப் பேரணி நடைபெற்றுள்ளது.

தமது குடியமர்வு தொடர்பில் கவனம் செலுத்துமாறு,



ஜனாதிபதியைக் கோரும், தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை, மன்னார் அரச அதிபர் என். வேதநாயகத்திடம் அவர்கள் சமர்ப்பித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அமைதிப் பேரணியில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், அருட்தந்தையர்கள், முள்ளிக்குளம் கிராம மக்கள் என 1500 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (த-601)

# ஆலயத்தில் திருட்டு சந்தேகத்தில் ஒருவர் கைது

கோப்பாய் வடக்கில் உள்ள சிறிய ஆலயம் ஒன்றில் திருட்டு சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையவராக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரைத் தடுத்து வைத்து விசாரித்து வருவதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் வடக்குப் பகுதியில் கோப்பாய் பிரதேச செயகத்துக்கு அருகிலுள்ள செல்லப் பிள்ளையார் ஆலயத்திலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டிருந்தது. ஆலயத்தின் பாவனையில் உள்ள பித்தளைப் பொருள்கள் நேற்றுமுன்தினம் நண்பகல் வேளை திருட்டுப் போயிருந்தன. (த-14)

# மெதடிஸ்த திருச்சபையின் 190 ஆவது ஆண்டு விழா

வடமராட்சி, செப்.15

கட்டைவேலி, தூயதிரித்துவ மெதடிஸ்த திருச்சபையின் 190 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 18ஆம் திகதி ஞாயிறு வரை கட்டைவேலி தேவாலயத்தில் குருவானவர் அருட்திரு டெயன்சி தலைமையில் நடைபெறவுள்ளது.

மூன்று நாள் நிகழ்வுகளிலும் விசேட விருந்தினர்களாக இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் அருள் அறிவர் கு. டபிள்யூ. ஜெபநேசன், வடக்கு கிழக்கு மாகாண திருச்சபைத் தலைவர் அருட்திரு எஸ்.டி.தயாசீலன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன், டாக்டர் ஜே. நித்திசின்னையா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

முதல்நாள் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நிகழ்வில் ஆரம்ப வழிபாடு, திருமறை ஆய்வு என்பன இடம்பெறும்.

இரண்டாம்நாள் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு முன்பள்ளிக் கட்டடத்திறப்பு, பெயர்ப்பலகை திரைநீக்கம், திருமுழுக்கு வழிபாடு, மன்றாடல், இடுகாடு நுழைவாயில் திறந்து வைத்தல், 190ஆவது ஆண்டு மலர் வெளியீடு, கலை விழா என்பன இடம்பெறும்.

மூன்றாம் நாள் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வடக்கு கிழக்கு மாகாண திருச்சபைத் தலைவர் அருட் திரு. எஸ்.டி. தயாசீலன் நடத்தும் திடப்படுத்தல் திரு விருந்து வழிபாட்டுடன் விழா நிறைவுறும். (த-236)

# நல்லூரில் காணமற்போன சிறுமி இருபாலையில் மீட்பு

யாழ்ப்பாணம், செப்.15

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் பூங்காவனத் திருவிழா அன்று காணாமல் போன சிறுமி இரண்டு வாரங்களின் பின் இருபாலைச் சந்தியில் இருந்து நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளார்.

புதிய செம்மணி வீதி பாரதிபுரத்தைச் சேர்ந்த வேலன் வேணிகா (வயது-6) என்ற சிறுமியே மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பெருந் திருவிழாவின் இறுதி நாளான கடந்த 29 ஆம் திகதி பூங்காவனத்தின் காலைப் பூசை வழிபாட்டுக்காகப் பெற்றோருடன் கோயிலுக்கு வந்த சிறுமியே திடீரென்று மாயமாகிக் காணாமல் போயிருந்தார்.

இரண்டு வாரங்களின் பின்னர் இருபாலைச் சந்தி பேச்சியம்மன் கோயிலுக்கு அருகிலிருந்து நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டார். குறித்த இடத்தில் பிற்பகல் 3 மணிமுதல் நீண்ட நேரமாகச் சிறுமி அழுது கொண்டிருந்ததை அவதானித்த மக்கள் அவளிடம் விசாரித்துள்ளனர்.

அதனையடுத்து மக்கள் அங்கு கூடினர். அதிலிருந்த ஒரு நபர் தான் குறித்த சிறுமியின் மாமன் எனத் தெரிவித்ததோடு வீட்டில் பெற்றோருக்கும் தகவல் கொடுத்தார். அதன் பின்னர் மாலை 5.45 மணியளவில் மேற்படி இடத்துக்கு வந்த பெற்றோர் சிறுமியை மீட்டுச் சென்றுள்ளனர்.

மேலும் குறித்த சிறுமி தன்னை யாரோ கூட்டிவந்து அந்த இடத்தில் விட்டுச் சென்றதாகவும் பொதுமக்களிடம் தெரிவித்துள்ளார். சம்பவ இடத்துக்குப் பொலிஸார் செல்லவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-15)

# கரை ஒதுங்கிய சடலங்கள் இந்தியர்களுடையவை

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடற்கரையில் ஒதுங்கியபோது மீட்கப்பட்டு பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இரு இந்தியர்களின் சடலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் உறவினர்களின் ஒத்துழைப்புடன் இரண்டு சடலங்களும் நேற்று யாழ்ப்பாணத்தில் தகனஞ்செய்யப்பட்டன. இந்த இருசடலங்களும் வெவ்வேறு தினங்களில் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தன.

அந்த இரண்டு சடலங்களும், மீன்பிடிக்கச்சென்ற தமிழ்நாட்டின் நாமக்கல் மாவட்டம், சிலுவம்பட்டி, செட்டியார் தெருவைச் சேர்ந்த முத்துச்சாமி பொன்னுச்சாமி தேவநாதன் (வயது - 31) சுற்றுலாப் பயணியாகச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சீனி முருகானந்தன் (வயது - 28) ஆகியோருடையது என அடையாளம் காணப்பட்டன.

முருகானந்தன் என்பவர் கன்னியாகுமரி கடற்கரைக்குச் சென்றவேளை கடலில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல் போயிருந்தார். இந்தநிலையில் கடந்த மாதம் 28ஆம் திகதி அவரது சடலம் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கரையொதுங்கியது. தேவநாதன் என்பவர் இராமநாதபுரம் கடற்கரையிலிருந்து படகில் மீன்பிடிக்கச் சென்றபோது காணாமல் போயிருந்தார். இவரது சடலம் கடந்த 4 ஆம் திகதி ஊர்காவற்றுறையில் கரைஒதுங்கியது. இவரது உடலில் காணப்பட்ட காயத்தைக் கொண்டு அவர் படகு விபத்தினால் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேவநாதனின் சடலத்தை இந்தியாவிலிருந்து நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்த அவரது உறவினரான ம. தனபாலன் என்பவர் அடையாளம் காட்டினார். முருகானந்தனின் சடலத்தை யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரக அதிகாரி கே. ரகுராம் அடையாளம் காட்டினார்.

ஊர்காவற்றுறை நீதிவான் ஜோய் மகிழ் மகாதேவா மரண விசாரணைகளை மேற்கொண்டார் உறவினர்களின் சம்மதத்துடன் இரண்டு சடலங்களும் யாழ். கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நேற்றுப் பிற்பகல் தகனஞ்செய்யப்பட்டன. (த-4-15)

# நிகழ்வுகள்

## ஆண்டு நினைவு விழா

யாழ்ப்பாணம் செப். 15

ஆத்திசூடி வீதி, மலைமகள் சனசமூக நிலையத்தின் 58ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை முதல் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை வரை இரண்டு தினங்கள் நடைபெறும்.

நிகழ்வையொட்டி 17ஆம் திகதி விளையாட்டுப் போட்டிகளும், 18ஆம் திகதி பரிசளிப்பும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (த-7)

## சொற்பொழிவு

வடமராட்சி செப். 15

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறுதோறும் இடம்பெற்றுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ''காத்தல் கடவுள்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறும்.

இந்தச் சொற்பொழிவை யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகா வித்தியாலய ஆசிரியர் காரை எம்.பி. அருளானந்தன் நிகழ்த்துவார்.

## இன்னிசை

வடமராட்சி, செப்.15

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை பக்கவாத்தியங்கள் சகிதம் இன்னிசை நடைபெறும். (த-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பான் கீ- மூனின் பொறுப்பற்ற போக்கு இன்னர் சிற்றி பிரஸ் கடும் விசனம்

இலங்கையின் போர்க் குற்றச்சாட்டுத் தொடர்பாக ஆவணப்படுத்தப்பட்டிருந்த ஐ.நா. அறிக்கையை மாதங்கள் கடந்த பின்னர் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஜெனீவாவிலுள்ள மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைத்துள்ளார். கடந்த திங்கட்கிழமை (செப்ரெம்பர் 12) அவர் அதனை அனுப்பியதாக நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட இன்னர் சிற்றி பிரஸ் குறிப்பிட்டுள்ளது.

செப்ரெம்பர் 12 இல் (திங்கட்கிழமை) இலங்கையில் போர்க் குற்றச்சாட்டுகளை ஆவணப்படுத்திய கொலைக்களங்கள் ஒளிநாடாவை பார்ப்பதற்கு நேரத்தை பான் கீ- மூன் எடுத்திருந்தாரா? என்று அவரின் பேச்சாளர் மார்ட்டின் நீசேர்க்கியிடம் இன்னர்சிற்றி பிரஸ் கேட்டிருந்தது. தான் அதனைப் பரிசீலிக்க வேண்டுமென நீசேர்க்கி கூறினார். 11 மணித்தியாலங்கள் கடந்தும் பதில் கிடைக்கவில்லை. அனுப்பி வைக்கப்பட்டதாக அறிவித்தல் மட்டும் கிடைத்தது.

இதேவேளை, ஐ.நா.வுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கொஹன்னவின் அறிக்கை பற்றியும் இன்னர்சிற்றி பிரஸ் நீசேர்க்கியிடம் கேட்டிருந்தது. இலங்கையின் கொலைக் களங்கள் என்ற பிரிட்டனின் சனல்-4 ஒளிநாடாவுக்கு சவாலான மற்றொரு ஆவணப்படம் ஐ.நா.வில் காண்பிக்கப்பட்டிருந்தது. (கொலைக் களங்கள் ஐ.நா.வில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.)

அந்தக் கேள்வியை நீங்கள் நம்பியாரிடம் கேட்டிருக்க வேண்டுமென இன்னர்சிற்றி பிரஸுக்கு கொஹன்ன கூறியிருந்தார். சரணடையும் புலிகளின் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த உறுதிமொழிகள் பற்றிக் கேட்கப்பட்டபோது, அந்தக் கேள்வியை நம்பியாரிடம் கேட்க வேண்டுமென அவர் இன்னர்சிற்றி பிரஸுக்குக் கூறியிருந்தார்.

நம்பியாரிடம் கேட்கப்பட வேண்டுமென கொஹன்ன கூறியிருக்கும் நிலையில், கேள்விகளை நம்பியாரிடம் கேட்க முடியுமா? என்று நீசேர்க்கியிடம் இன்னர்சிற்றி பிரஸ் கேட்டது. பான் கீ மூன் கொலைக்களங்களைப் பார்த்துள்ளாரா? என்பதை தான் பரிசீலிக்க வேண்டுமெனக் கூறிய நீசேர்க்கி நம்பியார் பற்றி பதிலளித்திருக்கவில்லை. அழுத்திக் கேட்ட போது, உங்களுக்கு அந்தக் கேள்வியின் பதில் தெரியும் என்று நான் நினைக்கிறேன் என அவர் கூறினார். ஆதலால் போர்க் குற்றங்களில் சம்பந்தப்பட்டதாக அல்லது சாட்சியங்கள் பற்றிய கேள்விகளுக்கு பான் கீ- மூனின் தலைமை அதிகாரி பதிலளிக்க மறுக்கிறார். நீங்கள் நம்பியாரிடம் கேட்க வேண்டுமென்று இலங்கையின் தூதுவர் கூறியிருந்த போதிலும் கூட அவர் மறுக்கிறார்.

இதேவேளை, யு.என்.எவ்.பி.ஏ.யின் முன்னாள் தலைவரை ஐ.நா. நிபுணர்குழு பல மாதங்களுக்கு முன்னர் பரிந்துரைத்திருந்த ஐ.நா.வின் சொந்த செயற்பாடுகள் தொடர்பான விடயங்களை மீளாய்வு செய்வதற்குப் பான் கீ- மூன் தலைவராக நியமிக்கிறார்.

அறிக்கையை அனுப்பி வைப்பதற்கு யூ.என்.டி.பி. எதிர்ப்பதாக இன்னர்சிற்றி பிரஸுக்குக் கூறப்பட்டது. யூ.என்.எவ்.பி.ஏ. யூ.என். டி.பி.க்கு நெருக்கமாக இருந்தது. அதனால் தோரயா ஒபைட் தனது மீளாய்வில் படைக் கொண்டு சென்று பாறையில் மோதும் சாத்தியம் இல்லை. அத்துடன், யூ.என். எவ்.பி.ஏ. பதவியில் தொடர்ந்திருப்பதற்கு அவர் கோரியுள்ளார். அதனால் அதற்கு ஏணைய வேலைகளை வழங்குவதில் செயலகத்திற்கு நெருக்கடியாக இருப்பதற்கான சாத்தியமில்லை என்று இன்னர்சிற்றி பிரஸ் கூறியுள்ளது. (த)

# கிளிநொச்சி இராணுவத்தினர் நால்வருக்குப் பிணை மறுப்பு

கிளிநொச்சி, செப்.15

கிளிநொச்சி பளைப்பகுதியில் ஆயுதமுனையில் அச்சுறுத்தி சுமார் 36 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நான்கு கைத்தொலைபேசிகள் என்பவற்றை பறிமுதல் செய்த நான்கு இராணுவத்தினருக்குமான விளக்கமறியல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. கடந்த 6 ஆம் திகதி பளைப் பகுதிக்கும் முகமாலைப் பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள இராணுவ காவலரணுக்கு அண்மித்த பகுதியில் வைத்து இராணுவச் சீருடை அணிந்தவர்களால் மூன்று இளைஞர்கள் மறைவிடம் ஒன்றுக்குக் கூட்டிச் சென்று கடுமையாகத்தாக்கப்பட்டு அவர்களிடம் இருந்த 36 ஆயிரம் ரூபா பணத்தையும், அவர்கள் வைத்திருந்த நான்கு கைத்தொலைபேசிகளையும் பறிமுதல் செய்தமை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களையும் கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 7 ஆம் திகதி, புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

குறித்த நான்கு சந்தேக நபர்களான இராணுவத்தினரையும், 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அன்றைய தினம் அடையாள அணிவகுப்பு ஒன்றை நடத்துமாறும் உத்தரவிடப்பட்டிருந்தது. குறித்த அடையாள அணிவகுப்பு நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் முன்னிலையில் நடைபெற்றது. விசாரணைகள் நடைபெற்றதையடுத்து குறித்த நால்வரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் உத்தரவிட்டார்.

எதிர்த்தரப்பு சார்பாக ஆஜரான சட்டத்தரணி ஊடாக இராணுவ வீரர்களால் மன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிணை விண்ணப்பத்துக்கு பொலிஸார் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து பிணை விண்ணப்பத்தினை மன்று நிராகரித்துள்ளது.

இதேவேளை அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட நான்கு கைத்தொலைபேசிகள், பணம் உள்ளிட்ட சான்றுப் பொருள்களும் மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவத்தின் போது மூன்று சந்தேகநபர்கள் இராணுவ சீருடையிலும், மற்றுமொருவர் சாதாரண உடையிலும் இருந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டதையடுத்து சீருடை அணிந்த இராணுவத்தினர் முன்னிலையிலும், சாதாரண உடை அணிந்த இராணுவத்தினர் முன்னிலையிலும் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் இரு சந்தேக நபர்களை முறைப்பாட்டாளர்கள் அடையாளம் காட்டியுள்ளனர். (த-6)

# கிளிநொச்சியில் இன்று சாரதி அனுமதிப் பரீட்சை

கிளிநொச்சி, செப்.15

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்து 14.06.2011 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெற்ற எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுநர் பரீட்சார்த்த பரீட்சை இன்று வியாழன் காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைக்காக விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை உரிய நேர ஒழுங்கில் நடைபெறும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (எ)

# மன்னாரில் வர்த்தகர் கொலை சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

மன்னார், செப்.15

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆக்காட்டி வெளிக் கிராமத்தில் வர்த்தகர் ஒருவர் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மாணவர் ஒருவர் உட்பட இருவரைத் தொடர்ந்தும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் திருமதி. கே.ஜீவராணி கடந்த திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

ஆக்காட்டி வெளிக் கிராமத்தைச் சேர்ந்த வர்த்தகரான கனகரத்தினம் மகேந்திரன் (வயது -42) என்பவர் தனது கடைக்குள்ளேயே வைத்து கடந்த மாதம் 31 ஆம் திகதி இரவு மிகக்கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

பின் அதே இடத்தைச் சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரும் சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று இரவு 10 மணிக்குப் பலத்த காயங்களுடன் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இவருடைய உடலில் சந்தேகத்துக்கிடமான இரத்தக் கறைகள் காணப்பட்டன. பின் வைத்தியசாலையில் வைத்து குறித்த மாணவனை விசாரணை செய்தபோது குறித்த கொலையுடன் மாணவர் தொடர்புபட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

பொலிஸாரின் விசாரணையின் போது குறித்த மாணவனால் மேலும் ஒரு நபர் அடையாளம் காட்டப்பட்டார். பின் கடந்த 4 ஆம் திகதி பொலிஸார் குறித்த நபரை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது கடந்த 12 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

மீண்டும் 12 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

(த-601)

# தூக்கில் தொங்கிய இளம் பெண்ணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 15

நான்கு மாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்து கொண்ட இளம் பெண் ஆனைக்கோட்டையில் நேற்றுமுன்தினம் தூக்கில் தொங்கிய நிலையில் உயிரிழந்து காணப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த பெண்ணின் சடலம் விசாரணைகளின் பின்னர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், இந்த மரணத்தில் சந்தேகம் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதால் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர்.

பெரியகுளம், கண்டாவளையைச் சேர்ந்தவரும் தற்போது ஆனைக்கோட்டையில் வசித்து வந்தவருமான பார்த்தீபன் விசாலினி (வயது - 19) என்ற பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

பெண்ணின் கணவர் வெளியில் சென்றிருந்த வேளை நேற்று முன்தினம் பிற்பகல் சேலையில் தூக்கிட்டுத் தொங்கிய நிலையில் பெண்ணின் சடலம் காணப்பட்டதாகப் பொலிஸ் விசாரணையின்போது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

பெண்ணின் கையில் கீறல் காயங்கள் இருப்பதால் மரணத்தில் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. மானிப்பாய் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-4-15)

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக...

இந்தியாவின்;
முன்னணி நாடகக்கலைஞர்
பேராசிரியர் அ.மங்கை
நடத்தும்



## நாடகப் படைப்பாக்கக் களப்பயிற்சி

நாடகத்துறை ஆர்வலர்கள், நடனத்துறை சார்ந்தோர் மற்றும் நாடகத்துறை மாணவர்கள் பங்கு பற்றலாம்.

ஒக்ரோபர் 2 - 5
(காலை 9.00-மாலை 6.00)
வயதெல்லை : 20-30
விண்ணப்ப முடிவு திகதி : இன்று 15.09.2011

30 இடங்கள் மட்டுமே உள்ளதால் பதிவு கட்டாயமானது.

திருநெல்வேலியில் உள்ள செயல்திறன் அரங்க இயக்க அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பதிவுகளை மேற்கொள்ளலாம். விரும்புபவர்கள் ஈ.மெயில் மற்றும் தொலைபேசி மூலமும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

செயல்திறன் அரங்க இயக்கம்
ACTIVE THEATRE MOVEMENT
'அருளகம்', ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 321 6222 ,0773112692,
e-mail : activetheatre@gmail.com

பேராசிரியர் அ.மங்கை: முப்பது வருடங்களாக அரங்கத்துறையில் பணியாற்றுபவர். கல்லூரிப் பேராசிரியராகக் கடமையாற்றிக் கொண்டே அரங்கில் தீவிரமாக இயங்குபவர். இந்திய தேசிய நாடகப்பள்ளி உயர் குழு உறுப்பினர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் 'பல்கலை அரங்கு' குழுவோடு பணியாற்றியவர். 'மௌனக்குரல்', 'மரப்பாச்சி' என்ற நாடகக் குழுக்களை உருவாக்கி இயக்கி வருபவர். தமிழ்நாட்டின் முக்கியமான நாடகக் கலைஞர்களுடனும் ஈழத்து நாடகக் கலைஞர்களான தாசிசியஸ், இளைய பத்மநாதன் ஆகியோருடனும் பணியாற்றியவர். பெண் அரசியல் பேசும் இவர் தனது அரங்க வெளியில் பெண்களின் உணர்வுகளை அதிகம் பதிவு செய்திருக்கிறார். இடதுசாரி இயங்கங்களுடன் இணைந்து அரங்கப் பணியாற்றியவர். வீதி நாடகங்கள், தனியாள் அரங்கு மற்றும் மேடையரங்குகளில் பாண்டித்தியமிக்கவரான பேராசிரியை அ.மங்கை கவிஞர் இன்குலாப்பின் நாடகப்பிரதிகள் பலவற்றை நெறிப்படுத்தியிருக்கிறார். இந்திய அளவில் முக்கியமான பெண் நாடக நெறியாளராக மதிக்கப்படுபவர்.

ஊடக அனுசரணை உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவு செய்யப்படாது நாடுமுழுவதும் செயற்பட்டுவரும் 60 சிறுவர் இல்லங்கள்

## தகுதியற்றவற்றை மூட நடவடிக்கை

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஆணையாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்கள் நாடெங்கும் இயங்கி வருகின்றன என்று திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சரத் அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பதிவு செய்யப்படாத 60 இல்லங்களையும் பரிசோதனைக்கு உட்படுத்தி தகுதிவாய்ந்தவற்றைப் பதிவு செய்யவும் தகுதியற்றவைகளை மூடி அங்குள்ள பிள்ளைகளை வேறு இல்லங்களுக்கு மாற்றுமாறும் மாகாண ஆணையாளர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிள்ளைகளை சரியாகப் பராமரிக்க தகுதியற்றவை என்று கணிக்கப்பட்ட பல இல்லங்கள் ஏற்கனவே மூடப்பட்டு விட்டன எனவும் அவர் கூறினார்.

நாடெங்குமுள்ள சிறுவர் பாதுகாப்பு நிலையங்களில் 16 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர், சிறுமிகள் உள்ளனர் என்று கூறிய ஆணையாளர் நாயகம் நிட்டம்புவ, திவஹாரிவில் எரிந்து மரணமான சிறுவன் இருந்த நிலையம் பதிவு பெறாதது என்றும் சுட்டிக்காட்டினர். (ம-5)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப்.15

மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் ஆலயத்தின் சாந்தி ஹோமப் பூசைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை முதல் தொடர்ந்து பிரதி சனிக்கிழமைகளில் இடம் பெறவுள்ளன.

இதில் பிரதி சனிக்கிழமைகளில் காலை 6 மணிக்குப் பூசைகள் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு சங்கற்பமும், முற்பகல் 11 மணிக்கு சனீஸ்வர ஹோமமும், நன்பகல் 12 மணிக்கு பூசை அர்ச்சனையும் இடம்பெறும்.

மாலை 4.30 மணிக்கு அபிசேகம் இடம்பெற்று மாலை 5.30 மணிக்கு சனீஸ்வர ஹோமமும், மாலை 6 மணிக்கு பூசை அர்சனையும் இடம் பெறும். (ம-313)

* * *

மன்னார், அடம்பன் புனித வியாகுல அன்னை ஆலயத்தின் திருவிழா திருப்பலி நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. நாளை மறுதினம் மன்னார் சாவற்காட்டு தூய வேளாங்கண்ணி ஆலயத்தின் ஆண்டுப் பெருவிழா இடம்பெறவுள்ளது. திருவிழா திருப்பலி அன்றையதினம் காலை 7 மணிக்கு கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (ம-601)

* * *

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை காட்டுத்துறை அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக தின சங்காபிஷேகமும், மணவாளக் கோலவிழாவும் இன்று வியாழக்கிழமை இடம் பெறும்.

அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு விநாயகப் பொருமானுக்கு அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும், மாலை 6 மணியளவில் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் தெருவீதி உலாவும் உற்சவமும் நிகழ்வுள்ளன. (ஒ)

## நாட்டைக் கூறுபோட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனைப்புடன் செயற்படும் சர்வதேச அமைப்புகளுக்கு அடிபணியாது அரசு தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கவேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 18ஆவது கூட்டத்தொடரின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக விவரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடருக்கு தருஸ்மன் அறிக்கையை ஐ.நா. செயலாளர் பான் கீ - மூன் அனுப்பி வைத்துள்ளார். அந்த அறிக்கையை உலக நாடு முழுவதும் அனுப்புவதற்கு அவர் திட்டம் வகுத்துள்ளார்.

அதுமட்டுமின்றி, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலங்கை தனது நிலைப்பாட்டை அறிவிப்பதற்கு ஆறுமாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கே சர்வதேச சமூகம் இலங்கைக்கு காலஅவகாசம் வழங்க இணங்கியுள்ளது. இதில் உள்நோக்கம் உள்ளது என்பது தெட்டத்தெளிவு.

இக்காலப்பகுதியினுள் இலங்கை அரசை அடிபணியவைத்து 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தி நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கே சர்வதேச நாடுகள் திடசங்கற்பம் பூண்டுள்ளன.

இந்த மாயைக்குள் இலங்கை சிக்காமல், சர்வதேச சூழ்ச்சிகளை முறியடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். முதற்கட்டமாக 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விரைவில் அதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்து அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இல்லையேல், சர்வதேச சூழ்ச்சிகளில் சிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

இவ்வாறான ஆலோசனைகளை நாம் ஆரம்பம் முதலே அரசுக்கு கூறிவந்தோம். இனியும் செவிமடுக்கத் தவறினால் விளைவுகள் பாரதூரமாகிவிடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை- என்றார். (ஒ-சி)

## துணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாகியுள்ளதாக யாழ்ப்பாணத்தில் பலர் என்னிடம் தெரிவித்தனர்.

- இவ்வாறு கூறினார் பிளேக். (ஓ)

## மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் தேவையற்ற பிரச்சினைகளையும் தவிர்த்துக் கொள்ள முடியும் என்று அங்கு தெரிவித்த ரொபேர்ட் ஓ பிளேக், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் தொடர்பிலும் அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்றார். (சி)

## திருட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் கொட்டடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மொனராகலையைச் சேர்ந்தவரும் 51ஆவது படைப்பிரிவில் அரைச் சம் பளத்துக்குப் பணியாற்றுபவருமான அஜித் பெர்னாண்டோ என்பவரே யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டவராவார்.

குறித்த சந்தேக நபருக்கு எதிராக மொனராகலையில் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்பு டைய 5 வழக்குகள் இருப்பதாகவும், யாழ்ப்பாணத்தில் இரு வழக்குகள் இருப்பதாகவும் இதன்காரணமாகவே இவர் இராணுவத்தில் அரைச் சம்பளத்துக்கு கடமையாற்றி வருகிறார் எனவும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-10-15)

## நவாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிள், மற்றும் வாகனங்களின் உதவியுடன் மர்ம மனிதர்கள் இருவரையும் துரத்திய போதும் அவர்கள் மறைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மானிப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-302)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசின் நல்லிணக்க அணுகுமுறை என்ன?

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன், இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமா அதிபர் தருஸ்மன் தலைமையில் நியமித்த நிபுணர் குழுவினரின் அறிக்கையை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது. ஐ.நா.வின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அந்த அறிக்கையை உத்தியோகபூர்வ ஆவணமாக ஏற்றுக்கொள்ள முடியாது.

செயலாளர் நாயகம் தனக்கு ஆலோசனை வழங்குவதற்கெனவே நிபுணர் குழுவை நியமித்திருந்தார். அந்த நிபுணர்குழுவின் அறிக்கையை எந்த வகையிலும் ஐ.நா.வின் ஆவணமாக ஏற்றுக்கொள்ள முடியாது. தருஸ்மன் அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்தால், அது எதிர்காலத்தில் ஏனைய நாடுகளையும் பாதிப்பதற்கு வழி செய்யும், முன்னுதாரணம் ஆகிவிடும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

இதே பாங்கில், பாணியில், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆணைக்குழுவின் கூட்டத்தொடரின் முதலாம் நாளன்றே (12ஆம் திகதியன்று) சீற்றத்துடன் தெரிவித்திருந்தார்.

இத்தனைக்கும் அதே நாளில் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை மனித உரிமைகள் சபைக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

முன்னர், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்குப் பதில் அளிக்குமாறு பொதுச் செயலாளர் பான் கீ - மூன் அவகாசம் வழங்கியபோது, இலங்கை அரசாங்கம் அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தது. ஆனால், தமிழர் பிரதேசமான வடக்கில் என்ன நடந்தது என்பதனைத் தெரியப்படுத்தும் தனது சொந்த அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையும், செயலாளர் நாயகத்தால் மனித உரிமைகள் சபைக்கு இப்போது அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

எனினும், இலங்கை அரசின் மீதான போர்க்குற்றச் சாட்டுக் குறித்து சர்வதேச மட்டத்தில் விசாரணை செய்யுமாறு செயலாளர் நாயகம் பான் கீ - மூன் மனித உரிமைகள் சபைக்குச் சிபார்சு செய்யவில்லை. அதனால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அத்தகைய சர்வதேச விசாரணை நடத்தவும், அதன் அடிப்படையில் இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்கவும் சாத்தியங்கள் உண்டென விடயம் அறிந்த வட்டாரங்கள் கருதுகின்றன.

இதே வேளை-

நாட்டில் இனங்களுக்கு இடையே நம்பிக்கையையும் நல்லுறவையும் கட்டி எழுப்பும் வகையில் நல்லிணக்க அணுகுமுறையை உருவாக்குவதற்கான வழிமுறைகளை அரசாங்கம் கடைப்பிடித்து வருவதாக அமைச்சர் சமரசிங்க ஜெனிவாவில் மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் உரையாற்றியதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக கடும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் அனுபவங்களுக்கு அமைச்சரின் கூற்றுக்கள் சிறிதளவேனும் பொருந்தாது என்று கூட்டமைப்பின் அறிக்கையில் புட்டுக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை ஒரு வருடம் கடந்தும், பெட்டியில் போட்டு மூடி வைத்துக்கொண்டு, அவை உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தப்படாதிருக்க-

அந்தப் பரிந்துரைகளை எவ்வித தாமதங்களும் இன்றிச் செயற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் அப்பட்டமான பொய்யை சர்வதேச மன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

அவர் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் தெரிவித்தவைக்கு நேர்மாறாக தமிழ் மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்ந்து விடப்படுவதாகக் கூட்டமைப்பு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளது.

★ இடம்பெயர்ந்த மக்களைத் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதி மறுப்பது

★ தமிழ் மக்களின் விவசாய மற்றும் தனியார் நிலங்களை படையினரும், பெரும்பான்மை இனத்தவரும் பலவந்தமாகப் பறிப்பது

★ எந்த விதமான பகிரங்க அறிவித்தலும் இல்லாமல் வடக்கு, கிழக்கில் உள்ள அரச நிலங்களை பெரும்பான்மையினருக்குப் பகிர்ந்தளிப்பது

★ இனப்பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வது

★ இந்து, கிறிஸ்தவ கலாசாரப் பாரம்பரியங்களை இழிவு படுத்தி அவற்றைப் பெரும்பான்மையின அடையாளங்களுக்கு உரியதாக்குவது

★ வடக்கு, கிழக்கில் பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளை தனது படைகளைக் கொண்டு தடுப்பது

★ சிறுபான்மை இனங்களை ஒடுக்குவதற்கான ஓர் ஆயுதமாக பெண்கள் மீதான வன்முறைகளை மேற்கொள்வது -

போன்றவை அண்மைக் காலமாக - போர் முடிந்த இவ்வேளையில் - நடந்தேறி வருகின்றன.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், இனநல்லிணக்கத்துக்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருவதாக சர்வதேச சமூகத்துக்கு, அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் ஒருவர் பொய் கூறுவது மேலும் தமிழர்களைப் புறந்தள்ளி வீழ்த்துவதற்கான முகவுரை என்பதில் சந்தேகமில்லை.

இவ்வேளையில், அனைத்துலக ஜனநாயக நாளாக (International Democracy Day) இன்றைய தினம் - செப்ரெம்பர் 15ஆம் நாள் - சர்வதேச ரீதியில் பிரகடனப் படுத்தப்பட்டிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

அமெரிக்காவின் சரித்திர புருஷர் ஏபிரகாம் லிங்கன் தமது ''ஹெட்டிங் பேர்'' உரையில் -

''ஜனநாயகம் உண்மையிலேயே வெற்றிபெறுவதற்கு, மக்களின் அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்டு, அது மக்களுக்காக ஆட்சி புரியவேண்டும்'' என்றார்.

அந்தச் சமன்பாட்டோடு நோக்கினால் -

இலங்கையில் சிங்கள மக்களின் அரசாங்கம், சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்டு, சிங்கள மக்களுக்காகவே ஆட்சி நடத்தும் தன்மை வெளிச்சமாகத் தெரிகிறது என்றால் தப்பில்லை.

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சரித்திர ஆசிரியரும் அரசியல்[illegible] அலெக்சிஸ் டி' ரொக்கிவில்லி (Alexis de Tocqeville) ''ஜனநாயகம் என்பது பெரும் பான்மையினரின் கொடுங்கோன்மை'' என்று கூறியது, இலங்கையின் ஆட்சி வடிவத்துக்கு பொருந்துவதாகவே உள்ளதாகக் கொள்ளலாம் அல்லவா?

# தரம் 8 மாணவருக்கு புலமைப் பரீட்சை அடுத்த ஆண்டு அமுலுக்கு வருகிறது

கொழும்பு, செப்.15

அடுத்த ஆண்டு முதற்கொண்டு தரம் 8 இல் பயிலும் மாணவர்களுக்கு ஒரு புதிய புலமைப்பரிசில் பரீட்சை அறிமுகப்படுத்தப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு முதல் அறிமுகப் படுத்தப்படவிருக்கும் கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து ஊடகங்களுக்கு விளக்கமளித்த அமைச்சர் இந்த ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன் சாட்சியமளித்துள்ள அறிஞர்கள், கல்விமான்கள், பிரமுகர்கள், சமயத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியவர்களில் பெரும் பகுதியினர் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையானது மாணவர்களின் அந்த வயதில் பெரும் பாரமாகவே இருக்கிறதென கருத்து தெரிவித்திருக்கிறார்கள் என்று அமைச்சர் கூறினார்.

தரம் 8 இல் புலமைப்பரிசில் பரீட்சையொன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாணவர்களின் பாரத்தைக் குறைக்க விரும்புகின்றோம். அத்துடன் அவர்கள் தமது திறமையை வெளிப்படுத்துவதற்கான இரண்டாவது சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்படுவதாகவும் இது இருக் ம் என்றார் அவர்.

தரம் 5 புலமைப்பரிசில் போன்ற மிகவும் ஆழமான போட்டிப் பரீட்சையொன்றை நடத்துகின்ற நாடு இலங்கையாகத்தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன் என்று கூறிய அமைச்சர் மாணவர்கள் பெரும் சவால்களை எதிர்நோக்கும் நிலைக்குத்தள்ளப்படுகின்றார்கள். ஆனால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை நாம் முற்றுமுழுதாக ஒழித்துவிடப் போவதில்லை. ஆனால் மாணவர்களின் பாரத்தைக் குறைக்கும் வகையில் தரம் 8 புலமைப்பரிசில் ஒன்றை அறிமுகப் படுத்த விருக்கிறோம்- என்றார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையானது புதிய திட்டம் புகுத்தப்பட்டதன் பின்னர் மாணவரின் திறமையை மதிப்பீடு செய்வதாகக் கருதப்படும்.

புதிய கல்வி சீரமைப்புகள் தொடர்பான வழிகாட்டி நூல் ஒன்றை மாணவர்கள், ஆசிரியர்களுக்காகக் கல்வித் திணைக்களம் தயாரித்து வருகிறது என்றும் அவர் கூறினார். (ப)

# இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் சாவகச்சேரி நீதிமன்றக் கிளை நாளை திறப்பு

தென்மராட்சி, செப்.15

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் சாவகச்சேரி நீதிமன்றக் கிளை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

மாவட்ட நீதிவான் மா. கணேசராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும், இலங்கை நீதிபதிகள் பயிற்சிக்கூட முன்னாள் பணிப்பாளரும் சட்ட உதவி ஆணைக் குழுவின் ஆலோசகருமான என்.கே. உடலகம முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கிளை அலுவலகத்தைத் திறந்து வைப்பார்.

இந்த் நிகழ்வில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மற்றும் யாழ்ப்பாணம், மல்லாகம், கிளிநொச்சி, பருத்தித்துறை ஆகிய மாவட்ட நீதிபதிகளும் கலந்துகொள்வர்.

ஆணைக்குழுவின் பருத்தித்துறை கிளையும் நாளை திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(ஒ-207)

# யாழ். மாவட்டத்தில் 30 வருடங்களின் பின் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 15

குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தால் 10 வருடங்களுக்கு ஒருமுறை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் கணக்கெடுப்புப் பணிகள் 30 வருடங்களின் பின்னர் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றது. இதன் இறுதிக்கட்டப் பணிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட செயலக புள்ளிவிவரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

1981 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த வருடமே குடிசன மதிப்பீட்டுப் பணிகள் வடக்கில் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தக் கணக்கெடுப்புகள் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் முதலிரண்டு கட்டப் பணிகள் யாழ். மாவட்டத்தில் பூர்த்தியடைந்துள்ளன. மூன்றாம் மற்றும் இறுதிக்கட்டப் பணிகளே எதிர் வரும் நவம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இறுதிக்கட்டக் கணக்கெடுப்பு பணிகளின் போது வீட்டிலுள்ள குடும்பத்தவர்களின் விவரங்கள் என்பன பதியப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(ம-15)

## மாணவனுக்கு சம்ஸ்கிருதியின் முக்கியத்துவம்

கலாசாலைக் கல்வியுடன் மாணவர்கள் அடக்கமுடைமை, பிரித்தறிதல் ஆகிய இயல்புகளைப் பெற்றிருத்தல்வேண்டும். இவை அவர்களை ஒரு முழுமைமிக்க ஆளுமையுடையவராக வர உதவும். ஒரு விதை, காய்த்துக்குலுங்கும் மரமாகியிருத்தலில் நிறைவு பெறுவதுபோல், ஒரு மாணவனும் இந்த சம்ஸ்காரங்களினூடாக முழுமை நிலையை அடையமுடியும். திருப்தியைப்பெறமுடியும். இந்த சம்ஸ்காரங்கள் - மாற்றங்கள் - அமைதி, பாதுகாப்பு, அன்பு எனும் பயன்களை ஈனும்.

மனிதனிலுள்ள தெய்வீக இயல்புதான் அன்பு. அதனை ஏனைய மனித ஜீவன்கள் மீதும் மட்டுமல்ல, பறவைகள் மற்றும் வாழும் பிராணிகளின் மேலும் செலுத்த வேண்டும்.

குறுகிய மனப்பான்மையை நீக்கிப் பரந்த மனப்பான்மையை விருத்தி செய்யு மிடத்தில்தான் மனிதனில் உண்மையான சம்ஸ்கிருதி அமைந்திருக்கிறது. இது ஒருவரிடத்து தனி மகிழ்ச்சியையும், சமூகத்துக்கும் அத்தகைய விளைவினை அளிக்கின்றது.



இவ்விதம் மனித இயல்பானது தெய் வீகமாகச் சுத்தப் படுத்தப்படுகின்றது.

(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.தென்மேற்குப் பிரதேச சபையை நகர சபையாகத் தரமுயர்த்தத் திட்டம்

## இது குறித்த தீர்மானம் ஆளுநருக்கு

சண்டிலிப்பாய், செப்.15

வலி.தென்மேற்குப் பிரதேச சபை நகர சபையாகத் தரமுயர்த்தப்படவுள்ளது. இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமானதாக நிறைவேற்றப்பட்டு வடமாகாண ஆளுநர், உள்ளூராட்சி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச சபையை நகர சபையாகத் தரமுயர்த்த வேண்டிய தேவைகுறித்து ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கருத்து வேறுபாடின்றி எடுத்து விளக்கியதைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேற்படி சபையைத் தரமுயர்த்த வேண்டிய அவசியம் குறித்து தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீர்வளம், நிலவளம் உட்பட சகல வளங்களும் உள்ளடக்கிய இந்தப் பிரதேசம 55.238 சதுரக் கிலோமீற்றர் சுற்றளவைக் கொண்டுள்ளது.

இயற்கையாகவே விவசாயப் பூமியாக இருப்பதுடன், மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யக் கூடிய வகையிலும், மீனவர்களின் வருமானத்தை அதிகரிக்கக் கூடிய வகையில் கடல் வளமும் அமைந்திருக்கின்றது.

மானிப்பாய்ப் பட்டணம், மாணிப்பாய் கிராமம், பண்டத்தரிப்புப் பட்டணம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்ட இந்தப் பிரதேசம் 28 கிராம உத்தியோகத்தர் பிரிவை உள்ளடக்கியதால் மானிப்பாய் பட்டணத்தையும் மானிப்பாய் கிராமத்தையும் இணைத்து நகர சபையாகவும் பண்டத்தரிப்புப் பட்டிணத்தையும், கிராமத்தையும் இணைத்து பிரதேச சபையாகவும் தரமுயர்த்துமாறு 2005 ஆம் ஆண்டும் 2008 ஆம் அண்டும் பொது மக்களால் தீர்மானிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்த சூழ்நிலை காரணமாகப் பொது மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் காலம் கடத்தப்பட்டு வந்தது.

தற்பொழுது நாட்டில் சமாதானம் ஏற்பட்டுள்ளதுடன் சிவில் நிர்வாகமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் மக்களின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு பிரதேச சபையை நகர சபையாகத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கையை விரைவாகச் செயற்படுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றோம். - என்று அதில் உள்ளது. (ம-115)

# கல்லுண்டாயில் கொட்டப்படும் கழிவுகளால் குப்பை மேடாகும் விவசாய நிலங்கள்

சண்டிலிப்பாய், செப்.15

கல்லுண்டாய்ப் பிரதேசத்தில் பொறுப்பற்ற முறையில் கொட்டப்படும் திண்மக் கழிவுகளால் நவாலி கொத்துக்கட்டி விவசாய நிலங்கள் குப்பை மேடாக மாறி வருகின்றன.

இதனால் காலபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பெரும் சிரமங்களை அனுபவிப்பதுடன் பண விரயத்தையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இது குறித்து கவலையும் விசனமும் தெரிவித்துள்ள விவசாயிகள் விவசாய நிலங்களைப் பாதிக்காத வகையில் திண்மக் கழிவுகளைக் கொட்டுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.


யாழ்.மாவட்டத்தில் உள்ள சில உள்ளூராட்சிச் சபைகள் அங்கு சேகரிக்கும் திண்மக் கழிவுகளை வாகனத்தில் ஏற்றி வந்து கல்லுண்டாய் வீதியில் கொட்டி வருகின்றது.

பரந்துபட்ட வெளியான நிலப்பரப்பில் கொட்டப்படும் திண்மக் கழிவுகளில் ஒரு பகுதி நவாலி கொத்துக்கட்டி வீதியிலுள்ள வயல் நிலங்களில் சேருவதால் காலபோக நெற் செய்கைக்கு உட்படுத்தப்படும் வயல் நிலங்கள் குப்பை மேடாக மாறி வருகின்றது. இதனால் விவசாயிகள் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இதேவேளை திண்மக் கழிவுகளுடன் எடுத்து வரப்படும் கால்நடைகளின் எச்சங்கள் மற்றும் பொருள்களால் இந்தப் பிரதேசத்துக்கு அண்மையில் வசிக்கும் பொதுமக்கள் சுகாதார சீர்கேடுகளுக்கு உள்ளாகின்றார்கள்.

எனவே வயல்நிலங்களையும், அருகில் வசிக்கும் மக்களையும் பாதிக்காத வண்ணம் திண்மக் கழிவு களைக் கொட்டுமாறு சம்பந்தப்பட்டவர்களைப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரியுள்ளனர். (ம-115)

## அப்படி ஒன்றும் பளு இல்லை...



சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள வேம்படி அம்மன் ஆலய பூசகர் 100 கிலோவுக்கு மேல் நிறையுள்ள கல்லைத் தலையில் தூக்கி வைத்து நிற்கும் காட்சி. (207)

# வீடுகளில் குப்பைகளை அகற்ற யாழ். மாநகர சபை நடவடிக்கை

## கட்டணம் அறவிடவும் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.மாநகரசபைப் பகுதியில் வீடுகளில் தேக்கிவைக்கும் குப்பைகளை உழவு இயந்திரத்தின் மூலம் எடுத்துச் செல்ல மாநகர சபை நடவடிகை எடுத்துள்ளது.

ஒரு டிரக்டர் குப்பைகளை எடுத்துச் செல்ல எரிபொருள் செலவுடன் 500 ரூபா கட்டணமாக அறவிடப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

வாழைத்தண்டு போன்ற கழிவுப் பொருள்களை வீடுகளில் சேர்த்து வைத்து மாநகர சபை வாகனங்கள் வரும் நாள்களில் அதனை அகற்ற முடியும்.

வாகனங்கள் வரும் நாள்கள், பகுதிகள் என்பன பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் எனவும் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார். (ம-7)

# டெங்கு ஒழிப்பு செயற்பாடு தீவுப்பகுதிகளில் தீவிரம்

யாழ்ப்பாணம், செப்.15

தீவுப்பகுதிகளில் டெங்குக் கட்டுப்பாடு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

நுளம்புப் பெருக்கமுள்ள இடங்களில் புகையூட்டல் இடம் பெறுவதுடன் மருந்துக்கள் விசிறும் நடவடிக்கைகளும் இடம் பெறுகின்றன. தீவுப் பகுதியின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படும் பற்றைகளை வெட்டும் நடவடிக்கைகளும் பொது மக்களால் நடமுறைப்படுத்தப்படு கின்றது.

தீவுப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் டெங்கு குறித்த விழிப்புணர்வுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# யாழ். நகரில் கலட்டிப் பகுதியில் 3 வீடுகளில் திருடர்கள் கைவரிசை

வண்ணை, செப்.15

யாழ். நகரில் கலட்டி அம்மன் கோயிலடி, அருகிலுள்ள சீனியர் ஒழுங்கைப் பகுதிகளில் பட்டப்பகல் வேளையில் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கும் 11.30 மணிக் கும் இடைப்பட்ட நேரத்தில் 3 வீடுகளில் திருடர்கள் வீட்டுக் கூரைகளைப் பிரித்து உள்ளே 'சீலிங்' கை உடைத்துக் கொண்டு உட்பிரவேசித்துள்ளனர்.

மழை பெய்து கொண்டிருந்த நேரத்தைச்சாதகமாக்கிக் கொண்டு, திருடர்கள் வீடுகளில் புகுந்துள்ளனர். வீட்டார் தொழில்கள் நிமித்தம் சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே திருடர்கள் தமது கெட்டித்தனத்தைக் காட்டியுள்ளனர்.

அவர்களின் இலக்கு ரிவி, டிவி.டி பிளேயர், கம்பியூட்டர் மற்றும் வானொலி போன்றவையாக இருக்கவில்லை. பணம் மற்றும் நகைகளை அபகரித்துச் செல்வதே வீடு புகுந்தவர்களின் குறியாக இருந்துள்ளது.

திருடர்கள் மூன்று வீடுகளிலும் அலுமாரிகள், உடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொதிகள் மற்றும் பெட்டிகள், படுக்கைகள் எல்லாவற்றையும் கிண்டிக் கிளறி தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். அதனால் அந்த வீடுகளில் எல்லா அறைகளும் அலங்கோலமாகக் காட்சியளித்தன.

இந்த வீடுகளில் ஒன்றில் ஒரு தொகைப் பணமும் நகை ஒன்றும் அபகரிக்கப்பட்டுள்ளன. மற்றைய இரு வீடுகளிலும் தேடுதல் வேட்டை நடந்துள்ள போதிலும் பணம் திருட்டுப் போகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

விரிவுரையாளர், ஆசிரியர், வர்த்தகர் ஆகியோரின் வீடுகளிலேயே திருட்டு ஆசாமிகள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். இந்தத் திருட்டு குறித்து யாழ். பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ-160)

# குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.கொய்யாத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த சந்தேக நபர் குற்றம் செய்தமைக்கான போதிய ஆதா ரம் இன்மையால் யாழ். மேல் நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

குருநகரைச் சேர்ந்த டேவிட் அந்தோனிப்பிள்ளை என்பவருக்கு எதிராகவே இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

இதனால் 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இவர் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றால் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இவர் மீதான சாட்சியங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதால் சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2007 ஆம் ஆண்டு யாழ். மேல்நீதிமன்றில் இந்த வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

அது தொடர்பான வழக்கு யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா முல்லையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது சந்தேக நபர் குற்றஞ் செய்ததற்கான போதிய ஆதாரம் இல்லாததால் இந்த நபரை விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-4)

* * *

யாழ்ப்பாணம்,15

ஏழாலையைச்சேர்ந்தநபர் ஒருவரை பொல்லால் அடித்துக் கொலை செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டில் 2004 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நபர் யாழ். நீதிமன்றால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தவராஜா பாலகிருஸ்ணன் என்பவருக்கு எதிராகவே இந்தக் குற்றச் சாட்டு சுமத்தப்பட்டிருந்தது. எனினும் அந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததனால் அவர் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அந்த நபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

எனினும் இந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தரவுக்கமைய 2007 ஆம் ஆண்டு யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

இது வரை காலமும் நிலுவையில் இருந்து வந்த இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரரினால் எதிராளியின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க போதிய ஆதாரமும் இல்லை என்று கூறப்பட்டது.

இந்த நிலையில் குறித்த சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

# அம்புலன்ஸ் ஒன்று மட்டுமே சேவையில் இதனால் பெரும் நெருக்கடி நிலை

தென்மராட்சி, செப்.15

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் ஓர் அம்புலன்ஸ் மட்டுமே சேவையில் உள்ளது. இதனால் அது யாழ்ப்பாணம் சென்ற பின்னர் வரும் அவசர நோயாளர்களைத் தனியார் வாகனங்களில் பணம் செலுத்தி யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் அவல நிலை உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு, தென்மராட்சி பிரதேச மக்களுடன் கொடிகாமம், பளை, மருதங்கேணி, பூநகரி, வேரவில், முழங்காவில் போன்ற பிரதேச வைத்தியசாலைகளிலிருந்தும் அம்புலன்ஸ் மூலம் நோயாளர்கள் அழைத்து வரப்படுகின்றனர்.

இவர்களில் அவசர நோயாளர்கள் அவசர சிகிச்சையின் பின்னர் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

மாதாந்தம் சராசரியாக 150 இற்கு மேற்பட்ட தடவைகள் சாவகச்சேரி வைத்தியசாலை அம்புலன்ஸ் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களை ஏற்றி இறக்கும் பணிகளில் ஈடுபடுகின்றது.

இந்த நிலையில் கடந்த மாதம் சாவகச்சேரி வைத்திய சாலையிலிருந்து இரு அம்புலன்ஸில் ஒன்று சுகாதார திணைக்களத்தின் திடீர் அறிவிப்பையடுத்து அதன் சாரதியுடன் நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

தற்போதுள்ள ஒரு அம்புலன்ஸ் 24 மணி நேரமும் நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஏற்றி இறக்கி வருகின்றது. இந்த அம்புலன்ஸ் யாழ்ப்பாணம் சென்ற பின்னர் ஏனைய பிரதேச வைத்திய சாலைகளிலிருந்து கொண்டு வரப்படும் அவசர நோயாளர்கள் யாழ்ப்பாணம் சென்ற அம்புலன்ஸ் வரும்வரை காத்திருக்க முடியாத நிலை உள்ளது. இதனால் நோயாளர்களே அதிகளவு பணம் கொடுத்து தனியார் வாகனங்களில் கொண்டு செல்லவேண்டியுள்ளதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு அம்புலன்ஸ் 24 மணி நேரமும் சேவையில் ஈடுபடுவதால் சாரதி ஓய்வின்றியும் விடுமுறையின்றியும் கடமையாற்ற வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

## சமாதான வாரம் இன்று ஆரம்பம்

வண்ணை, செப். 15

சர்வதேச சமாதான வாரம் இன்று தொடக்கம் ஒரு வார காலத்துக்க அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு யாழ். சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துகக்குமான பணியகம் இன்று வியாழக்கிழமை பளை மத்திய கல்லூரியில் கவிதைப் போட்டியை நடத்தவுள்ளது.

சமாதானமும் நல்லிணக்கமும் என்ற கருப்பொருளில் இந்த ஆண்டுக்கான போட்டிகள் மற்றும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் பளை மத்திய கல்லூரியுடன் இயக்கச்சி ஜி.ரி.எம்.எஸ்., மாசார் ஜி.ரி.எம்.எஸ் மற்றும் கோவில் வயல் சி.சி.ரி.எம்.எஸ், மகாவில் சி.சி.ரி எம்.எஸ், பளை ஆர்.சி.ரி.எம்.எஸ், சோரன்பற்று சி.சி.ரி.எம். எஸ், சோரன்பற்று ஞானோசா வித்தியாலயம், தர்மக்கேணி ஜி.ரி.எம்.எஸ். ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-160)

## சுன்னாகம் பொது நூலகத்துக்கு கட்டடம் அமைப்பது குறித்து ஆராய்வு

சுன்னாகம், செப்.15


சுன்னாகம் பொது நூலகத்துக்குப் புதிய கட்டடம் அமைப்பது குறித்து நூலக அபிவிருத்திக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபைச் செயலர் தி.பிரகாஷ் தலைமையில் கடந்த சனிக்கிழமை நூலக அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இடம் பெற்றது.

பிரதேச சபை உறுப்பினர்கள், நூலக ஆலோசனைக் குழு, வாசகர் வட்ட அங்கத்தவர்கள் உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நூலகத்துக்குப் புதிய கட்டடம் அமைப்பது, அனுமதிக்கப்பட்ட ஆளணியை நியமிப்பது, பிரதேச வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்வது போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. (ம-38)

### கல்விக்கு ஒளியூட்டுவோம்...



சம்பிரதாயம்: சிறுவர் உரிமைக்களுக்கான பரிந்துரைத்தல் வலையமைப்பு எனும் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். கலைத்தூது கலையரங்கத்தில் இடம்பெற்ற எழுத்தறிவு தின நிகழ்வில் சிறுவர் பாது காப்பு அதிகார சபையை சேர்ந்த எஸ். ராதை மங்கள விளக்கேற்றுகிறார்.(ம-319)

## சர்வதேச எழுத்தறிவு தினம்

யாழ்ப்பாணம், செப்.15

சிறுவர் உரிமைகளுக்கான பரிந்துரைத்தல் வலையமைப்பு எனும் அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு எழுத்தறிவு தின நிகழ்வு நேற்று நண்பகல் 12.30 மணிக்கு யாழ்.பிரதான வீதியில் உள்ள கலைத்தூது கலையகத்தில் சிறுவர் உரிமைகளுக்கான பரிந்துரைத்தல் வலையமைப்பின் தலைவர் ரி.யசோதரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக யாழ்.வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.இராஜலிங்கமும் சிறப்பு விருந்தினராக லீட்ஸ் நிறுவன இயக்குநர் குட்விட்றலீனும் கலந்து கொண்டனர்.

மங்கள விளக்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையைச் சேர்ந்த செல்வி ராதை ஏற்றினார். தொடர்ந்து சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர் ஆகியோர் ஏற்றினர்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையைச் சேர்ந்த ராதை, யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜலிங்கம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி பி.கஜவதனி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ரி.காயத்திரி ஆகியோரின் நடனமும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வெளிச்சம்-நாடகம் இடம் பெற்றன. (ம-319)

## நல்லூர் உதவி பூசகரை 5 நாள்களாகக் காணோம்

யாழ்ப்பாணம், செப்.15

நல்லூர் கந்தசாமி கோயிலில் உதவிப் பூசகராகப் பணியாற்றும் கல்வியங்காட்டைச் சேர்ந்த 26 வயது இளைஞர் ஒருவர் கடந்த 9 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் என்று கோப்பாய் பொலிஸில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வியங்காடு, இலங்கைநாயகி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த புனேந்திரசர்மா, சத்திதரசர்மா என்ற இளைஞரே காணாமல் போயுள்ளார். இந்த மாதம் 9 ஆம் திகதி பி.ப 3.45 மணியளவில் வீட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்வதாகக் கூறிவிட்டு சென்றுள்ளார். அதன் பின்பு நேற்றுவரை அவர் வீடு திரும்பவில்லை என்று அவரது உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

இவர் கடைசியாக வீட்டை விட்டு வெளியேறும் போது பிறவுண் நிற அரைகை சேர்ட்டும், கறுப்பு நிற முக்கால் காற்சட்டையும் அணிந்திருந்தார் என்று பொலிஸார் கூறினர்.

இவரை யாராவது கண்டாலோ அல்லது இவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தாலோ தமக்கு அறிவிக்குமாறு கோப்பாய் பொலிஸார் கேட்டுள்ளனர். (உ-15)

## மண்டைதீவில் நெல் உற்பத்தி இம்முறை அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், செப்.15

மண்டைதீவில் நெல் உற்பத்தி நடவடிக்கைகள் இந்தமுறை கூடுதலான அளவில் இடம்பெறும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

நெற்செய்கை மேற்கொள்ளவென சுமார் 118 விவசாயிகள் விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக் களத்தின் முன் அனுமதியைப் பெற்றுள்ளனர். இதற்கு முன்னர் மிகவும் குறைந்த நிலப்பரப்பிலேயே மண்டைதீவில் நெற்செய்கை இடம்பெற்றது.

மீள்குடியமர்வின் பின் இந்த ஆண்டில் சுமார் நூறு ஏக்கர் நிலத்தில் நெற்செய்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

ஓர் ஏக்கரும் அதற்குக் குறைவான நிலப்பரப்பிலும் உற்பத்தியை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு விதை நெல், இரசாயன உரங்கள், கிருமி நாசினி, அறுவடைக்கான இயந்திர உதவிகள் வழங்கப்படும் எனவும் கூறப்படு கின்றது. (ம-7)

# பாதுகாப்பான கழிவகற்றல் முறை டெங்கு பரம்பலைக் கட்டுப்படுத்தும்

### டெங்கு கட்டுப்பாட்டுக் கூட்டத்தில் கருத்து

யாழ்ப்பாணம், செப்.15

மக்களது பங்களிப்புடன் கூடிய பாதுகாப்பான கழிவகற்றல் முகாமைத்துவமே டெங்கு நோய்க்கட்டுப்பாட்டில் நிலைத்திருக்கக்கூடிய பயனுள்ள விளை வைத்தரும். டெங்கு நோய்க் கட்டுப்பாடு தொடர்பில் பல்வேறு தளங்களில் ஆராயப்பட்ட போது தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புகையூட்டல் தற்காலிகமான பாதுகாப்பை மட்டுமே வழங்கும்.

புகையூட்டல் சுற்றாடலை மாசுப்படுத்துவதுடன் காலப்போக்கில் எதிர்மறையான சுகாதாரப் பிரச்சினைகளையும் ஏற்படுத்தக்கூடியது.

டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் ஒன்று யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போதே இக்கருத்து முன்வைக்கப்பட்டது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:

சில உள்ளூராட்சி சபைகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஒத்துழைப்புடன் நாட்டின்பல பாகங்களிலும் பாதுகாப்பான கழிவகற்றல் முகாமைத்துவ வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இரும்புக் கழிவுகள் சேகரிக்கப்படுவதைப் போல் ஏனைய பிளாஸ்ரிக், பொலித்தீன் மற்றும் [illegible] மீள்பயன் பாட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

தற்போது மேற்கொள்ளப்பட்ட நுளம்புகள் பெருகுமிடங்கள் தொடர்பான ஆய்வுகளில் சராசரியாக ஒவ்வொரு வீடுகளிலும் நுளம்புகள் பெருகக்கூடிய பத்துக்கு மேற்பட்ட இடங்கள் இனங்காணப்பட்டன. முக்கியமாக இவற்றில் சிரட்டை, பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் அலுமினியப் பாத்திரங்கள் போன்றவையே அதிகமாக காணப்படுகின்றன.

பிரதேச சபைகள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து மக்கள் பங்களிப்புடன்கழிவகற்றல் வேலைத் திட்டம் ஒன்றை செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கான வழிகாட் டல் மற்றும் ஆலோசனைகளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் உள்ளூராட்சி உதவியாளர் பணிமனை என்பன வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம்

# கனடாவின் நடவடிக்கைக்கு அந்நாட்டு தமிழர் தேசிய அவை உறுதுணை புரியும்

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான கனேடியப் பிரதமரின் நிலைப்பாட்டுக்கு கனேடியத் தமிழர் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதுடன் இந்த விவகாரத்தில் கனேடிய அரசுக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் என்று கனடியத் தமிழர் தேசிய அவை உறுதியளித்துள்ளது.

இதுதொடர்பாக மேற்படி தமிழர் தேசிய அவை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு நிகழ்வின்போது கனேடியப் பல்கலாசார வானொலிக்கு கனேடியப் பிரதமர் இலங்கை விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணை அவசியம் என்றும் இலங்கையில் ஜனநாயக உரிமைகள் மதிக்கப்பட்டு நம்பகத்தன்மை ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் கனேடியப் பிரதமர் ஸ்டீபன் கார்பர் தெரிவித்துள்ள கருத்தை வரவேற்று கனேடியத் தமிழர் தேசிய அவை சார்பில் நன்றி தெரிவிக்கின்றது.

மேலும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்ற ஐக்கிய நாடுகள் சபையின் கோரிக்கைக்கும் கனடா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று தெரிவித்துள்ளதுடன்,

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் கனடா கலந்துகொள்ளப் போவதில்லையென்றும் ஏனைய பொது நலவாய நாடுகளும் இவ்வாறான நிலைப்பாட்டையே மேற்கொள்வார்களென்று தான் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் கனேடியத் தமிழர் தேசிய அவை புதிய ஜனநாயகக் கட்சியுடனும் லிபரல் கட்சியுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டு இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்ற மீறல், மனிதவுரிமை மீறல் அரசியலுரிமை மீறல், போன்றவற்றுக்குத் தகுந்த ஆதாரங்களை வழங்கி மேற்கொண்ட பல சந்திப்புக்களின் பயனாகப் புதிய ஜனநாயகக் கட்சியும் லிபரல் கட்சியும் ஆதரவாக அறிக்கையை வெளியிட்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதன் தொடர்ச்சியாகவே கனேடிய அரசியல் கட்சிகள் இவ்வாறான நிலைப்பாட்டை எடுத்துள்ளன என்பது யாவரும் அறிந்ததே.

தொடர்ந்து கனேடியத் தமிழர் தேசிய அவை கனேடிய அனைத்துக் கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் மனிதவுரிமை அமைப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டு கனேடிய நாடாளுமன்றத்தினூடாக இலங்கை மீது சர்வதேசக் குற்றவியல் நீதி விசாரணை மேற்கொள்வதற்கான ஆணையைப் பிறப்பிப்பதற்கான முயற்சியைமேற்கொண்டு வருகின்றது.

தொடர்ந்து கனேடியத் தமிழர் தேசிய அவை காத்திரமான இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறது. (வ)

### ஜேர்மனி, சுவிஸின் பிரதித் தூதரான

# மேஜர் ஜெனரல் டயஸை நாட்டுக்கு திருப்பி அழைக்கிறது இலங்கை அரசு

### மனித உரிமை மீறல், போர்க்குற்றச்சாட்டு காரணமா?

மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுகளை அடுத்து சுவிற்ஸர்லாந்து, ஜேர்மனி, வத்திக்கான் ஆகிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதித் தூதர் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், இலங்கை அரசினால் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார் என்று சுவிஸ் செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் 57ஆவது பிரிவின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், பொதுமக்கள் மீதும், மருத்துவமனைகள் மீதும் தாக்குதல் நடத்துமாறு உத்தரவிட்டிருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

அத்துடன் இவர் போராளிகள் மீதான சித்திரவதை, நீதிக்குப் புறம்பான படுகொலைகளிலும் தொடர்பு பட்டிருந்ததாக, அரசியலமைப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நிலையத்தின் அறிக்கை ஒன்றிலும் குற்றம் சாட் டப்பட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக சுவிற்ஸர்லாந்து வெளிவிவகார அமைச்சு இலங்கை அதிகாரிகளுடன் கடந்த மாதம் தொடர்பு கொண்டு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்திருந்தது.

இந்த நிலையிலேயே மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் இலங்கை அரசால் பெர்லினில் இருந்து திருப்பி அழைக்கப்பட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்ததாக சுவிஸ் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

இதேவேளை, மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் திருப்பி அழைக்கப்பட்டுள்ளதாக சுவிஸ் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலை இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் நிராகரித்துள்ளதாக ஏசியன் ரிபியூன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டு வினவிய போதே இந்தச் செய்தி பொய்யானது என்று அவர் கூறியதாக மேற்படி இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

ராஜதந்திர சேவையில் இல்லாத ராஜதந்திரிகளுக்கு இரண்டு ஆண்டுகளே வெளிநாடுகளில் சேவையாற்ற வாய்ப்பளிக்கப்படும் என்றும்,

மேஜர் ஜெனரல் ஜெகத் டயசின் இரண்டு ஆண்டு பதவிக்காலம் இந்த மாதத் துடன் நிறைவடைந்த பின்னர் ராணுவ சேவையில் இணைந்து கொள்வார் என்றும் அந்த இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

ராஜதந்திர சேவையில் இல்லாத ராஜதந்திரிகள் இரண்டு ஆண்டுகளின் பின்னர் மேலும் ஒரு ஆண்டு இலங்கை ஜனாதிபதியின் ஆணையில் சேவை நீடிப்பைப் பெறமுடியும். ஆனால் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுகளால், மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் நெருக்கடிகளை எதிர்கொள்ளலாம் என்பதாலேயே அவருக்கு இலங்கை ஜனாதிபதி சேவை நீடிப்பு வழங்கவில்லை என்றும் ராணுவ சேவைக்கு அவரைத் திருப்பியழைக்க முடிவு செய்யப்பட்டதாகவும் இலங்கை அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (வ)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

திருநிறை வேலாயுதம் சிவகுமாரன் B.Sc., Dip. in Ed.
உதவிக் கல்விப் பணிப்பாளர்
(கணிதம்)
வலிகாமம் கல்வி வலயம்



ஆசிரியப் பணிதனை ஆர்வமுடன் ஆற்றி
ஆசிரிய ஆலோசகர் பதவிதனைப் பெற்று
அர்ப்பணிப்பு சேவையாற்றி
அகமகிழ்ந்து வாழ்ந்தீர்
வலிகாமம் வலயத்தில் கணிதமது
கற்கண்டென
சலிக்காது மாணவர் கற்கும் நிலைகண்டு
மகிழ்ச்சி கொண்டு
உயர்த்தி விட்டார் உம் பதவியினை
உதவிக் கல்விப் பணிப்பாளராக
சேவையால் புகழ் என்றும் நிலைத்து வாழ
வாழ்த்துகின்றோம் வாழிய நீடு வாழி!
வாழி!

கணித ஆசிரியர்
சங்கானைக் கோட்டம்.

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதுக்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெறவேண்டுகின்றேன்.

*ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி.*

அடியாள்.

## காணி விற்பனைக்கு

பாண்டியன் தாழ்வு, கணக்கர் சந்திக்கு அருகில் புங்கங்குளம் வீதியில் 2 பரப்பும், 12 குளியும் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0773273125,0771023585

## முக்கிய அறிவித்தல்

காரைநகர், மடத்துக்கரை முத்துமாரி அம்பாள் ஆலய அம்பிகை அடியார்களுக்கு ஆலய பரிபாலன சபையினர் தெரிவிப்பது, ஆலயத்துக்கு பணம், பொருள் கொடுக்க விரும்புகின்றவர்கள் ஆலய பரிபாலனசபை தலைவர், செயலாளர், பொருளாளரிடம் கொடுத்துப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

இந்த ஆலயத்துக்குச் சட்டப்படியான ஒரு பரிபாலன சபை உள்ளது என்பதை அம்பிகை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

காரைநகர், மடத்துக்கரை முத்துமாரி
அம்பாள் ஆலய பரிபாலன சபையினர்-1021




மெகா இலவச புலமைப் பரிசில் பரீட்சை கடந்த 11 ஆண்டுகளாக (Sept. 2000 ஆண்டு முதல்) ஏசியன் கொம்ப்யூட்டர்ஸால் அறிமுகப் படுத்தப்பட்டு நடாத்தப்படுகிறது. இவ்வாண்டும் தகவல் தொழில்நுட்பம், கிராபிக்ஸ் அனிமேஷன், மல்டிமீடியா, இணைய வடிவமைப்பு, டலி கணக்கியல், ஹார்ட்வேயார் மற்றும் ஆங்கில பேச்சுப்பயிற்சிகளுக்கான புதிய பாட நெறிகளுடன் இப்புலமைப்பரிசில் கணனி ஆர்வலர்கள் அனைவருக்கும் வழங்கப்படுகிறது.

இலவச அனுமதிகளுக்கு.. →

இலவச புலமைப்பரிசில்
- பரீட்சையை தமிழ் or ஆங்கிலத்தில் எழுதலாம்
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 50 நிமிடங்கள் மட்டுமே
- பாடசாலைப் பாடத்திட்டம் & பொது அறிவு வினாக்கள்
- இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை)
- தவணைமுறை கட்டண வசதி (Installment)
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்

செப்டெம்பர் 18 ஞாயிறு

ASIAN COMPUTERS

படிப்பின் முக்கியமான தருணங்களில் சிறந்ததை தெரிவு செய்யுங்கள்!

ஸ்கொலர்ஷிப் மூலம் சேர்ந்து படிப்பது, படிப்பிற்கான உங்கள் பெற்றோர்களின் செலவைக் குறைப்பதாகும்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 2G ஸ்ரான்லி வீதி | கொடிகாமம் வீதி | 230-1ம் மாடி கண்டி வீதி |
| 021-2225677 | 021-2262399 | 021-2270267 |

காரைநகர், களபூமி, பொன்னாவளை,

## திருவருள்மிகு ஸ்ரீ இத்திப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்.



விநாயகர் அடியார்களே,

ஆவணி மாதம் 29 ஆம் நாள் 2011-09-15 வியாழக்கிழமை எண்ணெய்க்காப்பு

ஆவணிமாதம் 30 ஆம் நாள் 2011-09-16 வெள்ளிக்கிழமை காலை 6.38 மணிமுதல் 8.03 மணிவரையுள்ள சுபவேளையில் தூபி அபிஷேகம், மகாகும்பாபிஷேகம்.

பிரஷ்டாகுரு:
சத்தியோயாத சிவாச்சாரியார்
**சிவஸ்ரீ கு.சண்முகராஜ் குருக்கள்**
(பிரதமகுரு ஷகதேவஸ்தானம், பயிரிக்கூடல் முருகன் தேவஸ்தானம்)

ஆலய நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடப்பாடுகளை சரியாக நிறைவேற்றத் தவறினால் இலங்கை மீது சர்வதேச அழுத்தம் அதிகரிக்கும்

## ஜெனிவாவில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை

கொழும்பு, செப்.15

ஐக்கிய நாடுகளின் ம்னித உரிமை கூட்டத்தொடரின் போது இலங்கையின் உள்ளகக் கடப்பாடுகள் சரியாக நிறைவேற்றப்படாவிட்டால் அதன் மீதான சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்குமென்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 12ஆம் திகதி இலங்கைத் தூதுக்குழு ஏற்பாடு செய்திருந்த பிரத்தியேக நிகழ்வொன்றின்போது உரையாற்றிய அமெரிக்கத் தூதர் ஜலீன் செம்பர்லெய்ன் டொனாஹோ இலங்கை யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றங்கள், துஷ்பிரயோகங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகிய குற்றச்சாட்டுகளுக்கான சர்வதேச சுயாதீன விசாரணையை முன்னெடுப்பதை அமெரிக்கா முற்றாக ஆதரிக்கிறது.

அத்துடன் அதற்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்கும் எனவும், நடைபெற்ற எல்லா அத்துமீறல்களுக்கும் விளக்கம் தேவை என்றும் கூறினார்.

மனித உரிமைகளைப் பேண உள்நாட்டு கட்டமைப்பு தவறினால் சர்வதேச விசாரணைக்கு முகம் கொடுக்கவே வேண்டும். இலங்கை தனது கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் என்றும் நாம் நம்புகிறோம். அவ்வாறு செய்யத் தவறினால் சர்வதேச அழுத்தம் அதிகரிப்பதைத் தடுக்க முடியாது. அந்தக் குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணைகள் முடுக்கிவிடப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்ததாவது -

ஐரோப்பிய ஒன்றியம் வழக்கமான பாணியில் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களுடன் கலந்துரையாடல்களை நடத்த விரும்புகிறது.

ஐக்கிய நாடுகளின் குழு பரிந்துரை செய்துள்ள விடயங்களில் ஐரோப்பிய ஒன்றியம் தீவிர கவனத்தைச் செலுத்துவதுடன் குற்றச் சாட்டுகளுக்கு விளக்கம் கோருகிறது.

இந்த விடயத்தில் இலங்கை அரசு மேற்கொள்ளும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாம் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம்.

ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களில் ஐரோப்பிய ஒன்றியம் தீவிர கவனத்தைச் செலுத் தும் என்று அவர் கூறினார்.

நல்லிணக்க ஆணைக் குழுவை அமைப்பதில் ஐரோப்பிய ஒன்றியம் அக்கறை காட்டியதாகவும், அந்த அறிக்கை மீதான நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய உந்துதல் அளிப்பதாகவும் மனித உரிமைகள் ஆணைக் குழுவுடனான கலந்துரையாடல்களைப் பூர்த்தி செய்த பின் இயன்றளவு விரைவில் இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டும்

சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா ஆகிய அரசுகளின் பிரதிநிதிகள் இலங்கை அரசுக்கு ஆதரவாகப் பேசியதுடன் இலங்கை தனது பிரச்சினைகளை வெளியாரின் தலையீடுகள் இன்றி தானே தீர்த்துக் கொள்ளும் வல்லமை கொண்டது என்றார்.

# ஏழைகளின் வரிப் பணத்தை அள்ளி பணக்காரருக்கு செலவிடுகிறது அரசு

## தேர்தலில் கொழும்பு மக்கள் பாடம் புகட்டுவர்

கொழும்பு மாநகர சபையில் இருக்கும் ஏழை மக்களின் வரிப் பணத்தைக்கொண்டு செல்வந்தர்கள் உடற்பயிற்சி செய்வதற்காக அரசு கொழும்பு-07 இல் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது என்று ஐக்கிய தேசி யக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பு நகரில் கழிவுநீர் குழாய்களைச் சுத்தப்படுத்துவதற்குப் பணம் இல்லை என்று கூறிக்கொண்டு பணக்காரர்களின் தேவைகளுக்காக மக்களின் பணத்தை இவ்வாறு அள்ளி இறைக்கலாமா என்று அக்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய மேல்மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்ததாவது:

கொழும்பு மக்களிடம் வாக்குக் கேட்கும் தகுதி இந்த அரசிடம் இல்லை. கொழும்பு மக்களுக்கு இந்த அரசு எதுவித வசதிகளையும் செய்து கொடுக்கவில்லை. மாறாக இந்த மக்களின் வரிப்பணத்தை எடுத்து பணக்காரர்களின் தேவைகளுக்குத் தான் அரசு செலவு செய்தது.

கொழும்பில் கழிவுநீர் குழாய்களைச் சுத்தம் செய்யக்கூடிய கம்பிகள் மாநகரசபையில் இல்லை. கேட்டால் வாங்கப் பணம் இல்லை என்கின்றனர். பழுதடைந்த வீதி விளக்குகள் திருத்தப்படுவதில்லை. அதற்கும் பணம் இல்லை யாம்.

இப்படியான அரசுக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். ஐக்கிய தேசியக் கட்சி தான் இந்த முறை மாநகர சபையைக் கைப்பற்றும். ஊழல், மோசடியற்ற நிர்வாகத்தை மேற்கொள்ளும் - என்றார்.

# சிறைக்குள் பெண்களின் மது விருந்து

வெலிக்கடை சிறைச்சாலை பெண்கள் பிரிவில் கடந்த திங்கட்கிழமை மதுபான விருந்தொன்று இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பில் பெண் கைதிகள் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கைதான கைதிகள் நால்வரும் பரிசோதனைக்காக சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நால்வரில் இருவர் மது அருந்தியுள்ளமை தெரியவந்துள்ளது

சம்பவதினம் வழமைக்கு மாறாக பெண்கைதிகளின் கூடங்களில் பாட்டும், கூச்சல் கும்மாளங்களும் கேட்டதையடுத்து அதிகாரிகள் திடீர்ச்சோதனை நட்த்தியபோதே இந்த மதுவிருந்துபசாரம் தெரியவந்துள்ளது.

# சுற்றுலாத்துறையின் வருமானம் உயரும்

2016 ஆம் ஆண்டளவில் இலங்கை சுற்றுலாத்துறையின் வருமானம் 2.75 பில்லியன் டொலராக உயரும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தத்திற்குப் பின்னராக அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளில் இலங்கைக்கு 2.5 மில்லியன் சுற்றுலாப்பயணிகள் வருகை தருவார்கள் என்று சுற்றுலாத் துறை கணிப்பிட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முகமாகவிமான சேவைநிறுவனங்களுடனும் கலந்துரையாடப்படும் என்று இலங்கை சுற்றுலா சபையின் தலைவர் கலாநிதி நாலக்க கொடஹேவா தெரிவித்துள்ளார். யுத்தம் காரணமாக தடைப்பட்டிருந்த சுற்றுலாப் பயணிகளுக்கான விமான சேவைகள் தற்போது படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டு வருவதால் இலங்கையின் இயற்கை அழகை இலகுவாக ரசிக்கக்கூடிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



கட்டுநாயக்க விமான நிலையத்தில் 70 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு பணத்துடன் வெளிநாடு செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டார். அவரிடம் கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு நாணயத்தாள்களைச் சுங்க அதிகாரிகள் கணக்கிடுகின்றனர்.

# கிரிக்கெட்டைப் போன்று அரசியலுக்கும் சட்ட திட்டங்கள் மிகவும் அவசியம்

## கருஜயசூரிய தெரிவிப்பு

கண்டி, செப்.15

கிரிக்கெட் விளையாட்டைப் போன்று அரசியலுக்கும் சட்ட திட்டங்கள் அவசியம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவின் சுயசரிதை புத்தக வெளியீட்டு விழா கண்டியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகத்திலுள்ள ஜனநாயக நாடுகளில் தேர்தல் நடக்கும் முறைமைக்கு நேர் மாறாகவே எமது நாட்டில் தேர்தல் நடக்கும் முறை உள்ளது. மற்றைய நாடுகளில் தேர்தல்கள் ஒரே முறையில் நடைபெற்றாலும் எமது நாட்டில் பகுதி பகுதியாகவே நடை பெறுகிறது. நாங்கள் கிரிக்கெட்டை ஒரு தலை சிறந்தவிளையாட்டாக மதிக்கின்றோம். அதற்குக் காரணம் கிரிக்கெட் விளையாட்டிலுள்ள சட்டதிட்டங்களாகும்.

அதேபோன்று அரசியலுக்கும் சட்ட திட்டங்கள் அவசியம். ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் சமமாக நின்று தேர்தலில் போட்டியிட வேண்டும். மாறாக ஆளும்கட்சி அரச வளங்களையும், வாகனங்களையும், ஊடகங்களையும் பாவித்து சட்டவிரோதமான முறையில் வாக்குகளைப் பெறுமானால் அங்கு ஜனநாயகத்தைப் பார்க்க முடியாது - என்றார்.

# ஐ.தே.கவை சதி மூலம் வீழ்த்திய இரட்டையர் தற்போது ஆளும்தரப்பையும் சாய்க்கிறார்கள்

## நையாண்டி செய்கிறார் வேட்பாளர் முஸ்ஸமில்

கொழும்பு, செப்.15

கடந்த மாநாகரசபைத் தேர்தலில் மிலிந்த மொறகொடவும், மஹ்ரூப்பும் ஐ.தே.கட்சியின் வேட்பாளர் பட்டியலை ரிப்-எக்ஸ் போட்டு அழித்து அரங்கேற்றிய சதியை,இம்முறை ஆளும் தரப்பினரின் வேட்பு மனுக்களில் காட்டியிருக்கின்றார்கள்.

இதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்ட கால ஆதரவாளர்கள் பலர் இந்தத் தேர்தலில் ஓரம் கட்டப்பட்டுள்ளனர் என்ற அதிருப்தி ஆளும் தரப்புக்குள் எழுந்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகர சபைக்கான மேயர் வேட்பாளர் ஏ.கே.எம்.முஸ்ஸமில் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்களன்று கொழும்பு, கொச்சிக்கடைப் பகுதியில் இடம் பெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது :-

கடந்த மாநாகரசபைத் தேர்தலில் ஐ.தே.கட்சியின் வேட்பாளர் பட்டியலை ரிப்-எக்ஸ் போட்டு அழித்து, மாற்றியதன் மூலம் அந்த வேட்புமனுவைச் செல்லுபடியற்றதாக்கி, ஐ.தே. கட்சியின் உறுதியான வெற்றி வாய்ப்பைச் சிதறடித்தவர் கள் மிலிந்த மொறகொடவும், மஹ்ரூப்பும்தான்.

இந்த இரட்டையர்கள் இப்போது ஆளும்கட்சி பக்கம் தாவி, இம்முறை அந்தத் தரப்பினரின் வேட்பு மனுக்களிலும் தமது ரிப்-எக்ஸ் கைவரிசையைக் காட்டியிருக்கின்றார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்டகால உறுப்பினர்கள் பலரை வேட்பு மனுவில் இடம்பெறவிடாமல் வெட்டி நீக்கி, தமது சதியை அங்கும் அரங்கேற்றியிருக்கின்றார்கள் அவர்கள்.

கடந்த தடவை ஐ.தே. கட்சியின் உறுதியான வெற்றி யைப் பாழாக்கிய இந்த இருவரும் இப்போது அரசுப் பக்கம் தாவி, இந்தத் தேர்தலில் ஆளும் தரப்புக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த வாக்குகளையும் சீரழித்து அத் தரப்பின் தோல்வியை உறுதி செய்துவிட்டார்கள்.

வழமைபோல தனது கோட்டையான கொழும்பு மாநகர சபையில் ஐ.தே.கட்சி கடந்த முறையும் வெற்றி பெற்றிருக்கும். அந்த உறுதியான வாய்ப்பைத் தமது பின்னரங்கச் சதி வேலை மூலம் பாழாக்கிய இரட்டையர்கள், இப்போது ஆளும் தரப்புக்குக் குத்துக்கரணம் அடித்துள்ளனர்.

ஐ.தே.கட்சியில் மேற்கொண்ட அதே ரிப்-எக்ஸ் சதியை அவர்கள் அங்கும் செய்திருப்பதால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்டகால ஆதரவாளர்கள் பலர் இத்தேர்தலில் ஓரம் கட்டப்பட்டுள்ளனர் என்ற அதிருப்தி ஆளும் தரப்புக்குள் எழுந்துள்ளது. தமது நடவடிக்கைகள் மூலம் ஆளும் தரப்பின் தோல்வியை அவர்கள் இருவரும் இப் போதே உறுதிப்படுத்தி விட்டனர்.



அந்தஇரட்டையர்கள் அங்கு மஹிந்த பாணி யில் சால்வை அணிந்து காட்சி தருவதன் மூலம் தமது நடிப்பை அரங்கேற்று கின்றார்கள். நமது மாநகரசபை நிர்வாகத்தில் எந்தப் பிரஜையையும் மாநக ரத்தைவிட்டு - அந்தப் பிரஜையின் பாரம்பரிய வாழ்விடத்தைவிட்டு - வெளியேற்ற அனுமதிக்கவே மாட்டேன் என்று நானே முதன் முதலில் பகிரங்கமாகப் பிரகடனம் செய்து திட சங்கற்பம் பூண்டேன்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாவிப் பாடசாலையின் குறைகளைக் கேட்டார் நாமல்



முல்லைத்தீவு, செப்.15

முல்லைத்தீவு, மல்லாவிப் பகுதிக்குச் சென்ற நாளைய இளைஞர் அமைப்பின் தலைவர் நாமல் ராஜபக்ஷ, மல்லாவி அனிஞ்சியன்குளம் பாடசாலையின் குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்டார்.

முல்லைத்தீவு, மல்லாவி நகரில் அமைந்துள்ள இந்தப் பாடசாலை போதிய வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருகின்றது. இந்த நிலையில் மல்லாவிப் பகுதிக்குச் சென்ற நாமல் ராஜபக்ஷ அனிஞ்சியன்குளம் அ.த.க.பாடசாலைக்கு விஜயம் செய்து பாடசாலை அதிபருடன் கலந்துரையாடினார்.

இதன்போது பாடசாலையின் தேவைகள் தொடர்பாக மனு ஒன்றையும் பாடசாலை அதிபர் நாமல் ராஜபக்ஷவிடம் கையளித்தார். (க-6)

# கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் தெரிவில் முறைகேடு

## பிரதேச மக்கள் கடும் விசனம்

கிளிநொச்சி, செப்.15

கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத்தினர் யாப்பு விதிகளுக்கு மாறாகவும் சீருடை அணிந்தவர்களால் மக்கள் அச்சுறுத்தப்பட்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதேச மக்களில் ஒரு பகுதியினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராமத்தில் ஏற்கனவே செயற்பட்டு வந்த கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாகம் அப்பகுதி மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளை மோசடிசெய்து வந்ததாகக் கூறிச்செயலிழக்கச் செய்யப்பட்டது. பின்னர் இதன் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 8 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு தொண்டமான் நகர் உதிரவேங்கை வைரவர் ஆலயமுன்றிலில் கிராம அலுவலர் தலைமையில் நடைபெற்றது.

இந்தப் புதிய நிர்வாகத்தெரிவில் சிங்கள மொழி தெரிந்திருப்பதுடன் சீருடையினருடன் ஒத்துழைத்து வேலை செய்யக்கூடியவர்களே நிர்வாகத்தில் உயர் பதவிகளை வகிக்கமுடியுமெனக் கிராம அலுவலரால் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு பேர் ஒரே பதவிக்குப் போட்டியிடும் போது வாக்கெடுப்பு நடத்துமிடத்து பெண் எவரும் வாக்களிக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்தக் கிராமத்தில் முன்மாதிரியாகச் செயற்பட்ட பலர் இராணுவத்தினால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் கிராம அலுவலர் சீருடையினருடன் இணைந்து மக்களுக்கு எதிரான பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார் எனவும் மக்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை சில மோசடிசம்பவங்களுக்கு கிராம அலுவலரே காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது திருமணம் செய்யாத கிராம அலுவலரின் மகனுக்கு பங்கீட்டு அட்டைப் பதிவு செய்தமை, கிராமஅலுவலர் வசிக்கும் வீதி முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்கப்பட்டமை, விசேட தேவைக்கு உட்பட்ட ஒன்பது விதவைகளுக்கு நிவாரண விநியோகத்தினை நிறுத்தியமை போன்ற குற்றச் செயல்கள் மேற்கொள்ளபட்டதாக மக்களால் பல முறைப்பாடுகள் முன் வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிர்வாகத் தெரிவில் முக்கிய இராணுவ அதிகாரி உட்பட இராணுவத்தினர் பதினொரு பேர் வரையில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-6)


# மரணப் பொறியாக மாறியுள்ள ரெயிலர் வீதிப்பாலம்

கிளிநொச்சி, செப். 15

கிளிநொச்சி கணேசபுரத்திலிருந்து கரடிப்போக்கு செல்லும் ரெயிலர் வீதிப்பாலத்தின் மோசமான நிலையால் இதனூடாகப் பயணிப்போர் பெரும் அவலங்களையும் மரண ஆபத்தை யும் எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலம் 1985 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின் போது சேதமாக்கப்பட்டது. அதன் பின்னர் தற்காலிகமாகச் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டு மக்கள் இதனை உபயோகித்து வருகின்றனர். ஆனால் புனரமைப்பு வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையால் இது தற்போது மோசமாகச் சிதைந்து காணப்படுகின்றது.

இந்தப் பாலத்தின் கீழ் நீர் பாய்ந்தோடிச் செல்லும் வாய்க் கால் உள்ளது. மழை காலங்களில் பாலத்தின் மேற்பகுதியை மருவியவாறு நீர் பாய்ந்து செல்வது வழக்கமாகும். இந்த வேளையில் யாராவது பாலத்திலிருந்து தவறி வீழ்ந்து விட்டால் அவர்களின் கதி அதோ கதியாகவே மாறிவிடும். மேலும் பாலத்தின் உடைவுகளூடாகக் கீழே பார்க்கும் போது



மிகுந்த அச்சத்தையும் ஏற்படுத்துகின்றது.

ஏ-9 பிரதான வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் இந்தப் பாலம் அமைந்துள்ளது. புனித திரேசா பெண்கள் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களும் ஆசிரியர்களும் இதனூடாகத் தின மும் அச்சத்துடன் செல்கின்றனர். இதைவிடத் தற்போது ஏ-9 வீதியின் புனரமைப்பு வேலைகள் நடைபெறுவதால் அதிகமான மக்கள் இந்தப் பாலம் அமைந்துள்ள வீதியையே பயன்படுத்துகின்றனர். (க- 405)

# கிளிநொச்சி வர்த்தக வங்கியால் வாடிக்கையாளர்களுக்கு சேவைகள்

கிளிநொச்சி, செப். 15


கிளிநொச்சியில் அமைந்துள்ள வர்த்தக வங்கியால் மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவ தில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வந்த நிலையில் கிளிநொச்சியில் உள்ள வர்த்தக வங்கி தனது வாடிக்கையாளர் சேவையை விஸ்தரித்து விவசாயக் கடன்களையும் வியாபாரக் கடன்களையும் வாகனக் கடன்களையும் வழங்கி வருகின்றது.

அத்துடன்கடந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து அருணலு சிறுவர் சேமிப்புத் திட்டத்தின் கீழ் சேமிப்புக்களை மேற்கொண்டுள்ள மாணவர்களுக்கு விசேட பரிசில்களையும் வழங்கியுள்ளனர். (க-6)

# போர் பறித்த வாழ்க்கை





கிளிநொச்சி, செப். 15

வண்ணியில் போர் தந்த வடுக்களையும் வலிகளையும் சின்னஞ்சிறியவர்களும் சுமந்து நிற்கும் கொடுமை, பார்ப்போரை ஆறாத துயரில் ஆழ்த்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் வட்டக்கச்சி இராமநாதபுரம் 6 ஆம் யூனிற் பகுதியைச் சேர்ந்த ஆறு வயது நிரம்பிய சுதாஸ் ரஜீவன், மாத்தளன் பகுதியில் படையினரின் எறிகணை வீச்சால் தனது ஒரு காலை இழந்து நிற்கின்றான்.

இதைப்போன்று புதுக்குடியிருப்பு தேவிபுரம் 'ஆ' பகுதியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் சங்கவி என்ற ஏழு வயது நிறைந்த சிறுமி பொக்கணைப் பகுதியில் தனது ஒரு காலை ஈவிரக்கமற்றவர்களின் தாக்குதலில் இழந்து நிற்கின்றாள்.

தரம் ஒன்றில் கல்வி கற்று வரும் இந்த இரு இளம் பிஞ்சுகளும் மாறாத வடுக்களைச் சுமந்து சோகத்தில் ஆழ்ந்து நிற்கின்றனர்.

எந்தப் பாவமும் அறியாத இவர்கள் தமது தேவைகளுக்குப் பிறரை எதிர்பார்த்திருக்க வேண்டிய பரிதாப நிலையில் உள்ளனர்.

இவர்களுக்குச் செயற்கைக் கால்களைப் பொருத்துவதன் மூலம் ஓரளவுக்காவது ஆறுதல் கிடைக்குமென இவர்களின் பெற்றோர்கள் நம்புகின்றனர். தற்போது அதற்கான முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (க-6)

# முறிகண்டி இந்து வித்தியாலயத்தின் மூன்றாவது கட்டடமும் திறந்துவைப்பு



முல்லைத்தீவு, செப்.15

முல்லைத்தீவு மாவட்டம் திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் சேவாலங்கா நிறுவனத்தால் அமைக்கப்பட்ட கட்டடத்தைக் கடந்த 12 ஆம் திகதி துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான கு. விஜயபாலா, சுந்தரமூர்த்தி மற்றும் மூன்று கல்விக் கோட்டங்களினதும் கோட்டக் கல்வி அதிகாரிகள், அந்த வலயங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், அந்தப் பிரதேச இராணுவ அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இடப்பெயர்வின் பின்னர் புனரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்படும் மூன்றாவது கட்டடம் இதுவாகும். இதனை மிகவும் சிறப்புற அமைப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் இராஜேஸ்வரன், அவரோடு சேர்ந்து செயலாற்றிய கபிலன் ஆகியோரைப் பாராட்டி நன்றி கூறுவதாக அந்தப் பாடசாலையின் அதிபர் ஆ.சூசைநாதர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த வருட இறுதிக்குள் மேலும் ஒரு இரு மாடிக் கட்டட வேலைகள் பூர்த்தியாகவுள்ளதாகவும் பின்தங்கிய இந்தப் பகுதிப் பாடசாலைக்கு இந்த வளங்கள் கிடைப்பதற்கு உதவிய அதிகாரிகளுக்கும் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றி தெரி விப்பதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார். (க)

# விபுலானந்தாக் கல்லூரியின் 60 ஆவது ஆண்டு நிறைவு

முல்லைத்தீவு, முள்ளியவளை விபுலானந்தாக் கல்லூரியின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 21ஆம் 22 ஆம் திகதிகளில் மணிவிழா நிகழ்வுகள் கல்லூரி அதிபர். ரி.கே.சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இதனையொட்டி பாடசாலை மாணவர்களின் ஆக்கத்தில் உருவான பாடவிதானத்துடன் கூடியதான பொருள் கண்காட்சியும் மற்றும் வெளியார் நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பொருள் கண்காட்சியும் இரு தினங்களுக்கு நடைபெறவுள்ளன.

அத்துடன், புதிய நூலகத்துக்கான அடிக்கல் நடும் வைபவமும் பாடசாலையில் புனரமைக்கப்பட்ட கட்டடங்களும் பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட சுற்றுமதிலும் திறந்துவைக்கப்படவுள்ளதுடன், பழைய மாணவர்களை கௌரவித்தலும் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அக்கராயன்குளம் புனரமைப்பு

# காலபோகச் செய்கைக்கு நீர் விநியோகம் இல்லை

அக்கராயன், செப்.15

கிளிநொச்சி அக்கராயன் குளம் புனரமைக்கப்பட்டு வருவதால் காலபோக நெற்செய்கைக்கு நீர் வழங்கல் இடம்பெறமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கராயன் குளத்தின் புனரமைப்புப் பணிகள் 300 மில்லியன் ரூபா செலவில் இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில் காலபோக நெற்செய்கைக்கு குளத்திலிருந்து நீர் வழங்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை அக்கராயன் புனரமைப்புப் பணிகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன.

குளத்தின் அணைக்கட்டு உயர்த்துதல், இடது, வலது கரை வாய்க்கால்கள் சிமெந்தால் அமைத்தல் போன்ற பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ம-410)

# அதிபர் இன்மையால் நெருக்கடி

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு நீண்டகாலமாக அதிபர் நியமிக்கப்படவில்லை. இதனால் அங்கு பெரும் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது.

கடந்த ஜனவரி மாதம் அக்கராயன் ஆரம்பவித்தியா லயம் கிளிநொச்சி கல்வி வலயத்தில் இயங்கத் தொடங்கியது.

அக்கராயன் மகாவித்தியாலயம் ''இசுறு'' பாடசாலையாக தெரிவுசெய்யப்பட்டமையால் ஆரம்பபிரிவு மாணவர்களுடன் அக்கராயன் ஆரம்பவித்தியாலயம் இயங்கத்தொடங்கியது.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் தனிப் பாடசாலையாக இயங்கத் தொடங்கியபோது புதிய அதிபர் நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் 9 மாதங்கள் கடந்த பின்பும் அதிபர் நியமிக்கப்பட வில்லை.

புதிய அதிபர் நியமிக்கப்படாததன் காரணமாக பாடசாலைக்குரிய புதிய கட்டட வேலைகள், பாடசாலையின் நிர்வாக வேலைகள் உட்பட அனைத்துச் செயற்பாடுகளும் இடைநடுவில் காணப்படுகின்றன.

பாடசாலையின் நிலைவரம் தொடர்பாக பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரால் பல தடவைகள் வலயக்கல்விப் பணிமனைக்கு தெரியப்படுத்தியும் அதிபர் நியமிக்கப்படவில்லை.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அதிபர் ஒருவரை நியமிக்க கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனை உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பெற்றோர் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ம-410)

# மன்னார்- மதவாச்சி வீதியில் விபத்தில் வாகனச் சாரதி மரணம்

மன்னார், செப்.15

மன்னார்- மதவாச்சி பிரதான வீதியின் முருங்கன் செம்மண் தீவு வீதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் மன்னார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்ட அலுவலகச் சாரதியான லோறன்ஸ் றொனிஸ் டிமேல் சில்வா (வயது-26) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இவர் மன்னார், தாழ்வுப்பாட்டைச் சேர்ந்தவராவார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்ட அலுவலர்கள் வவுனியாவில் இருந்து மன்னார் நோக்கி வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது முருங்கன்- செம்மண் தீவு வீதிக்குக் குறுக்காக மாடுகள் கூட்டமாகச் சென்றுகொண்டிருந்தன.

இதன்போது குறித்த வாகனச் சாரதி வாகனத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முற்பட்ட வேளை கட்டுப்பாட்டை மீறி வாகனம் தடம்புரண்டது. இதன்போது மேற்படி வாகனச் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதேவேளை, இந்த வாகனத்தில் பயணித்த வவுனியா பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்ட சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர் சிறீ (வயது-50) மற்றும் மன்னார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்ட நிதி அலுவலர் அமலன் (வயது- 28) ஆகிய இருவரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலமும் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதிவான் திருமதி கே.ஜீவராணி நேற்று புதன்கிழமை வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.(ம-601)

# நீர் இறைக்கும் இயந்திரங்கள்

கிளிநொச்சி, செப். 15

அரச நிதியுதவியுடன் கிளிநொச்சி விவசாய விரிவாக்க அலுவலகத்தால் ஆயிரத்து 200 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் விவசாயத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் இந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் தெரிவு செய்யப்படும் விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு புளியம் பொக்கணையில் அலுவலகம்

கிளிநொச்சி, செப்.15

கண்டாவளை பிரதேச செயலகத்துக்கான நவீன அலுவலகக் கட்டடம் புளியம் பொக்கணை சந்தியில் அமைக் கப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

நீண்ட காலமாக மேற்படிப் பிரதேச செயலகம் அமைப்பதற்கான காணித் தெரிவில் இழுபறி நிலை நிலவி வந்தது.

இதனையடுத்து கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கண்டாவளைப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் மற்றும் பொது அமைப்புக்களுடன் ஏற்படுத்திய சந்திப்பை அடுத்தே புளியம் பொக்கணையில் மேற்படி பிரதேச செயலகம் அமைக்கப்படவுள்ளது.

இதனையடுத்து இதற்கான ஏற்பாடுகளைப் பிரதேச் செயலர் எஸ். சத்தியசீலன் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-302)

# உன்னப்புலவு அ.த.கவில் கட்டடம் திறப்பு



முல்லைத்தீவு உன்னப்புலவு அரசினர் தமிழ்க்கலவன் அரசினர் பாடசாலைக்கான வகுப்பறைக் கட்டடம் ஒன்று கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ஏ. பத்திநாதன், முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மார்க் ஆகியோர் இணைந்து வகுப்பறைக் கட்டடங்களைத் திறந்துவைத்தனர்.

இந்தப் பாடசாலைக் கட்டட நிர்மாணப் பணிகள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் கிருஷ்ணமூர்த்தி, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம)

# பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் பனங்கைப்பணிப் பயிற்சி நெறி

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் பனை அபிவிருத்திச் சபை யு.என்.எச்.சி.ஆர்,ஆர்.டி.எவ் ஆகிய நிறுவனங் களுடன் இணைந்து பனங்கைப் பணிப் பயிற்சிகளை ஆரம்பித்து வைத்துள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக 15 ஆவது கட்டளைத் தளபதி கேணல் ஹருப்பிரியா, பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்கல் உத்தியோகத்தர், உதவி முகாமையாளர்(அபிவிருத்தி) ஆகியோரும் யு.என்.எச்.சி.ஆர், ஆர்.டி.எவ் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

சபைத்தலைவர் இதில் உரையாற்றுகையில்;

பனையின் பயனில் 15 வீதம் மட்டுமே மக்களின் பயன்பாடாக உள்ளது. மிகுதி 85 வீதமும் வீணாகப் போகிறது.

எமது வளம் பனையென இலச்சனைகளில் முனைப்பெடுப்போர் தம்வாழ்வியலில் இலட்சியமாக முனைப்பெடுப்பதில்லை.

வடக்கின் வளம் பனையென்று கூறும் அனைவரும் அந்தவளம் பயன்பாடின்றி வீணாகிப் போவதை சிந்திப்பதில்லை. இந்தப் பயிற்சி நெறியை ஆரம்பிக்கும் பனை அபிவிருத்திச் சபையானது பயிற்சி வழங்குவதோடு மட்டுமல்லாது அந்தப் பொருள்களுக்குரிய சந்தைவாய்ப்பையும் வழங்கி வருகின்றது. உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்தியாளர்களுக்கென ''சிறுசுவடுகள்'' எனும் உற்பத்திக் கட்ட மைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டமைப்பினூடாக உற்பத்தியாளர்களுக்கான சுய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இந்தப்பிரதேசத்தில் பனம்பழங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இந்தப் பழங்களை பயன்படுத்தி களி எடுத்து பனாட்டாக்கும் தொழில் நுட்பத்தை இந்தப்பயிற்சியாளர்களுக்கு பனங்கைப்பணிப் பயிற்சி காலத்திலேயே வழங்க உள்ளோம் எனவும் தெரிவித்தார். பனை வளம் நிறைந்து காணப்படும் இந்தப் பிரதேசத் தில் பனைசார் பல்தொழில் தொகுப்பு நிலையம் ஒன்றை அமைக்க உள்ளதாகவும் கூறினார். (ம)

# கோம்பாவில் பகுதியை பார்வையிட்ட மெனிக்பாம் மக்கள்

வவுனியா செட்டிக்குளம் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களில் 118 குடும்பங்களைச் சேர்ந்த தலைமை அங்கத்தவர்கள் தாங்கள் குடியேறவுள்ள கோம்பாவில் பகுதியை கடந்த திங்கட்கிழமை பார்வையிட்டனர்.

அகதிகளுக்கான ஐ. நா.தூதரகத்தின் ஏற்பாட்டில் 118 குடும்பங்களைச் சேர்ந்த தலைமை அங்கத்தவர்கள் இரு பஸ்களில் அழைத்து வரப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்டத்தின் அரச அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, அம்பலவன் பொக்கணை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே குடியேறவுள்ள கோம்பாவில் பகுதியை பார்வையிட்டதாகவும் அவர் கூறினார்.

தாங்கள் குடியேறவுள்ள பகுதியை இவர்கள் பார்வையிட்ட பின்னர் கூட்டமொன்று நடத்தப்பட்டதாகவும் இதன்போது தமது சுயதொழில் நடவடிக்கை, நிவாரண நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றுக்கான சந்தேகங்களை அவர்கள் கேட்டுத் தெரிந்துகொண்டனர். மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னதாக தாங்களை குடியமர்த்துமாறு இந்த மக்கள் கோரியதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கோம்பாவில் பகுதியில் குடியமரவுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் பிறிதொரு தினத்தில் அழைத்து வரப்படுவார்களெனவும் அரச அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இந்த முறை இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் இளம் சமுதாயத்தினரின் பிரவேசம்

### போதாது

" இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" என்பதற்கிணங்க இவர்களது பிரவேசம் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அதிகமாக இருக்க வேண்டும். நாட்டின் எதிர்காலம் ஒழுக்க நெறியில் வளரும் இளம் சமூகத்திடமே தங்கியுள்ளது. இளைஞர் கள் நாட்டின் நலனுக்கோ, உலக மேம்பாட்டுக்கோ விரிந்த முறையில் சிந்தனை செய்யும் ஆற்றல் உடையவர்கள். இவர்களின் தீவிர உணர்வுக்கு அனுபவ முதிர்வுடையோர் காவலாளிகளாய் இருத்தல் பெரிதும் வேண்டற்பாலாகும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதால் அனுபவ முதிர்ச்சி ஏற்படும். அமைதியாகவும், ஆழமாகவும் அலசி ஆராய்ந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியவர்கள் இளைய சமுதாயத்தினரே. "இளம் கன்று பயமறியாது" என்ற சான்றோர் வாக்கிற்கிணங்க மக்களின் தேவைகள், நாட்டின் தேவைகள் யாவற்றையும் துணிச்சலுடன் மேற்கொள்ளும் துடிப்புடையவர்களே இளம் சமுதாயத்தினர்.

எனவே இளம் சமுதாயத்தினரின் பிரவேசம் இந்தமுறை இடம்பெற்ற உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போதுமானதாக் காணப்படவில்லை. துடிப்புள்ள இளம் சமுதாயத்தினர் நல்லதொரு எதிர்காலத்தை அமைப்பதற்கு நாட்டின் நலனில் பங்கெடுக்க வேண்டும்.

**ஜெனனி மோகனதாஸ்,**
கிளி/உருத்திரபுரம் ம.ம.வி.

### போதுமானது

தமிழர்களின் உரிமைக்கான குரலும் அதன் வேட்கையும் இளைஞர்களாலே உத்வேகம் பெற்றுள்ளது.

பல நாடுகள் மூக்கில் விரல் வைக்கும் வகையில் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் இளைஞர்களின் பிரவேசத்தால் உத்வேகம் பெற்று உலகத்தின் மனக் கதவுகளைத் தட்டும் அளவுக்கு பெற்றது. தமிழ் அரசியல் வரலாற்றில் இளைஞர்களின் பங்கு அளப்பரியது.

அந்தவகையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இளைஞர்களே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் தமிழ் மக்களின் குரல் இன்னும் அதிகமாக ஓங்கி ஒலிக்கப் போகின்றது.

அனைத்து சபைகளிலும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் அதிகமாகக் கிடைத்திருக்கின்றது.

எனவே தொகுத்து நோக்கின் உள்ளூராட்சித் தேர்தலில் இளைஞர்களின் பங்கு போதுமானது என்று கூறுவது சாலப் பொருத்தமானது.

**தமிழ்மறவன்,**
நல்லூர்.

## வாழ்க்கைக்கு இத்தனை அதிசயங்கள்

வாழ்க்கை ஓர் அன்பு அனுபவிப்போம்.
வாழ்க்கை ஓர் அழகு அதிசயிப்போம்.
வாழ்க்கை ஓர் ஆன்மா உணர்ந்திடுவோம்.
வாழ்க்கை ஓர் இலக்கு எட்டிடுவோம்.
வாழ்க்கை ஓர் இரகசியம் வெளிப்படுத்துவோம்.
வாழ்க்கை ஓர் உறுதிமொழி நிறைவேற்றுவோம்.
வாழ்க்கை ஒரு விளையாட்டு விளையாடுவோம்.
வாழ்க்கை ஒரு வாய்ப்பு பயன்படுத்துவோம்.
வாழ்க்கை ஒரு வெகுமதி என ஏற்போம்.
வாழ்க்கை ஒரு சவால் எனச் சந்திப்போம்.
வாழ்க்கை ஒரு சாகசம் துணிந்து நிற்போம்.
வாழ்க்கை ஒரு துன்பம் வென்று நிற்போம்.
வாழ்க்கை ஒரு கடமை செய்து முடிப்போம்.
வாழ்க்கை ஒரு பாடல் என இசைப்போம்.
வாழ்க்கை ஒரு பயணம் நிறைவு செய்வோம்.
வாழ்க்கை ஒரு புதிர் விடுவோம்.
வாழ்க்கை ஒரு போராட்டம் போராடுவோம்.

**வ.பார்த்தீபன்,**
பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

விவாத மேடைப்பகுதியில் "இன்றைய ஆலயத் திருவிழாக்கள் களியாட்டத்துக்கு வித்திடுகின்றன" என்ற அணி வெற்றி பெற்றுள்ளது. இதில் களியாட்டத்துக்கு வித்திடுகின்றன என்ற அணிக்காக 94 வாக்குகளும், ஆன்மிகத்தைப் பரப்புகின்றன என்ற அணிக்காக 80 வாக்குகளும் கிடைத்துள்ளன. களியாட்டத்துக்கு வித்திடுகின்றன என்ற அணிக்காக வாக்களித்தவர்களில்

1. இரத்தினம் நர்மதன்- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
2. வி.கீர்த்தனா- பட்டினசபை வீதி, மானிப்பாய்.
3. வி.விசாகன்- மீசாலை மேற்கு, மீசாலை.

சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்
ஆ.வதனா- கரவெட்டி

மேலும் சிறந்த ஆக்கங்களை அனுப்பியோர்
செல்வி.செ.சுகிர்தா-அராலிவீதி, சங்கானை
இ.ஆனந்தன்- கரவெட்டி
இ. நீரஜா- கைதடி கிழக்கு, கைதடி.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

*'இளவல்கள் வட்டம்',*
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :-....................................................
முகவரி :-....................................................
....................................................
.................... ....................
திகதி கையொப்பம்

## இளைஞனே எழுந்திரு!



நாகரிக மோகத்தில்
நசிங்கிப் போகும் இளைஞனே- நீ
இன்றிருக்கும் நிலையை
இயம்புகின்றேன் கேளாயோ.

நிஜவாழ்வை நிர் மூலமாக்கி
நிழலை நிஜமாய் நம்பி
சினிமா மாயைக்குள் சிக்கி
சீரழிந்து போகிறாயே.

நாகரிக உடைகளும்
நவீனப் போக்கும் தானா - உன்னை
அறிமுகம் செய்கின்ற
அடையாளங்கள் - இல்லை

மாயைகளையும் தாண்டிய
மகத்தான வாழ்வுண்டு அறிவாயோ
தெளிவுடன் முயற்சி செய்
தொலைந்த உன் வாழ்வைத் தேடி

எத்தனை திறமைகள்
எங்களுக்குள் இருக்கின்றன
சிந்தித்துப் பார்த்திருக்கிறாயோ
சில கணமேனும்

சிற்பியின் கைபட்டு
சிலையாகிறது ஓர் கல்- பொற்
கொல்லனின் கைபட்டு
நகையாகிறது கட்டித் தங்கம்
உன் ஒருவன் கைபட்டு

எது எதுவாகிறது?
புத்தகத்துள் மட்டும்
புதுமையைத் தேடிக்கொண்டு
நித்திரை தள்ளி வைத்து
நித்தமும் கற்கிறாயே

ஏட்டுக் கல்விக்கு வெளியே
எந்தப் பெரிய உலகமுண்டு
எண்ணிப் பார்திருக்கிறாயா
என்றாவது ஒரு நாள்?

"செல்" போனுக்குள் தினமும்
செத்துக் கொண்டிருக்கிறாயே
வெல்வேன் என்ற உறுதியோடு
செய்திருக்கிறாயா செயலேதும்

ஆளுமையும் அறிவும் பெற்ற
அற்புத இளைஞனே
மாயத்திரை கிழித்து
மானிட வாழ்வுக்கு வா
தடைகளைத் தகர்த்து விட்டு
திறமைகளைத் தட்டியெழுப்பு

சாதிக்கப் பிறந்த நீ
சற்றும் இளைப்பாறலாமோ?
சாதனைப் பயணத்தை
சலிக்காமல் நீ தொடங்கு
சரித்திரத்தில் இடமொன்று
பத்திரமாய் இருக்கிறது
உனக்காக!

**டிஷானி கிறிஸ்தோப்பர்,**
கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக் கழகம்.

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

இந்த முறை இடம்பெற்ற
உள்ளூராட்சி சபைத் தேர்தலில்
இளம் சமுதாயத்தினரின் பிரவேசம்

போதுமானது ☐ போதாது ☐

பெயர்: ....................................................
முகவரி: ....................................................
அடையாள அட்டை இல.: ....................................................
....................................................

உங்கள் தீர்ப்புக்களை 29.09.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

இளவல்கள் வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலைச் செடிகளைப் பிடுங்கிவிட்டு மாணிக்கக்கல் தோண்டும் வர்த்தகர்கள்

## நோர்வூட்டில் அட்டகாசம்; பொலிஸாரும் உடந்தை

நோர்வூட், செப்.15

நோர்வூட் தேயிலை தோட்டமொன்றில் சிலர் தேயிலைச் செடிகளைப் பிடுங்கிவிட்டு மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ளதால் அங்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்று இந்தத் தோட்டத்தின் சிரேஷ்ட பதில் தோட்ட அதிகாரி ஏ.பி.விஸ்வநாத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில நாள்களாக நோர்வூட் தேயிலைத் தோட்டத்தில் மாணிக்கக்கல் வியாபாரிகள் செய்துவரும் அக்கிரமத்தால் நாளுக்குநாள் நட்டம் அதிகரித்துச் செல்கின்றது.

இந்த பிரதேசம் அதிகதேயிலை விளைச்சலைத் தரக்கூடிய பிரதேசம்.

இந்தப் பிரதேசத்தை தற்போது பார்க்கும்போது இடத்திற்கு இடம் தேயிலைச் செடிகள் பிடுங்கி எறியப்பட்டு அலங்கோலமாகக் காட்சியளிக்கின்றது.

கடந்த 9 ஆம் திகதி 10,11 தேயிலைச் செடிகளைப் பிடுங்கிவிட்டு வர்த்தகர்கள் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ளனர். மறுநாள் காலை நான் நோர்வூட் பொலிஸில் சென்று முறைப்பாடு செய்தேன்.

பின்னர் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்தத் தோட்டத் தில் உள்ள இரண்டு காவலாளிகளை நோர்வூட் பொலிஸார் அழைத்துச் சென்று விசாரணை செய்துள்ளனர். இரவு 9.30 மணிக்கு தான் காவலாளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அப்போது வந்து தேயிலைத் தோட்டத்தில் பார்த்த போது முன்னர் மாணிக்கக்கல் அகழ்வுக்காக தேயிலைச் செடிகள் பறிக்கப்பட்ட இடத்தில் மேலும் செடிகள் பறிக்கப்பட்டுக் காணப்பட்டன. இரண்டு, மூன்று நாள்களுக்குள் 50 ஆயிரத்திற்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து நோர்வூட் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதும் அவர்கள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. பொலிஸாரின் பூரண ஒத்துழைப்புடனேயே இந்த நடவடிக்கை இடம்பெறுகிறது- என்றார்.

எனினும், தமக்கும் இந்த நடவடிக்கைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# மலையகத்தில் தொடர்மழை; இயல்பு வாழ்க்கை பாதிப்பு

நுவரெலியா,செப்.15

மலையகப் பகுதிகளில் பெய்து வருகின்ற அடை மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக அடைமழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இதற்கிடையில், தியகல சந்தியில் அடிக்கடி ஏற்படுகின்ற மண்சரிவினைச் சீர்செய்வதில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நோர்வூட் பிரிவு ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பொகவந்தலாவை, நோர்வூட், டிக்கோயா போன்ற பிரதேசங்களில் பெய்து வருகின்ற அடை மழையினால் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் உயர்வடைந்து வருகின்றது.

நுவரெலியா, நானுஓயா, லபுகக்கலை போன்ற பகுதிகளில் தோன்றுகின்ற பனிமூட்டம் காரணமாகவும் வாகனப் போக்குவரத்துகளுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளன.

தொடர்ச்சியான மழை வீழ்ச்சியினால் தோட்டத்தொழிலாளர்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் தொழில் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், மலையகப் பகுதி பாடசாலைகளின் மாணவர் வருகையும் கடந்த சில நாள்களாக குறைவடைந்துள்ளதாக பாடசாலை அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

மலையகத்தில் தொடர்ந்து பெய்யும் மழையால் கற்கள் உருண்டு விழுகின்றதனால் ரயில் சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. (ச)



ஈரான் உயர் மட்ட தூதுக்குழுவினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்குச் சென்று பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயிலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

# கல்முனை மாநகர அபிவிருத்திக்கு அமெரிக்க அரசு நிதியுதவி வழங்கும்

## தூதர் பற்றீஷியா ஏ. புட்டனிஸ் தெரிவிப்பு

கல்முனை, செப்.15

கல்முனை மாநகரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அமெரிக்க அரசு தயாராக உள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் பற்றீஷியா ஏ. புட்டனிஸ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி பொதுச் செயலாளர் நாயகம்நிசாம் காரியப்பருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் பற்றீஷியா ஏ. புட்டனிஸுக்கும் இடையி லான விசேட கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இதன்போதே அமெரிக்கத் தூதர் பற்றீஷியா இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

கல்முனை மாநகரசபைத் தேர்தலின் பின் நிசாம் காரியப்பரினால் கல்முனை மாநகர அபிவிருத்தி தொடர்பாக முன்வைக்கும் அனைத்துத் திட்டங்களுக்கும் அமெரிக்க அரசும் அமெரிக்க மக்களும் உதவுவர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், கல்முனை மாநகர சபைக்கான தேர்தல் காலம் என்பதனால் எந்தவித உதவிகளையும் தற்போது வழங்க முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம், ஆழிப்பேரலை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்கள் முகங்கொடுக்கும் சவால்கள் பற்றி அமெரிக்கத் தூதருக்கு சட்டத்தரணி நிசாம் காரியப்பர் விளக்கமளித்துள்ளார்.

அத்துடன் கல்முனை மாநக மக்களின் உடனடித் தேவைகள் குறித்தும் எடுத்துக்கூறினார்.

கல்முனை மாநகர எல்லைக்குள் சிறந்த முறையிலான வடிகாலமைப்பு வசதியை சிறந்த முறையில் மேற்கொள்வதற்காக ஆழமாகத் தோண்டப்பட்ட வாவியொன்றை அமைப்பதற்கு உதவுமாறு நிசாம் காரியப்பர் தூதர் பற்றீஷியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்குச் சாதகமாகப் பதிலளித்த அமெரிக்கத் தூதர் யுத்தத்திற்குப் பின்னரான நிலையில் அம் பாறை மாவட்ட முஸ்லிம்களின் பொருளாதாரம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பாதுகாப்பு ஆகியவை போன்ற பல விடயங்களைக் கேட்டறிந்தார் என்று சட்டத்தரணி நிஸாம் காரியப்பார் தெரிவித்துள்ளார்.

## பஸ்ஸில் சோதனை கஞ்சாவுடன் சிக்கினார் இராணுவச் சிப்பாய்

பண்டாரவளை-வெல்லவாய வீதியில் கடந்த திங்கட்கிழமை இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றைச் சோதனையிட்ட பொலிஸார் அங்கு உடுப்புப் பைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 61 கூசா பைக் கற்றுகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பைச் சேர்ந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிகவிசாரணைகளை பொலிஸார் நடத்தி வருகின்றனர்.

# போலி முத்து வியாபாரம் செய்த கும்பல் பொலிஸாரால் கைது

மாத்தளை, செப்.15

மாணிக்கக் கற்கள், முத்துக்கள் என்று போலியானவற்றைக் காட்டி நாடெங்கும் பலரிடம் பணமோசடி செய்த கும்பலொன்று மாத்தளை விசேட பொலிஸ் பிரிவினரால் கடந்த திங்கட்கிழமை தை செய்யப்பட்டுள்ளது.

இவர்களிடமிருந்து போலியான இரண்டு முத்துக்களும் இரண்டு மாணிக்கக் கற்களும் நூறு மில்லி கிராம் எடை கொண்ட ஹெரோயினும் கைப்பற்றப்பட்டன.

இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் உட்பட நால்வர் மாத்தளை களுகங்க பிரதேசத்தில் ஓட்டோவொன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் போலி முத்துக்கள், மாணிக்கக் கற்கள் போன்றவற்றைக் காட்டி நாடெங்கும் பல பிரதேசங்களில் பணம் பெற்றுள்ளனர்.

அத்துடன் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறியும் பணமோசடி செய்து வந்துள்ளனர்.

மாத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாகர தங்கம்பலவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச-5)

## வாவியில் படிந்துள்ள பாசியினால் மீனவர்கள் அவதி

மட்டக்களப்பு வாவியின் மேல் கடந்த சில வாரங்களாக புதுவகையான பாசியினம் படிந்து காணப்படுகின்றது. இதனால் மீனவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

வலைகள் இந்தப்பாசியின் மேல் விழுந்து பழுதடைந்து விடுகின்றன.இதனால் நஷ்டம் ஏற்படுவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்த வாவியின் எழிலை ரசிக்கவரும் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் கவலையடைந்துள்ளனர். (ச)

# கண்டி மாநகர சபை மேயர் பதவிக்கு போட்டியிடும் விஜயரத்னவுக்கு எதிர்ப்பு

கண்டி மாநகர சபையின் மேயர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளராக முன்னாள் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்னவை நியமிப்பதாக கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கண்டியில் கடந்த திங்கட்கிழமை தெரிவித்ததையடுத்து ஏனைய ஐ.தே.க. வேட்பாளர்கள் தமது கடும் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

மேயர் பதவிக்கு வேறொருவரை வேட்பாளராக நியமிக்குமாறு கோரி 12 வேட்பாளர்கள் ஒப்பமிட்டுக் கட்சித் தலைவருக்கு ஏற்கனவே சமர்ப்பித்திருக்கும் போதும் அது உதாசீனம் செய்யப்பட்டு விட்டது.

பெரும்பான்மை விருப்பு வாக்குகளை வாங்கும் நோக்கில் முன்னாள் மேயர் ஒருவரும் உபமேயரும் சுவரொட்டிகள்,விளம்பரங்கள் மூலம் ஆதரவு திரட்டிவரும் இந்த வேளையில் ஐ.தே.க. தலைமைப்பீடம் நிரஞ்சன் விஜயரத்னவை பிடிவாதமாக நிறுத்தியிருப்பது தோல்விக்கு அறிகுறி என்று கூறுகின்றனர்.

நிரஞ்சன் விஜயரத்னவுடன் கூட்டாகச் சேர்ந்து தேர்தல் பணிகளை முன்னெடுக்குமாறு கட்சித் தலைமைப் பீடம் கேட்டுக்கொண்டபோதும் ஏனைய வேட்பாளர்கள் அந்த வேண்டுகோளுக்குப் பணியாமல் தனித்தனியாகப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## கசிப்பு வடி நிலையம் முற்றுகை; இருவர் கைது

பேருவளை, செப். 14

களுத்துறை மாவட்டத்திலுள்ள ஹந்தபான்கொட கலுவல காட்டில் கசிப்பு உற்பத்தி நிலையமொன்றை ஹொரண பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

அங்கிருந்து பெருந்தொகை கோடாவை மீட்ட பொலிஸார் இரு சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட திடீர் முற்றுகையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
உங்களுக்குப் பிடித்த ஒன்று மற்றவர்களுக்கு பிடிக்காமல் போகலாம். பெற்றோர் வழியில் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். ஆரம்பித்த சில வேலைகளை இடைநடுவில் விட்டு விட்டு வேறு வேலைகளில் ஈடுபடலாம். அயலார் வீடுகளில் நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம்.

**இடபம்:**
பால்ய நண்பர்கள் சிலரை சந்திக்கலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். மறக்க முடியாத புதிய அனுபவங்களைப் பெறலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம்.

**மிதுனம்:**
தொட்ட காரியங்கள் தடையின்றி துரிதமாக நடக்கும் நாள். சில விடயங்களில், பரிவு கருணையுடன் நடந்து கொள்வீர்கள். பழைய சம்பவங்களை அசை போட்டுப் பார்ப்பீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உங்களுக்குப் பிடிக்காத சில காரியங்களை குடும்ப உறுப்பினர்கள் செய்யலாம். தொழில் ரீதியான பணவரவு உண்டு.

**கடகம்:**
சிலரிடம் கடனுதவி பெறலாம். மருத்துவ சிகிச்சைக்குச் செல்லும் ஒருவருக்கு துணையாக செல்லலாம். உறவினர்களுக்குத் தெரியாத விடயம் ஒன்றை நீங்கள் சொல்லலாம். உங்களின் நலனில் அக்கறை கொண்ட ஒருவரை அறிந்து கொள்வீர்கள். நீங்கள் விரும்பாத ஒருவரை முக்கியமான இடத்தில் சந்திக்கலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும்.

**சிங்கம்:**
மருத்துவச் செலவுகள் நேரலாம். ஓய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். மாற்று இனத்தவர்கள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். திட்டமிட்ட வேலை ஒன்று முடியாமல் நீண்ட நேரம் இழுத்தடிக்கலாம்.

**கன்னி:**
வரவுகளை எதிர்பார்த்து செலவுகளைச் செய்வீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். சில வேலைகளை முடிக்க கடும் பிரயத்தனம் மேற்கொள்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம். திடீரென ஏற்படும் வேலையால் வழக்கத்திற்கு மாறாக அதிக நேரம் பணிபுரியலாம்.

**துலாம்:**
மனதில் உயர்வான சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். சக ஊழியர் ஒருவரின் செயற்பாடுகளைப் பற்றி மற்றொருவரிடம் விமர்சிப்பீர்கள். குறைந்த அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில் பெரிய அளவில் ஆதாயம் கிடைக்கலாம். உறவினர் ஒருவருக்காக மற்றொருவரிடம் உத்தரவாதம் கொடுப்பீர்கள்.

**விருச்சிகம்:**
தர்ம, புண்ணிய காரியங்களை செய்வீர்கள். ஒருவருக்கு கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். சில காரியங்களில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் முடிவுக்கு வரும். மற்றவர்களை நம்பி எந்த காரியத்திலும் இறங்க வேண்டாம். உறவினர் வழியில் முக்கிய செய்தி ஒன்றைக் கேட்கலாம். தண்டச் செலவுகள் சேரும்.

**தனுசு:**
உதவியாக இருந்த ஒருவரே தொல்லையாக மாறலாம். குடும்ப பெரியவர்களின் கோபத்துக்கு ஆளாகலாம். உடன் பிறப்புக்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். பிறருக்காக செலவுகள் செய்யலாம். எங்காவது வெளியில் செல்லும் போது உடனுக்குடன் பஸ் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள்.

**மகரம்:**
விமர்சித்த சிலரே உங்களைப் பாராட்டுவர். செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிப்பதில் நாட்டம் செல்லும். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். சில விடயங்களில் கர்வம், திமிராக நடந்து கொள்வீர்கள்.

**கும்பம்:**
கோயில்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். கடிதங்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம். உங்களின் திட்டம் ஒன்றை மற்றவர்களிடம் சொல்லாமல் ரகசியமாக வைப்பீர்கள். உங்களின் சொந்த விவகாரங்களில் மற்றவர்கள் தலையிட அனுமதிக்க வேண்டாம்.

**மீனம்:**
நல்ல காரியங்களைச் செய்யும் நாள். நீண்ட தூர பயணங்கள் செல்ல திட்டமிடுவீர்கள். பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கும். பணத் தேவைகளை சரி செய்ய சிலரிடம் கடன் வாங்குவீர்கள். கடந்த காலத்தில் செய்த தவறு ஒன்றை நினைத்து இன்று வருத்தம் அடைவீர்கள்.

# பல்கலை. புகுமுக

# தலைமை

# பயனுள்

**பல்கலைக்கழக புகுமுக மாண**
**முகாம்களில் வைத்து**
**தலைமைத்துவப் பயிற்சி நெறி**
**என்று அலசும் இந்தக் கட்டு**
**சேவையான சந்தேசியவில் ஒ**
**தமிழாக்கம் இங்கு தர**



பல்கலைக்கழக மாணவர்களால் முன்வைக்கப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக 'தலைமைத்துவப் பயிற்சி' ஊடாக அவர்களை மூளைச்சலவை செய்ய முயற்சிக்கிறார்கள் என்று அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டை உயர்கல்வி அமைச்சு மறுக்கிறது. மூன்று வாரங்கள் வரை மேற்கொள்ளப்படுகின்ற தலைமைத்துவப் பயிற்சியானது பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான முதல் படி என்று அரசு கூறுகின்றது.

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மூன்று வார கால தலைமைத்துவப் பயிற்சிநெறியை உயர் கல்வி அமைச்சானது இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியது. இராணுவ முகாங்களில் வைத்து இந்தப் பயிற்சி நெறி வழங்கப்படுகிறது. அதுவே தற்போதைய சர்ச்சைகளுக்குக் காரணம்.

இந்தப் பயிற்சிநெறி உருவாக்கப்பட்ட உண்மையான நோக்கத்தை எதிர்த்து பல்கலைக்கழக மாணவர் தலைவர்கள் கடும் போராட்டங்களை நடத்தினர். அதனால் தற்காலிகமாக இப்பயிற்சி நெறியில் மாற்றம் கொண்டுவரப்பட்டது.

அரசு அறிமுகப்படுத்திய தலைமைத்துவப் பயிற்சியானது புதிய தலைமுறையினரைத் தனக்கு ஆதரவானவர்களாக மூளைச் சலவை செய்வதற்கான ஒரு நடவடிக்கை என்று பல்கலைக்கழக மாணவர் தலைவர்கள் உடனடி அறிவித்தல் ஒன்றை மேற்கொண்டனர்.

''இந்தப் பயிற்சி நெறி ஏன் திடீரென விரைவாக ஒழுங்குபடுத்தப்பட்டது. இது தொடர்பாக எந்தவொரு வெளிப்படையான விவாதங்களையோ கலந்துரையாடல்களையோ அரசு மேற்கொள்ளவில்லை. உண்மையில் தலைமைத்துவப் பயிற்சி என்ற போர்வையில் மாணவர்களுக்குப் பலவந்தமாக இராணுவப் பயிற்சி வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது'' என்று உள்ளக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளரான சஞ்ஜீவ பண்டார தெரிவித்தார்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜெயந்த நவரட்ண மறுத்தார். ''இந்தக் குற்றச்சாட்டுக்களில் எந்த உண்மையுமில்லை. பல்கலைக்கழகக் கல்வியை முற்றுமுழுதாக மாற்றியமைப்பதற்காகத் திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் பகுதியாகவே இந்தத் தலைமைத்துவப் பயிற்சி நெறியும் அமைந்துள்ளது'' என சுனில் ஜெயந்த நவரட்ண, பி.பி.சி சிங்கள சேவையிடம் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்கள் இவரது கூற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தப் பயிற்சிநெறிக்குச் சென்ற மாணவர்களில் பெரும்பாலானோர், பல்வேறு இராணுவ முகாம்களிலும் உடல், உள ரீதியான பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர் என சஞ்ஜீவ பண்டார குற்றம் சாட்டுகிறார்.

ஆனால் தலைமைத்துவப் பயிற்சிநெறி தொடர்பாகப் பல்கலைக்கழகப் புகுமுக மாணவர்களின் பெற்றோர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர் என்று கலாநிதி நவரட்ண சுட்டிக்காட்டுகிறார்.

''99.9 சதவீத மாணவர்கள் பயிற்சி தொடர்பாக மிகவும் மகிழ்ச்சி கொண்டிருந்தனர். இந்தப் பயிற்சி நெறி தொடர்பாக பி.பி.சி. செய்தி நிறுவனத்துக்குத் திருப்தி ஏற்படவில்லை எனில், மாணவர்களின் பெயர்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்களை என்னால் உங்களிடம் தரமுடியும்'' என்றும் அவர் சவால் விட்டார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் இந்தப் பயிற்சியின் மூலம் ''மகிழ்ச்சியடைந்த'' மாணவர்களின் விவரங்களைத் தருமாறு ஓகஸ்ட் 06 அன்று பி.பி.சி. செய்தி நிறுவனத்தின் சிங்கள சேவையானது உயர்கல்வி அமைச்சுக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியது. ஆனால், அதற்கான பதில் இன்னமும் கிடைக்கவில்லை.

அதற்கு மறுதலையாக தலைமைத்துவப் பயிற்சி



(படங்கள்: விமானப்படையினரின் இணையத் தளம்)






களை பெற்ற மாணவர்களில் சிலர் கலாநிதி நவரட்ணவின் கூற்றை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்.

''எந்தவொரு பயிற்சித் திட்டத்திலும் சில சாதகமான விடயங்கள் காணப்படுவது வழமையாகும். ஆனால், இந்தப் பயிற்சி நெறி மூலம் பெருமளவு பயன் கிடைக்கிறது என்று சொல்லிவிட முடியாது. தன்னம்பிக்கையைக் கட்டி வளர்ப்பதற்கான செயற்பாடுகள் மற்றும் எந்தவொரு சவால்களையும் எதிர்கொள்வதற்கான பயிற்சிகள் வழங்கப்படும் என நான் எதிர்பார்த்திருந்தேன். ஆனால் இவை எவையும் நடைபெறவில்லை'' என றுகுணுப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# …கமாணவருக்கான …மத்துவ பயிற்சி …ள்ளதுதானா?

…ாணவர்களுக்கு இராணுவ
…து வழங்கப்படும்
…நெறி தேவையானதுதானா
…ட்டுரை பி.பி.சி. சிங்கள
… ஒலிபரப்பானது. அதன்
… தரப்படுகிறது.





…ட்ட மலன் சுனெத் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

இதனை களனிப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு …செய்யப்பட்ட மாணவியும் ஏற்றுக்கொண்டுள்ளார். …ச்சின்தனா லக்மலி சுரவீர "எமது குடும்பங் …ளைவிட்டு வேறிடங்களில் எம்மைப் போன்ற …ண்பர்களுடன் ஒன்றுகூடி இருப்பதென்பது மிக …வடிக்கையானது. ஆனால் உடற்பயிற்சிகள் மற் …ும் காலையில் நேரத்திற்கு எழும்புதல் போன்ற …ற்றைத் தவிர குறிப்பிடத்தக்க எந்தவொரு தலை …மைத்துவப் பயிற்சியும் தரப்படவில்லை" என …வர் மேலும் பி.பி.சி. சந்தேசியவிடம் தெரிவித்தார்.

அடுத்த தலைமுறையினரை மூளைச்சலவை செய்வதற்கான ஓர் உத்தியாகவே தற்போது இந்தப் பயிற்சிநெறி வழங்கப்படுவதாக, பல்கலைக்கழக நுழைவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மற்றொரு மாணவன் தெரிவித்தார்.

"எந்தவொரு சவால்களையும் எதிர்கொள்ளவல்ல, பூகோள ரீதியாக அங்கீகரிக்கப்படக்கூடிய நல்ல தொரு குடிமக்களை உருவாக்குவதே எமது இலக்காகும்" என கலாநிதி நவரட்ண தெரிவித்தார்.

"இது போன்ற எதனையும் நான் பெற்றுக் கொண்ட பயிற்சியின் மூலம் அடைந்து விட்டதாக உணரவில்லை" என மலன் சுனெத் ஜயதிலக என்ற மாணவர் குறிப்பிட்டார். இதனை சச்சின்தனா லக்மலி சுரவீர ஏற்றுக்கொண்டார்.

"மூன்று வார காலத்திற்குள் தலைவர் ஒருவரை உங்களால் உருவாக்க முடியாது" என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத் துறைப் பேராசிரியரான ருடோர் கலிங்க சில்வா தெரிவிக்கிறார். அத்துடன் வேறு சில முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் குறிப்பிட்டார்.

"இந்தப் புதிய பயிற்சி நெறி தொடர்பாக உயர் கல்வி அமைச்சானது பல்கலைக்கழக ஆணைக் குழுவினருடன் கலந்துரையாடவில்லை" என பேராசிரியர் மேலும் தெரிவித்தார். ஆனால், இதற்கான பூர்வாங்கப் பணிகளில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஆதரவு பெறப்பட்டதாக கலாநிதி நவரட்ண தெரிவித்தார்.

"பல காலங்களாகப் பல்கலைக்கழகங்கள் நிதி மற்றும் ஏனைய வளப் பற்றாக்குறைகளை எதிர் நோக்குவதால், இப்பயிற்சி நெறிக்கான நிதி உரிய முறையில் செலவழிக்கப்படுகிறதா என்பது தொடர்பாக சந்தேகம் எழுந்துள்ளது" எனவும் பேராசிரியர் சில்வா மேலும் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகப் புகுமுக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிநெறி தொடர்பாக, ஐ.நாவுக்கான முன்னாள் இலங்கைப் பிரதிநிதி ஜெயந்த தனபாலவைத் தலைவராகக் கொண்ட வெள்ளிக்கிழமை மன்றம் என்ற பல்லின அமைப்பும் பல்வேறு கல்விசார் அமைப்புக்களும் தமது விமர்சனங்களை வெளிப்படுத்தியிருந்தன.

"விசேட ஆளுமை விருத்தித் திறன் பயிற்சிகள் மற்றும் இராணுவப் பழக்கவழக்கங்கள் என்பன ஓர் இராணுவத்தை உருவாக்குவதற்குப் பிரதானமானவை. மாறாக எதிர்காலத்தில் நாட்டின் அபிவிருத்தியில் பங்குகொள்ளவுள்ள இளையோருக்காக உருவாக்கப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி நெறியில் இவை உள்ளடக்கப்பட வேண்டிய தேவையில்லை" என வெள்ளிக்கிழமை மன்றம் என்ற அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

"இராணுவப் பாணியிலான தலைமைத்துவப் பயிற்சிகள், படை உருவாக்கம், அவற்றின் நடத்தைப் பாங்குகள் என்பவற்றை மாணவர்கள் மத்தியில் ஊக்குவித்தலானது, பல்கலைக்கழகங்கள் தமது மாணவர்களுக்கு வழங்குகின்ற சுதந்திரமான சிந்தனையாற்றல், கருத்து வெளிப்படுத்தல், பலவந்தமான செயற்பாடுகளை எதிர்த்தல் போன்ற நற்பண்புகளுக்கு முரணானவை" என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(நன்றி:புதினப்பலகை)



## மரணபயமும் மறுபிறப்புக்களும்



"தன் மீது பற்று" என்பது உடலைத் தாண்டி உயிரைப் பாதிக்கும் ஒன்று. அது பலவகைத் துன்பத்துக்குக் காரணமாகிறது. அது பற்றி சிறிது பார்ப்போம்.

தன் மீதுள்ள பற்றுக் காரணமாக மரணம் நிகழுமோ என்று அறிவு அஞ்சுகின்றது. அச்சம் அகலாதவரை இன்பம் இருக்குமா? இல்லை. அச்சத்தை வென்றால் தான் ஆனந்தம்.

எனவே ஆசையின் கிளையாகிய "தன்பற்று" இரு பிரிவுகளாகி நம் இன்பத்தைக் குலைக்கிறது.

தன்மீதுள்ள பற்று இருவகை துன்பங்களைத் தரும். மரணம், பயம், மறுபிறவி பற்றியபயம்.

ஓடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் இருந்த நாம் கீழே கிடக்கிறோம். உற்றார், உறவினர் சுற்றி அழுது கொண்டிருக்கிறார்கள். அந்த மரணத்தை நினைத்துவிட்டால் மிகப்பெரிய துன்பம். இந்தத் துன்பத்தை தீர்க்க வழி என்ன?

மரணம் நிச்சயம். பிறப்புக்கு மறுபக்கம் ஆன சாவு தவிர்க்க முடியாத ஒன்று. யமன் நம் உயிர்த்தோழன். கிழிந்த உடைகளை நாம் எறிந்துவிடுவது போல் நைந்த உடலை எறிந்துவிட உயிர்க்கு உரிமை உண்டு. இத்தகைய தெளிவே மரணபயத்துக்கு மாமருந்து.

இன்னும் ஒன்று சொல்கிறேன். கடவுளை நெருங்க மரணமும் நல்ல வழி என்ற சிந்தனை இன்னும் இனிமையானது.

"கார்மாமிசை காலன் வரில் கலபத்து
ஏர் மாமிசை வந்து எதிர்ப் படுவாய்"

என்ற எண்ணம் எவ்வளவு கம்பீரமானது. வாழ்வுக்கு கசப்பு வந்தால் மரணம் எவ்வளவு இனிப்பானது என்பது புலப்படும். அப்போதும் ஓர் அச்சம் வரும். அதுதான் மறுபிறவி பற்றிய பயம்.

மரணத்துக்குப்பிறகு நம் வாழ்வு முடிவதில்லை. அடுத்த பிறவி உண்டு என்ற அறிவிப்பு, நம் நிம்மதியின் பகைவன். அடுத்த பிறப்பு எங்கு, எப்படி, எவ்வாறு அமையுமோ என்ற கவலை இருந்தால் துன்பம் நிலைக்கும்

மார்ச் மாதத்தில் அரசு ஊழியர்களே மாற்றல் உத்தரவு எந்தப் பகுதிக்கு வருமோ என்று அஞ்சும்போது, மறுபிறவி மாற்றல் உத்தரவுக்கு அறிவுள்ளவன் அஞ்சமாட்டானா?

மறுபிறவியை பற்றிய அச்சம் கொஞ்சம் அசட்டுத்தனமானது. அதுவரை வாழ்ந்த வாழ்வைப் பற்றற்ற முறையில் அமைத்தவனுக்கு மறுபிறவி ஏது? சரணாகதி என்னும் கந்தவேள் கழலைப் பற்றியவனுக்கு பிறவித்துயர் உண்டா? இல்லையா! ஆசை இல்லையேல் பிறப்பு இல்லை.

"அவா என்ப எல்லாம் உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவா அப்பிறப்பீனும் வித்து"

என்பது தமிழ்மறை.

இவ்வாறு துன்பத்தை ஆராய்ந்து துன்பத்தை நீக்கும் நிலையே இன்பத்தின் முதற்படி என்று தெளிவு செய்து கொள்வது சிறந்த முறை.

"ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆய்வரும் இன்பங்கள்"

என்ற அருள்மொழிக்குச் செவி கொடுங்கள்.

"ஆசை நிகளம் துகளாயினபின்
பேசா அநுபூதி பிறந்தது"

என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இனி அநுபூதியின் இரண்டாவது நிலைக்கு வருவோம். ஆசையை எப்படி விடுவது? விட்டால் எதையாவது பற்ற வேண்டுமா? பற்றினால்தான் விடமுடியுமா? இத்தகைய வினாக்களுக்கு விடை காண்பதுதான் நம் அடுத்த முயற்சி.

மனிதனால் எல்லாவற்றையும் விட்டுவிட முடியுமா? முடியாது. நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பங்கு முடியவே முடியாது. காரணம், எதையேனும் சாராமல் இருக்க நாம் அறியோம்.

மூவகைப் பற்றுக்களையும் விட்டால் எதையாவது பற்றத் தவிக்கும் மனம். சிலருக்கு வேறு எதையாவது பற்றினால்தான் இவற்றை விடவே முடியும். அதற்கு என்ன வழி?

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்பது திருக்குறள்.


பற்றற்ற பரம்பொருளைப் பற்றினால் பற்றுக்கள் தாமே அகலும் என்பதே வாழ்க்கையின் நிதர்சனம். இப்போது அநுபூதியின் முதற்பாட்டை கவனிக்க. "பாடும்பணியே பணியாகத்தா" என்கிறார் அருணகிரிநாதர். அந்த ஏகாரம் முக்கியமானது.

பாடும் பணி தவிர வேறுபணி வேண்டாம் என்பது அவர் முடிவு. பற்றற்றான் பற்று தவிர வேறு பற்றுவேண்டாம் என்பது அதன் பொருள். ஆசை நோய்க்கு மருந்தினை, அநுபூதியின் ஆரம்பத்தை, முதற்பாட்டில் தெளிவாக்கினார் அருணை முனிவர்.

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டு நினைவஞ்சலி



## சின்னத்தம்பி தியாகராசா

கண்மகிழ
05.05.1947

நெஞ்சம் நெகிழ
07.09.2009

ஆண்டிரண்டு சென்றபோதும்
ஆறவில்லை எம் துயரம்
மண்ணுலகில் வாழ்ந்தது போதுமென்று
மனமகிழ்ந்து நீர் விண்ணுலகு சென்றாலும்
மாறவில்லை எம் துயரம் மறக்கவில்லை
உங்கள் திருமுகம் நிலையில்லா இவ்வுலகில்
நீர்க் குமிழி போன்று
நிலையற்றது தான் மனித வாழ்க்கை
என்ற போதும்
நிலைத்துவிட்ட உங்கள் அன்பால்
நினைவிழக்க முடியாத நாம்
நித்தமும் நீந்துகின்றோம் கண்ணீரில்
குடும்பத்துக்கு நல்ல தலைவனாய் - இந்த
குவலயத்தில் நல்ல மனிதனாய் என்றும்
கூடி வாழ்ந்து உறவு கொண்ட தந்தையே!
கூற்றுவனின் அழைப்பினாலே
கூடுவிட்டு சென்றதேனோ
புலர்கின்ற ஒவ்வொரு நாளினிலும்
புங்குடுதீவுக் கண்ணகையம்மன்
கழல் போற்றி உங்கள் ஆன்மா
சாந்தி பெற வேண்டுகின்றோம்
இரண்டாமாண்டு நினைவினிலே
இதயம் நொந்து
கண்ணீரால் அர்ச்சிக்கின்றோம்
சாந்தி என்றும் - பெற்றிடவே.

இல. 27, சீனிவாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர் தேசத்தை சிங்கள மயமாக்க அரசு கங்கணம்

வடக்குக்கும், கிழக்குக்கும் வெளியே உள்ள நபர்களால் வடக்கினதும், கிழக்கினதும் பல பகுதிகளில் குடியேற்றம் செய்யப்படுவதுடன், அண்மையிலே முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கரையோரப் பகுதிகளிலே புதிய நிர்வாகப் பிரிவுகளை உருவாக்குவதன் மூலமாக அதன் புள்ளி விவரங்கள் மாற்றியமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:

இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமையேற்று, ஐ.நா. மனித உரிமைகள் சங்கத்திலே கலந்து கொண்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க செப்டம்பர் 12 ஆற்றிய உரையின் உள்ளடக்கங்களை அறிந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆச்சரியப்பட்டது. குறிப்பாக, அவர் இனங்களுக்கிடையிலான நல்லுறவுக்கான அரசின் அணுகுமுறை இனங்களுக்கிடையிலான நம்பிக்கையைக்கட்டியெழுப்புவதிலேயேவலியுட்டமாயுள்ளது என்று கூறியதைக் கவனத்திற் கொள்ள விரும்புகிறோம். இலங்கையிலுள்ள தமிழர்களின் அனுபவம் இந்தக் கோரிக்கையை ஆதரிக்கக்கூடியதாக இல்லை.

அரசின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லுறவைக் கட்டியெழுப்பும் ஆணைக்குழு மே 2010 இலே நியமிக்கப்பட்டது. இந்தப் பழுதுள்ள ஆணைக்குழு எல்லைப்பட்ட அதிகார வரம்புகளுக்குள் சொற்பளவிலான இடைக்காலப் பரிந்துரைகளை அரசுக்குச் சமர்ப்பித்தது. அவை பின் வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது.

✱ தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களின் பட்டியலை வெளியிடுவது.

✱ தடுத்து வைத்துள்ளோருக்கு எதிரான வழக்குத் தொடுத்தலைத் தீவிரப்படுத்துவது அல்லது அவர்களை விடுவிப்பது.

✱ எந்த ஓர் அரச முகவர் ஸ்தாபனத்தினதும் பாவனைக்கெனத் தனியார் நிலங்கள் சுவீகரிக்கப்பட மாட்டா எனும் தெளிவான அரசின் கொள்கையை வெளியிடுவது.

✱ வடக்கு, கிழக்கில் உள்ள சட்ட விரோத ஆயுதக்குழுக்களைநிராயுத பாணிகளாக்குவது.

இந்தப் பரிந்துரைகளை எவ்வித கால தாமதமுமின்றி அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க கோரியுள்ளார். குறிப்பாக, ஆணைக்குழு தனது பரிந்துரைகளை முன்வைத்த 13 செப்ரெம்பர் 2010 தினத்திலிருந்து சரியாக ஒருவருடத்தின் பின்பு இப்படியான ஒரு கோரிக்கை வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆயினும், இந்தப் பரிந்துரைகளிலே ஒன்றுதானும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இதுவரை அமுல்படுத்தப்படவே இல்லை.

ஆயினும் அரசு தொடர்ச்சியாக சர்வதேச சமூகத்துக்கு தப்பான தகவல்களை அனுப்புவதிலேயே குறியாக உள்ளது. உதாரணமாக, வெளியுறவு அமைச்சர் ஜனவரி 2011இலே தூதுவராலயத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும் போது தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களின் பட்டியல் அவர்களின் இரத்த உறவுகளால் பார்க்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்டு தயாராக உள்ளதாக அறிவித்தார். ஜனவரி 2011இலே அரசப் பிரதிநிதிகள் குழுவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பித்த முதல் பேச்சுகளிலே எழுப்பிய கரிசனையின் பதில் அறிவிப்பாகவே இது வந்துள்ளது. ஆயினும், அந்தத் தகவல் உண்மையற்றது என்பது மட்டுமன்றி, அதைத் தொடர்ந்து தடுத்துவைத்துள்ளோரின் பட்டியலை கிடைக்கச் செய்வதாக வழங்கிய பல வாக்குறுதிகளின் பின்புங்கூட இதுவரைக்கும் அது அமுல்படுத்தப்படவேயில்லை.

தனது சொந்த அமைப்பின் சொற்பளவிலான பரிந்துரைகளைக்கூட அமுல்படுத்த அரசு தவறியுள்ளமையானது, இலங்கையிலே இனங்களிடையே நல்லு றவைக்கட்டியெழுப்புவதற்கு மெய்யானதும், நம்பகத்தன்மை கொண்டதும், சுயாதீனதுமான ஓர் அமைப்புஇருக்கவேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டுவதாய் உள்ளது. இலங்கைக்கான தரிசனமாக ஜனாதிபதி ராஜபக்ஷ அறிவித்த ‘சமாதானமும், பண்மியமும், சமத்துவமும் கொண்ட ஒரு சமூகம்’ என்பது உண்மைகளை ஒத்துக்கொள்வதிலும், இரு பகுதியினரின் மிலேச்சத்தனங்களாலும் பாதிக்கப்பட்டவர் களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதிலுமே தளங்கொண்டிருக்க வேண்டும் எனும் தனது நம்பிக்கையை யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்களின் ஜனநாயக ரீதியில் தெரிவான பிரதிநிதிகள் என்ற வகையிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறது. நிபுணர் குழுவின் அறிக்கை மார்ச் 2011இலே வெளி வந்தபோது நாம் வெளியிட்ட அறிக்கையை இங்கே மீட்டிப் பார்க்க விரும்புகிறோம்.

ஆயுதப் போராளிகளுக்கு எதிராக அரசு தொடுக்கும் எந்த ஓர் இராணுவ நடவடிக்கையின் போதும் நிராயுதபாணிகளான தமிழ் குடிமக்கள் தீங்குக்கு உள்ளடக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் கடப்பாடு இலங்கை அரசுக்கு உள்ளது என்பதை நாம் தொடர்ச் சியாக வலியுறுத்தி வந்திருக்கிறோம். ஆயினும், இலங்கை அரசு குடிமக்கள் வாழும் பகுதிகள் மீது தொடர்ச்சியான குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு கனரக மற்றும் பல்குழல் சுடுகலன்களை அப்பிரதேசங்களிலே பயன்படுத்தி, ஆழ ஊடுருவும் பிரிவுகளைக் கொண்டு தாக்குதல்களை மேற்கொண்டதால் ஆயிரக்கணக்கான நிராயுதபாணிகளான தமிழ் குடிமக்கள் தம் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்தும், அவர்களின் வீடுகளும், சொத்துகளும் அழிக்கப்பட்டும், அவர்களை நிர்க்கதியாக்கியுள்ளது.

நிராயுதபாணிகளான தமிழ் குடிமக்கள் அடிப்படைத் தேவைகளான இருப்பிடம், உணவு, மருந்து, குடிதண்ணீர் ஆகியவை கிடைக்கப்பெறாது அவதியுற்றனர். வைத்தியசாலைகளும், நிவாரண உதவி வழங்கிய நிலையங்களும் ஷெல் தாக்குதல் களுக்கு உள்ளாகின. யுத்தப் பிரதேசங்களுக்குள் இருந்த நிராயுத பாணிகளான தமிழ் குடிமக்களின் பாதுகாப்பையோ, நல்வாழ்வையோ அல்லது அவர்களது மாண்பையோ அற்பமானதாகக் கொண்டே இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நீதி விசாரிப்பற்ற மரணதண்டனைகளும், நிராயுதபாணிகளான தமிழ் குடிமக்களின் காணாமல் போதல்களும், வெள்ளை வான் கடத்தல்களும் தங்குதடையின்றி இடம்பெற்றும் வந்தன. இப்படியான பயங்கரமான சம்பவங்கள் சமகாலங்களிலே நாடாளுமன்றத்தின் முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால்தெரிவிக்கப்பட்டு அனைவரின் கவனத்துக்கும் அவை கொண்டு வரப்பட்டன.

இனங்களுக்கிடையிலான நல்லுறவிலே ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி மஹிந்த சமரசிங்கவின் கோரிக்கைக்கு மாறாக வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழ் மக்கள் யுத்தம் முடிந்துங்கூட இன்னமும் தொடர்ந்தும் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அப்படியான வன்முறைகளின் தோற்றப்பாடுகளுள் பின்வருவனவும் உள்ளடங்கும்.

1. 2009இலே இராணுவத்தினரால் நடத்தப்பட்ட முகாம்களுக்குள் 3 லட்சத்திற்கும் அதிகமான வன்னி மக்கள் அடைத்துவைக்கப்பட்டது. பின்னர் தமது சொந்த இடங்களுக்கு மீளும்படி யாக அனுமதிக்கப்பட்ட மக்கள் அங்கு மீள் குடியேறுவதற்கு அவர்களுக்கான உதவிகள் வழங்காமல் மறுக்கப்பட்டது.

2. தமது சொந்த இடங்களுக்குத் திரும்பாமல் இடைத்தங்கல் முகாம் களிலே இன்னமும் முடங்கியவர்களா கவோ அல்லது தமது உபசாரக் குடும்பங்களின் தயவிலே வாழும் நிர்ப்பந்தத் துக்குள்ளேயே இன்னமுமாகத் தொடர்ந்து இடம்பெயர்ந்துவரும் சுமார் 2 இலட்சம் மக்கள். இவர்களுக்குள் யாழ். குடாநாட்டின் வலிகாமம் வடக்கில் இருந்தும், திரு கோணமலை மாவட்டத்தின் சம்பூரில் இருந்தும், வன்னியின் பல்வேறு இடங்களில் இருந்தும் இடம்பெயர்ந்தோரும் அடங்குவர்.

3. தமிழ் மக்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் இராணுவத்தாலும் மற்றும் பெரும்பான்மை சமூகத்தாலும் பலவந்தமாக சுவீகரிக்கப்படுதல். இப்படியான அப்பட்டமான உரிமை மீறல்களைத் தீர்த்துவைப்பதற்கு இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

4. எவ்வித பகிரங்க அறிவிப்பும் விடப்படாமல் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள அரச நிலங்கள் பெரும்பான்மை சமூகத்தினருக்கு அபிவிருத்தி என்ற போர்வையின்கீழ் ஒதுக்கிக்கொடுக்கப்படுகிறது.

5. வடக்குக்கும், கிழக்குக்கும் வெளியே உள்ள நபர்களால் வடக்கினதும், கிழக்கினதும் பல பகுதிகளில் குடியேற்றப் படுவதுடன், அண்மையிலே முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கரையோரப் பகுதிகளிலேயே புதிய நிர்வாகப் பிரிவுகளை உருவாக்குவதன் மூலமாக அதன் புள்ளி விவரங்கள் மாற்றியமைக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

6. இந்து மற்றும் கிறிஸ்தவ வணக்க ஸ்தலங்களும் வேறு கலாசார அமையங்களும் அழிக்கப்பட்டு அபகீர்த்திக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக கங்குவேலியிலே உள்ள சரித்திரபூர்வமான அகஸ்தியார் ஸ்தாபனமும், கிண்ணியா வெந்நீர் கிணறுகளும் அவற்றின் மத மற்றும் கலாசார அறிமுக அடையாளங்களை இல்லாமலாக்கும் விதத் திலே மாற்றியமைக்கப்படுகின்றன.

7. தேர்தல் காலங்களில் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தும்படிக்கு திட்டமிட்ட விதத்திலே வன்முறைகளைப் பயன்படுத்துதல்.

8. வடக்கு மற்றும் கிழக்கிலே இடம்பெறும் சட்டபூர்வமான பொதுமக்கள் பேரணிகளை இராணுவ சக்தியைக் கொண்டு நசுக்குதல், அண்மையிலே மட்டக்களப்பு, பொத்துவில், அம்பாறை மற்றும் யாழ்ப்பாணத்தில் நாவாந்துறை, கொக்குவில், சுழிபுரம் ஆகிய பகுதிகளிலே இடம்பெற்ற நிகழ்வுகள் இதற்குச் சான்றுகளாகும்.

9. சிறுபான்மையினரை அடக்கி ஆளும் கருவியாகப் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைகள்.

மேலும் யுத்தத்தின் பின்பு இலங்கையிலே சகஜநிலை தோன்றியுள்ளதற்குச் சான்றாக அவசரகாலச்சட்டத்தை அகற்றி உள்ளதென்பதை எவ்வித கண்டன விமர்சனமுமில்லாது ஏற்றுக்கொள்ளாதிருக் கும்படிக்கு நாம் எச்சரிக்கையாகவும் இருக்கிறோம்.

மெய்யான ஜனநாயக மற்றும் சட்ட வரம்புக்குட்பட்ட ஆளுகையை நோக்கி இலங்கை சீரமைவதற்கு அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதத் தடைச்சட்டமும் (பி.டி.ஏ.) நீக்கப்படல் வேண்டும் என நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளோம். அண்மையிலே நீக்கப்பட்ட அவசரகாலச்சட்டத்துள் உள்ளடங்கியுள்ள கொடூரமான பகுதிகளாக இருந்து வந்த பிடிவிறாந்து இல்லாமலே கைது செய்யவும், சோதனை செய்யவும், பறிமுதல் செய்யவும் அதிகாரம், குற்றப்பத்திரிகை சுமத்தாமலேயே சிறையிலே தடுத்து வைக்கும் அதிகாரம், பொலிஸார் முன்பு குற் றத்தை ஒத்துக் கொண்டமை நீதிமன்றத்தின் முன்பான சான்றாக முன் வைக்கப்படுதல் மற்றும் அப்படியான ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறப்பட்டதில் உள்ளடங்கியுள்ள பாரங்கள் போன்றவற்றை மீளாமை போன்றவை பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குள்ளும் உள்ளடங்கியுள்ள தால், அவசர காலச் சட்டத்தை நீக்குவதானது இக் கொடூரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்காது.

அப்படியாக இருந்துங்கூட, அவசர காலச்சட்டம் நீக்கப்பட்டதால் அதன் கீழான வழங்குதலின்படி (பல்வேறு வழங்குதல்களும் அதிகாரங்களும்) 2005 இன் இல:1 ஒழுங்குவிதியின்கீழ் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும் எனும் எமது நம்பிக்கையை நாம் பகிர்ந்துகொண்டோம். ஆனால், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அவசரகாலத்து அதிகாரங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஒழுங்கு விதிகள் பற்றியதான அரசின் தீர்மானத்தைப்பற்றி நாம் வெஞ்சினமடைந்துள்ளோம். இந்த ஒழுங்குவிதிகள், அவசர காலச்சட்டம் நீக்கப்பட்டாலும் கூட, அவசரகால ஆட்சியின் தைய லில்லாத தொடர்ச்சியை உறுதிப்படுத்து வதுடன், அதற்குட்பட்டவர்கள் மீது அதனை நிறைவேற்றுவோருக்கு அசாதாரண அதிகாரத்தை நிரப்பிக் கொடுப்பதாயும் உள்ளது.

ஐ.நா. பொது மன்றம் நிறைவேற்றிய தீர்மானமான 60/147 இலே சர்வதேச மனித உரிமைகளின் சீரியலான மீறுதல்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகளின் திரட்டிய மீறுதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உரிமைகள், தீர்வுகள் மற்றும் திருத்த முயற்சிகள் போன்றவற்றுக்கான முன்னுரையை இங்கே மீட்டிப்பார்க்க விரும்புகிறோம். இந்த வழங்கலானது ‘‘பாதிக்கப்பட்ட மக்களைக் கனப்படுத்துவதிலே’’ அதற்குரிய தீர்வுகளால் நன்மை பெறுவதை இனங்காண்கிறது.

அத்துடன் சர்வதேச சமூகம் பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப் பிழைத்துள்ளவர்கள் மற்றும் எதிர்கால சமூகங்கள் போன்றவர்களின் கதியுடன் உண்மைத்தன் மையைப் பேணி வருகிறது. இப்படியான சர்வதேச விழுமியங்களின்படி, அரசானது பாதிக்கப்பட்டவர்களின் மனத் துயரைத் துடைத்து, அவர்களின் துயரங்களையும் துடைத்து விடும் என்பது எமது நம்பிக்கை.

இப்படியான சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறுதல்களால் பாதிக்கப்பட்டவர்கள் போன்றதான சர்வதேச விழுமியங்களின் ஒளியிலே பாதிக்கப்பட்டவர்களின் துயரங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு அரசுக்குக் கடப்பாடு உண்டு.

உண்மையிலேயே 26 மே 2009இலே ஐ.நா. செயலாளர் நாயகம் மேற்கொண்ட கூற்றின் இணைக்கூறாக வெளியானவைகளிலே இலங்கையின் அரசானது மனித உரிமைகளின் பாதுகாப்பு அதற்கான வலுவான அர்ப்பணிப்பு போன்றவைகளிலே கூட்டாகச் செயற்படல் வேண்டும். செயலாளர் நாயகம் வெளிப்படையாகக் கோடி காட்டியவைகளில் ‘சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் முக்கியத்துவமும்’ உள்ளடங்கும். அரசு இப்படியான துயரங்களை விசாரிப்பதாக வெளிப்படையாக அறிவித்தது. இந்த அர்ப்பணிப்பை பூர்த்தி செய்யும்படியாக நாம் அரசை அழுத்தி ஏவுகிறோம்.

அதே கூட்டு அறிக்கையிலே ஜனாதிபதி ராஜபக்ஷவும், செயலாளர் நாயகமும், ‘‘நீடியகால சமூக பொருளாதார அபிவிருத்தியை உறுதிசெய்வதிலே சகல சமூகங்களினதும் துன்பதுயர்கள், அவர்களின் எதிர்பார்ப்புகள் ஆகியவை கருத்திற் கொள்ளப்பட்டு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை நோக்கி நகர்வது அடிப்படையானதாக அமையும்’’ என்பதிலே இணக்கம் கண்டார்கள்.

ஜனாதிபதி ராஜபக்ஷ மேலும், ‘‘13ஆம் திருத்தச்சட்டத்தின் நடைமுறைப்படுத்துவதில் தொடர்புபட்ட உறுதியான தீர்மானத்தை வெளிப்படுத்தி, தமிழ்க்கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் அகன்று பட்ட ஒரு பேச்சை ஆரம்பிப்பதற்கும் இப் புதிய சூழ்நிலைகளின் கீழ் இந்த நிகழ்வை மேலும் தகவூட்டி, இலங்கைக்கான நிரந்தர சமாதானத்தையும், அபிவிருத்தியையும் செயற்படுத்துவதாக அறிவித்திருந்தார்.’’ இரண்டு வருடங்கள் கழிந்துவிட்ட நிலைமையிலுங்கூட மேற்படியான அர்ப்பணிப்புகளையிட்ட எந்த ஒரு முன்னேற்றமுமே இடம்பெறவில்லை என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எனவே, இலங்கையின் நிலைமையை சர்வதேச சமூகத்துக்குக் காட்டும்போது அரசு கூடுதலான நேர்மையும், உண்மைத் தன்மையும் கொள்ளும்படியாக நாம் நெருக்கி ஏவுகிறோம். பன்முக இனம், பன்முக மதம் மற்றும் பன்மிய கலாசாரம் கொண்ட தற்போதைய சூழ்நிலையிலே வாழும் இலங்கை மக்களுக்கு இங்கே தொடர்ந்துவரும் தேசிய பிரச்சினைக ளுக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியிலே அரசுடன் இடைப்படுத்துவதற்கு நாம் எமது மட்டத்திலே அர்ப்பணம் கொண்டிருக்கிறோம்.- என்றுள்ளது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிமெந்து

விற்பனைக்கு உண்டு.
யாழ் சிமெந்து வணிகம்
021 320 2020


## மரண அறிவித்தல்

### முத்தையா சிவலிங்கம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை நிரந்தர வதிவிடமாகவும், யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முத்தையா சிவலிங்கம் 13.09.2011 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துள்ளார். அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

78, கலட்டி அம்மன் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


## காணி விற்பனைக்கு

சங்கானை, மல்லாகம் சந்தியில் இருந்து (மல்லாகம் வீதியில்) 100 மீற்றர் தூரத்தில் 3 பரப்பு குடியிருப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0727750023
0778696462 (8079)


# டெங்கு பரவும் சூழல் வைத்திருந்த 118 பேருக்கு எதிராக நடவடிக்கை

## வழக்குத் தொடர முன்னறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.15

கடந்த வாரம் மேற்கொள்ளப் பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக் கையின் போது, டெங்கு நுளம்பு பரவக் கூடிய வகையில் சுற்றாடலை வைத்திருந்த 118 பேர் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான முன்னறிவித்தல்கள் வழங்கப் பட்டுள்ளன.

எதிர்வரும் இரண்டு வாரகாலப் பகுதியினுள் இவர்கள் தமது சுற்றாடலை சுத்தமாக்கத் தவறின் 'நுளம்பு பெருக்கு கட் டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நீதி மன்றில் இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள சுகாதார கல்வித்திட்ட அதிகாரி எஸ்.பிரணவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் :

யாழ்.குடாநாட்டின் சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை துரிதப் படுத்தப்பட்டுள்ளது.

இதன் போது கடந்த வாரம் மட்டும் குறித்த 118 பேரும் இனங்காணப் பட்டனர். 314 இடங்களில் எச்சரிக்கைக்கான சிவப்பு நிற ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட் டுள்ளன.

எச்சரிக்கை ஸ்ரிக்கர்கள் ஒட் டப்பட்ட இடங்களுக்குச் சொந்தமான வர்கள் தமது சுற்றாடலைப் பேணத் தவறின் அவர்களுக்கு வழக்குத் தொடர்வதற்கான முன்னறிவித்தல் கடிதங்கள் வழங்கப் படும்.

கடந்த வாரம் சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளையும் சேர்ந்த 629 கிராமங்களில் ஒலிபெருக்கி மூலமாக பிரசாரம் செய்யப்பட்டுள்ளன.

ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட 365 அரச அலுவலகங்களிலும், 438 பாடசாலைகளிலும், ஆயிரத்து ஐந்து வர்த்தக நிலையங்களிலும், 165 சந்தை வடிகால்களும் 567 வணக்க ஸ்தலங்களும், 603 பராமரிப்பற்ற காணிகளும் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

334 இடங்களில் விழிப்பு ணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. 239 இடங்களில் சிரமதானம் நடைபெற்றுள்ளது. 672 டிராக்டர் லோட் கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டுள்ளன.

இவற்றில் ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட 83 அரச அலுவலகங்களிலும், 126 பாடசாலைகளி லும் 192 வணக்க ஸ்தலங்களிலும், 49 சந்தை வடிகால் களிலும், 247 வர்த்தக நிலையங்களிலும், நான்காயிரத்து 75 வீடுகளிலும் 286 பராமரிப்பற்ற காணிகளிலும் டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய சூழல்கள் இனங்காணப் பட்டுள்ளன.

பரிசோதனை செய்யப்பட்ட இடங்களிலும் டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. மழை ஆரம்பித்திருப்பதால் நுளம்புகள் பெருகுமிடங்கள் தொடர்பில் மக்கள் மிகுந்த அவதானமாக இருத்தல் வேண்டும். வாரத்தில் ஒரு தடவையாவது சுற்றாடலில் உள்ள நுளம்புகள் பெருகக் கூடிய இடங்கள் அழிக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

அந்தந்த உள்ளூராட்சி மன் றங்கள் தமக்குரிய மக்கள் பங்களிப்புடனான பாதுகாப்பான கழிவகற்றல் முகாமைத்துவத்தை திட்டமிட்டு நடைமுறைப் படுத்தி நுளம்பு பெருகும் இடங் களை அழித்தல் வேண்டும்.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ம-4)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 . 12 . 1944
உதிர்வு 19 . 08 . 2008

திருமதி லீலறோஜினி
இராஜகோபாலு

திதி – 15.09.2011

ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம் - அம்மா !
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மீனாட்சி அம்மன் கோயிலடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## வீதிப் பெயர் மாற்றக் கோரிக்கை

வலி. கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலக எல்லைப் பிரிவில் வட்டாரம் 2 இல் அமைந்துள்ள

பத்தமேனி விநாயகர் வீதியை
செல்லமுத்து வீதி

எனப் பெயர் மாற்றம் செய்து தருமாறு அப்பகுதிப் பொது மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைக்கு ஆட்சேபனைகள் அல்லது அபிப்பிராயங்கள் ஏதும் இருப்பின் எதிர்வரும் செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ அறியத் தரலாம். அத்துடன் எழுத்து மூலம் தமது அபிப்பிராயங்களை அறிவிக்க விரும்புவோர்

தவிசாளர்,
வலி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
புத்தூர் .

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அ.உதயகுமார்
தவிசாளர்,
வலி.கிழக்குப் பிரதேச சபை,
புத்தூர். (சி/3789)


## ஸ்ரீ காளிகாம்பா ஜோதிடம்





சுவாமிகள்: இலக்சுமி அம்மா சாஸ்திரி (50 வருட அனுபவம்) இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிட வல்லுநர்

கைரேகை, ஜாதகம், திருமண யோகம், வியாபாரம், வெளிநாட்டுப்பயணம், கல்வி, குழந்தைப் பாக்கியம், வேறு என்ன பிரச்சினையாக இருந்தாலும் இவரைச் சந்தித்து தீர்வு காணுங் கள்.

தொடர்பு: நியூ லலிதா ஜுவல்லர்ஸ்
இல 191, H.K. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P- 0776925916
நேரம்: காலை 6 மணி முதல் மாலை 7 மணிவரை

## மலிவு விற்பனை


15000/= உள்ள குளிர்சாதனப் பெட்டி ஜப்பான் தயாரிப்பிலானது. உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: ரெகபோத் எலக்ரோனிக்ஸ்,
இல.140, K.K.S.றோட்,
சத்திரச் சந்தி, யாழ்ப்பாணம்.


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
14.08.1981

முருகனின் அடியில்
31.08.2007

திதி: திருதியை



அமரர்
நடராசலிங்கம்
கேமலன் (மயூரன்)
(புடைவைக்கடை உரிமையாளர்)

அப்பாவே! ஆண்டு நான்காச்சப்பா இன்று, அப்பாவே! சிட்டுக்குருவியாய் சிறகடித்து
வாழ்ந்து வந்த உறவுகளைப் பாதி வழிதனில் உயிர் குடிக்க வந்தான்
நண்பன் போல் அந்தக் காலனவன் அவன் செய்த கொடுமையால் நாம்
இன்று தவிக்கின்றோம் மறைந்த எம் அப்பாவே! உங்கள்
ஆத்மாவை நாம் எங்கே பார்ப்பது.

"மயூரபதி"
கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.


# IDM Chava OPEN DAY

குழப்பங்கள் ஏதும் இன்றி உங்கள் எதிர்கால லட்சியத்தை உரிய பாதையில் சென்று வென்றிடுவதற்கான ஓர் பக்கச்சார்பற்ற ஆலோசனை நிகழ்வு, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் தொழில் புரிவோர்,பெற்றோர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

விசேட வழிகாட்டல் கருத்தரங்கு மற்றும் துறைசார் கண்காட்சி என்பன எதிர்வரும் 17ம் திகதி, மற்றும் 18ம் திகதிகளில் IDM Chavakachcheri முன்றலில் இடம்பெறும். இதில் கலந்து கொள்வதனுடாக, விரிவுரையாளர்கள்,மற்றும் வழிகாட்டுனர்கள் பலரின் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**EdHat courses launching on the day @ IDM Chavakachcheri**

இடம் : IDM Chavakachcheri முன்றல் (கொமர்சேல் வங்கிற்கு அருகாமையில்)
காலம் : 17 மற்றும் 18ம் திகதி 9மணி முதல் மாலை 5மணி வரை

**அனுமதி இலவசம்**



IDM Nations Campus
Chavakachcheri Branch
Managed by Step into(Pvt)Ltd
IDM Nations Campus
Sri Lankan Brand for Higher Education
NO: 5, 1/1 Kandy road, Chavakachcheri(Near to Commercial bank) | Tel : 021 7 200 600


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமான ஔடதங்களைத் தயாரித்து வரும் அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையம்

அச்சுவேலி-சங்கானை வீதியில் இருந்து தெற்கு நோக்கிச் செல்லும் ஜோன் ராஜா வீதியில் சமுர்த்தி வங்கிக்கு அருகில் அமைந்துள்ளது வடக்கு மாகாண சுதேச மருந்து திணைக்களத்தின் அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையம்.




பசுமை நிற கூரை அமைப்புடன் நிமிர்ந்து நிற்கும் கட்டடத் தொகுதியில் முதற்கட்டத் தொகுதி 'நிக்கொட்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் 90 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு சுதேச வைத்தியத்துறை அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுதேச வைத்தியர் திணைக்களத்தின் ஒரே ஒரு தொழிற்சாலை இதுதான். நிறுவனமயப்படுத்தப்பட்ட நிலையில் செயற்படும் முத லாவது தொழிற்சாலை என்ற பெருமைக்கு உரியது. அச்சுவேலி தொழிற்சாலை செயற்படத் தொடங்கு வதற்கு முந்திய காலப்பகுதியில் கரவெட்டியில் உள்ள சுதேச மருத்துவ நிலையத்தின் ஒரு பகுதியில் மட்டுப் படுத்தப்பட்ட அளவில் சுதேச மருந்துகள் தயாரிக்கப்பட்டன.

தற்பொழுது முழுமையாக மருந்து தயாரிக்கும் பணியில் அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. தொழிற்சாலை வளாகத்தில் சுதேச மருத்துவ மருந்தகமும் செயற்படுகின்றது. இதில் நோயாளர் தமக்குரிய நோய்களுக்கான ஔடதங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். சுதேச வைத்தியசாலையும் மருந்து தயாரிப்பு நிலையமும் ஒரே வளாகத்தில் செயற்படுவது சுதேச வைத்தியத் துறையில் இழந்திருந்த நம்பிக்கையைப் போக்கி புத்தூக்கத்துடன் நோயாளர் மருந்து பெற்றுச் செல்வதையும் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தும் விதத்தில் உரையாடிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

பரந்த பார்க்கல்லும் வறள் நிலத் தாவரங்களும் பற்றைக் காடுமாகக் காணப்பட்ட இந்தக் காணி கற்பாறை அகற்றப்பட்டு இயல்பாக உள்ள செம்மண்ணுடன் சேர்த்து மண் நிரப்பப்பட்டு சுற்றாடலில் மூலிகைப் பயிர்கள் நட்டப்பட்டு பராமரிக்கப்படுகின்றது.

''வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்தின் கீழ் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சுதேச வைத்திய நிலையங்களுக்கும், சுதேச மருந்தகங்களுக்கும் தேவையான அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தின் தயாரிப்புக்கள் மூலம் நிறைவு செய்ய முடிகின்றது. இதனை 100 வீதத்துக்கு அதிகரிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். நிச்சயம் வெற்றி பெறுவோம். வடக்குமாகாணத்தில் சுதேச வைத்தியத்துறை எதிர்பார்த்தளவுக்கு மேலோங்கச் செய்வதற்கு நிதிவளம் போதியளவு இல்லாத நிலை காணப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் சுதேச வைத்தியத் துறையின் மேம்பாட்டுக்கு அரச சார்பற்ற, அரச சார்பு தொண்டு நிறுவனங்கள் மற்றும் புலம் பெயர்ந்து வாழும் உறவுகள் உதவ முன்வர வேண்டும். அத்தகைய ஒரு நிலையில் மேலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் வடக்கு மாகாண சுதேச வைத்தியத்திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சியாமா துரைரத்தினம்.

அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தில் சுதேச மருந்து வகை களை உற்பத்தி செய்வதற்கு நவக்கிரி அரச மூலிகைத் தோட்டத்தில் பயிரிட்டு வளர்க்கப்படும் மூலிகைகளும் பொது மக்களிடம் இருந்து கொள் வனவு செய்யப்படும் மூலிகைகளும் மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

மூலிகைகளின் கலப்படம் இல்லாத தன்மையும் மருந்து தயாரிப்பதற்கு அவை பயன்படுத்தப்படும் அளவுப் பிரமாணமும் சுதேச மருந்து வகைகளின் தர நிர்ணய்த்தை உறுதி செய்கின்றன. இந்த நிலை தனியாரிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் மருந்து வகைகளில் முழுமையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அச்சுவேலி சுதேசமருந்து உற்பத்தி நிலையத்தின் தயாரிப்புக்களில் மருந்துகளில் காணப்படும் தரநிர்ணயம் சுதேச மருத்துவத்தின் மீது மக்களை மீண்டும் நம்பிக்கை கொள்ளச் செய்து வருகின்றது. ஆங்கிலேய மருத்துவ முறை ஐரோப் பியரின் ஆட்சிக்காலத் திலேயே அறிமுகமானது. அதற்கு முந்திய காலத்தில் முழுமையாக சுதேச வைத்திய முறையும் மூலிகை உணவுப் பழக்கமும் மக்களின் உடல் ஆரோக்கி யத்துக்கு வளம் சேர்த்தது.

அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையம் கடந்த இரண்டு வருடங்களாகவே மருந்து உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றது. அதன் முழுமையான

**ஞான ஆதவன்**

உற்பத்தி வீச்சுக்கு மூலப்பொருளான மூலி கைகளின் அளவும் பொருத்தமான கருவி சாதனங்களும் இல்லாத நிலை பெரும் குறையாக இருந்தபோதிலும் காலப் போக்கில் அதன் வளர்ச்சி வடக்கு மாகாணத்தின் சுதேச மருத்துவ பயன்பாட்டிற்கான மருந்து வகைகளை உற்பத்தி செய்யும் என்ற நம்பிக்கை உண்டு. இந்த நம்பிக்கையுடன் தொழிற்சாலையின் பணி முன்னெடுப்புக்கள்மேற்கொள் ளப்பட்டுவருகின்றன.

-தொடரும்-

## மரண அறிவித்தல்

### திருமதி நவமணி சிரோன்மணி



மண்டைதீவை பிறப்பிடமாகவும், மானிப்பாய் வீதி, ஓட்டு மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நவமணி சிரோன்மணி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரான நவமணியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவஞானம்- ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் செல்வக்குமார் (கனடா), செல்வநாயகம் (நீர் கொழும்பு), திருநாவுக்கரசு (கனடா), சுந்தரலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்றவர்களான அப்பாச்சியார் -பாக்கியம் தம்பதி யரின் அன்பு மருமகளும் நவமேனன் (கனடா) சியாமினி, வசந்தினி (கனடா), உஷாநந்தினி (கனடா), ஆகியோரின் அன்புத் தாயும் சுகுணகுமாரி (இந்தியா), தயானந்தன் (கனகரத்தினம் மகாவித்தியாலய ஊழியர்), நவராஜன் (கனடா), அகிலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் நவஜீவன், லக்ஷிகா (இந்தியா), கனடாவில் வசிக்கும் பிரவின், அட்ஷயன், கஸ்மிதன், கஸ்மிதா, அபிதா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.09.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**26/14, அராலி வீதி,
ஓட்டுமடம்.**

தகவல்:-
**குடும்பத்தினர்.**

(8136)

## சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட நோர்வே பிரஜைக்கு அபராதம்

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட நோர்வே பிரஜை ஒருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு சிறுவர்களை குறித்த நோர்வே பிரஜை துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

இதுதொடர்பாக அனுராதபுரம் மேல் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட இரண்டு சிறுவர்களுக்கும் தலா ஒரு லட்ச ரூபா செலுத்த வேண்டும் எனவும், நீதிமன்றத்திற்குத் தண்டப் பணமாக 20 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டுமெனவும் நீதிவான் மேனகா விஜே சுந்தர உத்தரவிட்டுள்ளார்.

அபராதத் தொகையைச் செலுத்தத் தவறினால் ஓராண்டு கால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி பொலனறுவை மொரவெவ பிரதேசத்தில் குறித்த சந்தேக நபர் சிறுவர் பாலியல் துஷ்பிர யோகத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27 ★ 09 ★ 1935



மறைவு
26 ★ 08 ★ 2010

திருமதி
### சறோஜினிதேவி தவராஜா

(ஓய்வு பெற்ற விஞ்ஞான பட்டதாரி ஆசிரியை- மல்லாகம் மகாவித்தியாலயம், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி. அளவெட்டி அருணோதயாக் கல்லூரி)

திதி: திருதியை

ஆண்டொன்று ஆனாலும்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
தாயே உமக்கு ஈடாகுமா!
உமை இழந்து பாசத்துக்காய்
எம் மனது துடிக்கிறதே
எங்கள் குலதெய்வமே எப்போது
இனி உங்கள் முகத்தைக் காண்பதம்மா?
உங்கள் நீங்கா நினைவுகளில்
என்றென்றும் துடிதுடித்து நிற்கும்:

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், சகோதர, சகோதரிகள், பேரப்பிள்ளைகள்.**

86, பலாலி வீதி,
திருநெல்வேலி.

பிரதான வீதி,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலின் வெற்றி, தோல்விகளை மக்களே தீர்மானிப்பர் அரசு அல்ல

## கண்டியில் நடந்த கூட்டத்தில் ரணில்

கொழும்பு, செப். 15

தேர்தலில் வெற்றி, தோல்விகளைத் தீர்மானிப்போர் பொது மக்களே. அதை அரசு தீர்மானிக்க முடியாது. அத்துடன் விருப்பு வாக்குப் போட்டியில் இறங்காது கட்சிக்கான மொத்தவாக்கை உயர்த்த முயற்சி செய்யவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கண்டி மாநகர சபை வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலதா மாளிகையை கடந்த 20 வருடங்களாக பாதுகாத்த தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்ன கொடியவராகவும், தலதா மாளிகையைக் குண்டு வைத்துத் தகர்க்க முயற்சித்த பயங்கரவாதிகள் அரசின் நண்பர்களாகவும் இருப்பது வேடிக்கையாகும்.

கடந்த 20 வருடங்களாகப் பயங்கரவாத பிரச்சினைகளின்போது



தலதாமாளிகையைப் பாதுகாத்து சுமார் 25 கோடி ரூபாவை வைப்பிலிட்டு அரும்பணியாற்றிய தியவதனே நிலமே ரஞ்சன் விஜயரத்ன ஐ.தே.கட்சியில் போட்டியிடுவதனால் அவர் ஒரு கொடிய மனித ராகிவிட்டார்.

ஆனால், அதே தலதா மாளிகையைத் தகர்ப்பதற்கு உதவி புரிந்த கே.பி.என்றழைக் கப்படும் குமரன் பத்மநாதனை உயர்த்தி வைத்துள்ள இந்த அரசுக்கு பௌத்தர்களும் ஏனையோரும் நல்லதொரு பாடத்தைப் புகட்ட வேண்டும். ஐ.தே.க ஆதரவாளர்கள் வாக்களிக்கச் செல்வதில் தாமதிக்கின்றனர். அசட்டை செய்கின்றனர். இதனை அரசு சாதகமாக்கி வெற்றிபெறுகிறது. எனவே, எத்தகைய தடை வந்தாலும் வாக்களிப்பதில் பின் நிற்கவேண் டாம்.

ஐ.தே.கட்சிக்கு வாக்களிக்க மக்கள் தீர்மானித்துவிட்டனர். இதன் காரணமாக ஒன்றும் செய்ய முடியாத அரசு வழக்கு, அதிகார துஷ்பிரயோகம், பொய் வாக்குறுதி மற்றும் அபிவிருத்திகள் மூலம் மக்களைத் திசைத் திருப்ப முயற்சிக்கிறது. புத்திசாலிகள் ஏமாறமாட்டார்கள் - என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல உரையாற்றுகையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைத் தனியாகப் போட்டியிட விட்டு ஐ.தே.க.வின் வாக்குகளைக் கூறுபோட அரசு முயற்சிக்கிறது. முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கும் வாக்குகள் ஐ.ம.சு. கூட்டணிக்கு வழங்கும் வாக்குகளாகும்.

அரசின் குத்தகை ஒப்பந்தத்தை முஸ்லிம் காங் கிரஸ் நிறைவேற்ற முன்வந் துள்ளது - என்றார்.

# 17 முதல் 25 வரை கொழும்பில் சர்வதேச புத்தகக் கண்காட்சி

கொழும்பு, செப். 15

இலங்கைப் புத்தக வெளியீட்டாளர்கள் சங்கம் 13 ஆவது முறையாக நடத்தும் சர்வதேச புத்தகக் கண்காட்சி எதிர்வரும் 17 தொடக்கம் 25 வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 9 மணி முதல் இரவு 9 மணிவரை இந்தக் கண்காட்சி நடைபெறும். 12 வருடங்களுக்கு முன்பு 28 விற்பனைக் கூடங்களுடன் கொழும்பு கலாபவனத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கண்காட்சி இப்போது விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

கண்காட்சியில் பங்கு பற்றும் புத்தக வெளியீட்டாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்ததால் 2001ஆம் ஆண்டு தொடக்கம் இந்தக் கண்காட்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இந்தக் கண்காட்சி வியாபார நோக்கில் நடத்தப்படுவதில்லை. இதன் வருமானம் 'தரு திரிய' புலமைப் பரிசில் நிதியம், பாடசாலை நூல் நிலைய அபிவிருத்தி நிதியம், பாடசாலைக் கட்டட நிதியம் போன்ற சமூக சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# அடைவு நகைகளைக் கையாடிய வங்கி முகாமையாளருக்கு வலை

கொழும்பு, செப். 15

வங்கியில் அடைவுக்கு வைக்கப்பட்ட சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை கையாடினார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் அரச வங்கி யொன்றின் அடைவுப் பிரிவு முகாமையாளரைக் கைதுசெய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக வங்கியின் உயரதிகாரியொருவரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த முகாமையாளர் பணி நீக்கம் செய்யப்பட்ட தோடு இது தொடர்பா பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள் ளது என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள் ளார்.

# மக்களைத் தரம் குறைந்தவர்களாக்கும் அரசுக்குத் தக்கபாடம் புகட்ட வேண்டும்

## திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

கண்டி, செப்.15

தரம் குறைந்த பொருள் களை இறக்குமதி செய்து நாட்டு மக்களை தரம் குறைந்தவர்களாக மாற்றும் அரசுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்று ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரி வித்துள்ளார்.

கண்டி மாநகரசபைத் தேர்தலில் ஐ.தே.க. சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இன்று தரம் குறைந்த பெற்றோல், தரம் குறைந்த சிமெந்து, தரம்குறைந்த மருந்து வகை. இப்படி எதை எடுத்தாலும் தரம் குறைந்துவிட்டது. எனவே, இந்தத் தரம் குறைந்த அரசுக்கு ஒரு பாடம் புகட்டவேண்டும்.

இன்று சிரேஷ்ட அமைச்சர்களாக உள்ளவர்களால் எதையும் சாதிக்கமுடியாது. ஆனால், சகோதர கம்பனி அங்கத்தவர்களால் எதையும் சாதிக்கலாம் என்ற நிலை வந்துவிட்டது.

கிரிக்கெட்டைக் காரணம் காட்டித் தேர்தல் ஒத்திவைக்கப் பட்டது.

ஆனால், இன்று நடப்பது என்ன? தற்போதும் அதே மைதானங்களில் கிரிக்கெட் போட்டி நடக்கிறது.

எனவே, இது நகரப் பிரதேசங்களில் தேர்தலை எதிர்கொள்ள முடியாமல் அரசு மேற்கொண்ட ஒரு தந்திரமே.

அரசு அவசரகாலச் சட்டத்தை நீக்கி நாடகம் ஆடியது. அதற்குப் பதில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை உறுதியாக்கியுள்ளது. இரவோடிரவாக அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப் பட்டன. - என்றார்.




UNI மற்றும் Nottingham College of London கல்லூரிகள் வழங்கும் A/L 2011 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான
பல்வேறு சர்வதேச கற்கை நெறிகள் தொடர்பான மாபெரும் இலவச வழிகாட்டல் கருத்தரங்கும் தொழிற்பயிற்சியும் !!!

காலம் - 16/09/2011 (வெள்ளிக்கிழமை)
நேரம் - காலை 10.30 - 12.30 மணிவரை
இடம் - நாவலர் கலாசார மண்டபம்

முக்கிய குறிப்பு !!! நீங்களும் இக் கருத்தரங்கில் பங்குபற்றி அதிஷ்டசாலி ஆகுங்கள்!!

இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் மாணவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு ரூபா 60000/= பெறுமதியான Pentium - 04 கணினி ஒன்று எம்மால் இலவசமாக வழங்கப்படும். ஆகையால் தவறாது அனைத்து மாணவர்களும் கலந்து அதிஷ்டசாலி ஆகுங்கள்!

வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உடனடி அனுமதியும் அன்றய தினம் வழங்கப்படவுள்ளதால் பெற்றோரும் விரும்பின் பங்குபற்றலாம்!!!

Advanced Diploma in ICT , HND, B.Sc (Hons), Mobile Phone Repairing, Hacking & IT Security, Multimedia கற்கை நெறிகள் பற்றிய பூரண விளக்கங்கள் மற்றும் அன்றய தினம் அனைத்து கற்கை நெறிகளுக்கும் புலமைப் பரிசில்களும் வழங்கப்படும்!!!

இக் கருத்தரங்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளதால் தற்போது A/L பரீட்சைக்கு தோற்றி அடுத்து எத்தகைய கற்கைநெறிகளை நீங்கள் கற்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை இலகுவில் பெற்றுக் கொள்ளலாம் போன்ற விடயங்கள் ஆராயப்பட உள்ளதால் தவறாது அனைத்து மாணவர்களும் பங்கு பற்றி பயன் பெற்றுக் கொள்ளவும்.

!!! இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும் !!! இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்!! மேலும் பல கணினி உபகரணங்களும் பரிசாக வழங்கப்படும்!!

மேலதிக விபரங்களுக்கு:- UNI - ICT Campus (Pvt) Ltd. No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P :- 021 321 6433 / 0777 110 862

(எமது நிறுவனமானது உலகில் உள்ள 40 ற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச உயர் கல்லூரிகளால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும்)

- Conditions for Apply -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரக்கோணத்தில் ரயில் விபத்து; 11 பேர் உயிரிழப்பு; 200 பேர் காயம்



சென்னை, செப்.15

அரக்கோணம் அருகில் உள்ள சமிக்ஞைக்காக நின்றுக் கொண்டிருந்த ரயில் மீது, மற்றொரு ரயில் பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானதில் 11 பேர் பலியானார்கள். 200 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

அரக்கோணத்திலிருந்து, நேற்று முன்தினம் இரவு, காட்பாடிக்குச் சென்ற பயணிகள் ரயில், சித்தேரி அருகே, சமிக்ஞைக்காக நின்று கொண்டிருந்தது. அப்போது, சென்னை, கடற்கரையிலிருந்து வேலூர் சென்ற புறநகர் மின்சார விரைவு ரயில், நின்று கொண்டிருந்த ரயில் மீது பயங்கரமாக மோதியது.

இந்த விபத்தில், ஐந்து ரயில் பெட்டிகள் தடம்புரண்டன. மூன்று பெட்டிகள் பலத்த சேதமடைந்தன. இதில், நின்று கொண்டிருந்த ரயிலின் கார்டும், மோதிய ரயிலின் ஓட்டுநர் உட்பட 11 பேர் பலியாகினர் மேலும், 200 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள், அருகில் உள்ள மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து நடந்த இடத்துக்கு, சென்னையிலிருந்து மீட்புக் குழுவினர் விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ரயில் விபத்தால், சென்னை சென்ட்ரலிலிருந்து இரவு 9 மணிக்கு மேல் புறப்படும் பல ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன.

அரக்கோணம் மற்றும் சுற்றுப்புறப்பகுதிகளில் நேற்று இரவு மழை பெய்ததால், மீட்புப்பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. விபத்து குறித்த விவரங்களுக்கு அவசர உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துக்குச் சென்னையிலிருந்து வேலூர் சென்ற மின்சார ரயிலின் ஓட்டுநரே காரணம் என்று ரயில்வே அமைச்சர் திரிவேதி, பொதுமேலாளர் தீக்கிஷன் ஆகியோர் தெரிவித்தனர்.

**சட்டப்பேரவையில் இரங்கல்**


அரக்கோணம் அருகே நிகழ்ந்த ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமிழக சட்டப் பேரவையில் நேற்று இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இரங்கல் தீர்மானத்தை பேரவைத் தலைவர் ஜெயக்குமார் வாசித்தார்.

இதைத்தொடர்ந்து உறுப்பினர்கள் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

# மாவோயிஸ்ட்டுக்களின் பகுதிகளில் போதிய வளர்ச்சித்திட்டங்கள் இல்லை.

## பிரதமர் கவலை



இந்தியாவில், மாவோயிஸ்ட்டுகளின் ஆதிக்கம் மிகுந்த பகுதிகளில் போதிய வளர்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படாதது, அந்தப்பகுதி மக்கள் தனிமைப்படுத்தப்பட்டதைப் போன்ற மன நிலைக்குத் தள்ளப்படுவதாக பிரதமர் மன்மோகன் சிங் கவலை தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும், மாவோயிஸ்ட்டுகளால் அதிகம் பாதிக்கப்பட்ட 60 மாவட்டங்களைச் சேர்ந்த ஆட்சியாளர்களுக்கான கருத்தரங்கம் ஒன்றில் நிறைவுரையாற்றும்போது பிரதமர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

மாவோயிஸ்ட்டுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் போதிய வளர்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படாதது, அந்தப்பகுதி மக்களிடையே தனிமைப் படுத்தப்பட்ட உணர்வை ஏற்படுத்துகிறது.

அந்த உணர்வு மாறி, எம்மவர்கள், எம்முடையது என்ற நெருக்கமான உணர்வு ஏற்பட வேண்டுமானால், வேகமாக வளர்ந்துவரும் எமது பொருளாதார வளர்ச்சியின் பங்கு இந்த மக்களுக்கும் கிடைக்கும் வகையில் அரசின் கொள்கைகளும் திட்டங்களும் உறுதி செய்ய வேண்டும்.

அதே நேரத்தில், வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு பாதுகாப்பும் மிக அவசியம் என்று பிரதமர் சுட்டிக் காட்டினார்.

மாவோயிட்டுகளின் ஆதிக்கம் மிக்க பகுதிகளில், வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதுடன், அங்கு தபால் அலுவலகங்கள், வங்கிக் கிளைகளைத் திறப்பது பெரும் சவாலாக இருக்கின்றது.

அதனால், அந்தப் பகுதிகளில் பொலிஸ் நிலையங்களுக்கு மேல் தளத்தில் தபால் அலுவலகம், வங்கிக்கிளை போன்றவற்றை ஆரம்பிக்கலாம் என்றும் அவர் யோசனை தெரிவித்தார். (வ)

# சிறந்த நிர்வாகத் தலைவர் மோடி

## அமெரிக்கா புகழாரம்



திறமையான நிர்வாகத்திற்கு நரேந்திர மோடி தலைமையிலான குஜராத் அரசு சிறந்த உதாரணமாக திகழ்வதாக அமெரிக்கா புகழாரம் சூட்டியுள்ளது. அமெரிக்க நாடாளுமன்ற ஆய்வு சேவை அண்மையில் தாக்கல் செய்த அறிக்கையில் மேற்கண்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்:

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு முக்கிய மாநில மாக மோடி தலைமையில் குஜராத் மாநிலம் திகழ்கிறது. மேலும் மோடியைத் தொடர்ந்து முதலமைச்சர் நிதிஷ் குமார் தலைமையில் பீகார் மாநிலமும் திறமையான ஆளுமை மற்றும் நிர்வாக ஆற்றலுக்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது.

இந்தியாவில் அதிகமாக சிறந்த நிர்வாகம் மற்றும் வளர்ச்சி நிறைந்த மாநிலமாக குஜராத் மாநிலம்தான் காணப்படுகிறது. முதலமைச்சர் நரேந்திர மோடி பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி, அரசு அலுவலகங்களில் காணப்படும் சிகப்பு நாடா முறையை ஒழித்து, ஊழலையும் குறைத்து, நாட்டின் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு முக்கிய ஓட்டுனராக குஜராத் மாநிலத்தை ஆக்கியுள்ளார் என்றும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (வ)



கல்கத்தாவில் நடந்த முக்கிய கூட்டத்தில் பங்கேற்பதற்காக வந்த இஸ்ரேல் அரச தூதரை மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பேனர்ஜி வரவேற்றார்.

# அணுமின் நிலையம் அமைத்தால் தென் தமிழகமே அழிந்து விடும்!

## அதனைக் கைவிடக் கோருகிறார் வைகோ

வள்ளியூர், செப். 15

கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைக்கப்பட்டால் விபத்து ஏற்படும்போது தென் தமிழகமே அழிந்து விடும். எனவே, மக்களின் உணர்வுகளைப் புரிந்து கூடங்குளம் அணு மின் நிலையத்தை மூட வேண்டும் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ வலியுறுத்தியுள்ளார்

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி இடிந்த கரையில் மீனவ மக்களின் உண்ணாவிரதம் 2 ஆவது நாளாக திங்கட்கிழமையும் தொடர்ந்தது.

உண்ணாவிரதத்தில் பங்கேற்ற வைகோ பேசியதாவது -

உலக நாடுகள் எல்லாம் அணு உலைகளை மூடிவருகின்றன. இந்தியாவில் அணு மின்சாரம் தயாரிப்பது வேடிக்கையானது. மேற்கு வங்கத்தில் அணுமின் நிலையம் அமைக்க அந்த மாநில முதல்வரே எதிர்ப்புத் தெரிவித்து திட்டத்தை ரத்துச் செய்யச் செய்துவிட்டார்.

கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைக்கக் கூடாது என 1988 ஆம் ஆண்டிலேயே நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியவன் நான் மட்டும்தான். தொடர்ந்து எனது குரல் மக்களைக் காப்பாற்ற ஒலிக்கும். மக்கள் உணர்வுகளை அரசு புரிந்துகொள்ள வேண்டும். - என்றார் அவர். (வ)

# தயாநிதி மாறனிடம் விரைவில் விசாரணை

ஏர்செல் நிறுவனத்தை விற்றது தொடர்பாக மலேசியா நிறுவன நிர்வாகியிடம் சி.பி.ஐ. பொலிஸார் துருவித் துருவி விசாரணை நடத்தினார்கள். இது தொடர்பாக தயாநிதி மாறனிடமும் விரைவில் விசாரணை நடத்த உள்ளதாக சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்ததில் முறைகேடு நடந்ததாக எழுந்த முறையீடுகள் குறித்து மேல் நீதிமன்றமும், சி.பி.ஐ. பொலிஸாரும், நாடாளு மன்ற பொதுக் கணக்குக் குழுவும் விசாரித்து வருகின்றன. இதில் தொலைத் தொடர்பு அமைச்சர் ஆ.ராசா ரூ.ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடிக்கு மத்திய அரசுக்கு இழப்பீடு ஏற்பட காரணமாக இருந்ததாகக் கைது செய்யப்பட்டு, திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

ராசாவுக்கு முன்னதாக தொலைத் தொடர்பு அமைச்சராக இருந்த தயாநிதி மாறன் காலத்திலும் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்ததாகவும், ஏர்செல் நிறுவனத்தை மலேசியாவைச் சேர்ந்த மேக்சிஸ் நிறுவனத்துக்கு விற்க அவர் தூண்டியதாகவும், இதன் மூலம் சன் தொலைக்காட்சியில் மேக்சிஸ் நிறுவனம் முதலீடு செய்ய தயாநிதிமாறன் தூண்டுதலாக இருந்தார் என்றும் முறைப்பாடுகள் எழுந்தன.

இது குறித்து விசாரணை நடத்திய சி.பி.ஐ. பொலிஸார், சமீபத்தில் மேல் நீதிமன்றத்தில் ஒரு அறிக்கை தாக்கல் செய்தனர்.

அதில், ஏர்செல் நிறுவனத்துக்கு அலைக்கற்றை ஒதுக் கீடு செய்வதற்கான உத்தரவு களை தயாநிதி மாறன் வேண்டுமென்றே தாமதப்படுத்தினார் என்றும், அதன் மூலம் ஏர்செல் நிறுவனத்தை மலேசியாவின் மேக்சிஸ் நிறுவனத்துக்கு விற்பதற்கு மறைமுகமாகக் கட்டாயப்படுத்தினார் என்றும், அதற்கு பரிகாரமாக மேக்சிஸ் நிறுவனம் சன் தொலைக்காட்சியில் முதலீடு செய்தது என்றும் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த குற்றச்சாட்டுகளை தயாநிதிமாறன் மறுத்துள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்





**சுந்தரம்பிள்ளை எலிசபெத் (நேசம்மா)**

மனம் மகிழ : 14.09.1925
மனம் நெகிழ : 15.09.2010

**சுந்தரம்பிள்ளை லோறன்ஸ் (அசோகன்)**

மனம் மகிழ : 26.07.1960
மனம் நெகிழ : 25.07.2010

கண்ணுக்குள் நீங்கள் இருக்க
ஓர் ஆண்டு போனதுவே ஆனால் எம்
உள்ளத்தில் இன்று போல் உள்ளது

நம்பவில்லை அரசியினைப் போலாண்டு
குடும்பத்தைப் புதுப்பித்து பாசமதன்
கட்டுக்குள் எம்மையெல்லாம் நோகாமல்
வைத்தவர்களே நெஞ்சுக்குள்
நினைவுண்டு நினைவுக்குள் நீங்கள் உண்டு
என்றும் உங்கள் பாசத்துக்காக
ஏங்கித் தவிக்கின்றோம்.
நித்தம் உங்கள் நினைவில் துயருறும்:

**குடும்பத்தினர்.**

தகவல்: எஸ். செல்லத்துரை,
40, முள்ளிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
0213219420


## விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை கிராம மட்டத்தில் முன்னேற்ற திட்டம்

கொழும்புப் பல்கலைக்கழக விவசாய தொழில் நுட்ப நிறுவனம் - கொய்க்கா நிறுவனத்தின் உதவியுடன் கிராமிய மட்டத்தில் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவுள்ளது.

இதன் முதற்கட்டமாக கமநலசேவைகள் நிலையங்கள் ஊடாக கிராமிய மட்டத்தில் விவசாய உற்பத்தியில் ஈடுபடும் இளைஞர்களின் விவரம் பெறப்படவுள்ளது.

இந்த விவரங் கள் முதற்கட்டமாக பெறப்பட்டவுடன் விவசாய உற்பத்தியில் ஈடுபடும் இளைஞர்களுக்குத் தொழில்நுட்பபயிற்சி, வாழைப்பழ உற்பத்தி, நவீன பயிர் செய்கை உற்பத்தி தொடர்பாக விளக்கமளிக்கப்படும்.

வடக்கு- கிழக்குப் பிரதேசங்களுக்கு இதில் முன்னுரிமை கொடுக்கவும் கொய்க்கா நிறுவன பேராசிரியர் கிம்ஜே நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-302)


**SHAMROCK**
பொருளியல்
R.அருணன்.B.Com.
* A/L2013 தேர்ச்சிமட்டம்-2 கேள்வி, நிரம்பல் கோட்பாடு.
Mon,Thurs 3p.m
* 2012- தேர்ச்சி மட்டம்- 7 விலை கட்டுப்பாடும் பண வீக்கமும்.
Mon,Thurs 4p.m



**செபம்**

எங்கும் என்றைக்கும் உலகம் முழுவதும் யேசு பிரானின் புனித இருதயம் போற்றப்பட்டும் ஏற்றப்பட்டும் நேசிக்கப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் யேசு பிரானின் புனித இருதயம் இரக்கம் கொள்ளட்டும். திக்கற்றவர்களுக்கு உதவுபவரான புனித ஜூட் ஆனவரே எமக்காக வேண்டிக் கொள்ளும்.
Note:9நாள்களுக்கு இந்தப் பிரார்த்தனையை கூறுங்கள். 8 நாள்களுக்குள் வேண்டுதல் நிறைவேறும். செபத்தை பிரசுரிப்பதாக வாக்குறுதி எடுத்துக் கொள்ளுங்கள்.
நன்றி : அடியாள்



# ஈர விழிகளுடன் ஒன்பதாம் ஆண்டு நினைவு

திருமதி **பூவிலிங்கம் நாகம்மா** (புஸ்பம்)



பிறப்பு:
14.05.1939

இறப்பு:
15.09.2002

ஆண்டுகள் ஒன்பதானாலும் - உங்கள்
நினைவுகள் உயிர் மூச்சாய் உள்ளதம்மா!
தவிக்கின்றோம் உம்மை இழந்து
பாசத்துக்காய் தலை சாய்க்க - உந்தன்
மடிதேடி ஏங்குகின்றோம் - தாயன்பு
இத்தரணியில் எங்குண்டு?
எங்கு சென்றாய் எமைவிட்டு?
தங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
பிரார்த்திக்கின்றோம்.

கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(சி/3902)

**பிள்ளைகள்.**



# ஓராண்டு நினைவலைகள்

## அமரர் கந்தன் கதிரவேலு



மண்ணுலக வாழ்வில்
13.06.1950

விண்ணுலக வாழ்வில்
26.09.2010

ஆண்டு ஒன்று ஆனது அப்பா
ஆறவில்லை எம் துயரம்
பூமியின் பொறுமையே!
புண்ணியத்தின் பெருமகனே!
அன்புடன் இணைந்த நல்லதோர் கணவனாய்
ஆசையுடன் எமை வளர்த்த பாசமிகு தந்தையே
எமதருமைச் சகோதரனாய்
நாம் விரும்பும் மாமனாய்
நல்லதொரு மைத்துனனாய்
பாசத்துக்கொரு தாத்தாவாய்
எம்மையெல்லாம் அரவணைத்த அன்புத் தெய்வமே!

உறவுகளை உபசரித்து
உளம் மகிழ வரவேற்ற
உம் சிரித்த முகம் எங்கே?
கனிவுடைய வரவேற்புக் காணாது ஏங்குகிறோம்
ஓர் ஆண்டு என்ன ஓர் ஆயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உமை நாம் மறவோம்.

திதி- திருதியை (15.09.2011)

மானிப்பாய் வீதி,
கைதடி மேற்கு, கைதடி.

உம் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தாத்தில் ஆயுததாரிகள் கொடூரம் பஸ் பயணிகள் 22 பேர் சூட்டுக்குப் பலி



சிரியாவில் இருந்து பஸ்ஸில் சென்று கொண்டிருந்த 22 பேரை ஈராக்கில் உள்ள மேற்கு பக்தாத்தில் வைத்து ஆயுதம் ஏந்திய மர்ம மனிதர்கள் சுட்டுக் கொன்றனர்.

சிரியாவில் இருந்து 22 பயணிகளை ஏற்றிக் கொண்டு பாக்தாத் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸை மேற்கு பக்தாத் பகுதியில் உள்ள நௌகைர் பாலைவனத்தில் சென்ற போது ஆயுதம் ஏந்திய சிலர் வழிமறித்தனர்.


ஆயுதங்களுடன் வந்தவர்களைப் பார்த்த ஓட்டு நர் உடனடியாக பஸ்ஸை நிறுத்தினார். உடனே அந்த மர்ம நபர்கள் பஸ்ஸை உள்ள அனைவரையும் கீழே இறங்கி வருமாறு உத்தரவிட்டனர். இதில் அவர்களது ஆயுதங்களைப் பார்த்துப் பயந்து போன அப்பாவி மக்கள் மறுபதில் சொல்லாமல் பஸ்ஸில் இருந்து இறங்கினர்.

இறங்கியவர்களை வரிசையாக நிற்க வைத்த அந்த மர்ம நபர்கள் தங்கள் கைகளில் இருந்த அதிநவீன துப்பாக்கிகளால் கண்மூடித்தனமாகச் சுட்டனர். இதில் 22 பேரும் பரிதாபமாக உயிர் இழந்தனர்.




பெல்ஜியம் தலைநகர் புரூசல்ஸில் நடந்த ஐரோப்பியன் கவுன்ஸில் கூட்டத்தில், அந்தநாட்டுப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி மற்றும் ஐரோப்பியன் கவுன்ஸில் தலைவர் ஹெர்மன் வன் ராம்பை ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பஸ் மீது ரயில் மோதி விபத்து ஆர்ஜென்டீனாவில் 11 பேர் சாவு



புவனஸ்ஆயர்ஸ்,செப்.15

ஆர்ஜென்டீனாவில் ரயில்வே வீதிக் குறுக்கு தண்டவாளத்தைக் கடக்க முயன்ற பஸ்ஸுடன் ரயில்மோதி விபத்துக்குள்ளானதில் 11 பேர் பலியாகினர். 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஆர்ஜென்டீனாவின் தலைநகர் புவனஸ்ஆயர்ஸ் நகரில் உள்ள ஒரு ரயில்வே கிராஸிங் பகுதியில் பயணிகள் பஸ் ஒன்று தண்டவாளத்தைக் கடக்க முயன்றுள்ளது. அப்போது குறுக்கே அதிகவேகத்தில் வந்த ரயில், பஸ் மீது பயங்கரமாக மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்தினால் பஸ்ஸுக்குப் பின்னால் தொடர்ந்து வந்த சில வாகனங்களும் விபத்தில் சிக்கின. இந்த விபத் தில் காயமடைந்த 20 பேரின் நிலைமை மிகவும் கவலைக் கிடமாக உள்ளதாக ஆர்ஜென் டீனாவின் அவசர மருத்துவ சேவை மையம் தெரிவித்துள்ளது.

# துணை அதிபருக்கு சலே அங்கீகாரம்

ரியாத்,செப்.15

சவுதி அரேபியாவில் சிகிச்சை பெற்றுவரும் ஏமன் அதிபர் அலி அப்துல்லா சலே, ஏமன் விவகாரத்தில், தனக்குப் பதிலாக, துணை அதிபர் பேச்சில் கலந்து கொண்டு கையெழுத்திடுவதற்கு, அங்கீகாரம் அளித்துள்ளார்.

ஏமன் பிரச்சினையில் தலையிட்ட வளைகுடா கூட்டுறவுக் கவுன்சில், சில பரிந்துரைகளை முன் வைத்தது.

இந்த வளைகுடா கூட்டுறவு கவுன்சில் முன் வைத்த அதிகார மாற்றத்துக் கான பரிந்துரைகளை ஏற்பதற்கும், அது குறித்து எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்கு மான அதிகாரத்தை துணை அதிபர் அப்துரபு மன்சூர் ஹாடிக்கு அதிபர் சலே அளித்து அங்கீகரித்துள்ளார்.

# சிரியாவில் மனித உரிமை ஆர்வலர் மரணம்

## அமெரிக்கா கடும் கண்டனம்

சிரியாவில் மனித உரிமை ஆர்வலர் மரணம் அடைந்துள்ளார். இதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத் ஆட்சிக்கு எதிராக நடக்கும் மக்கள் போராட்டங்களுக்கு முக்கிய நபராக நியூயோர்க்கை மையமாக கொண்ட 26 வயது மனித உரிமை ஆர்வலர் கியாத் மதார் இருந்தார்.

இவரை அசாத் படையினர் இந்த செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி கைது செய்து சிறையில் அடைத்தனர். அவர் காவலில் இருந்த போது சித்திரவதை தாங்க முடியாமல் மரணம் அடைந்துள்ளார். அவரது மார்பிலும், முகத்திலும் கடுமையான காயங்கள் காணப்பட்டன என மற்றைய மனித உரிமை ஆர்வலர்கள் கூறினர்.

சிரிய மனித உரிமை ஆர்வலர் மதார் சிறையில் கொல்லப்பட்டதை அமெரிக்கா கடுமையாக கண்டித்துள்ளது. அத்துடன் இது தொடர்பாக அமெரிக்க அயல்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நுலாந்த் வெளியிட்ட அறிக்கையில்:

''சிரியாவின் அடக்குமுறை ஆட்சியை எதிர்த்து அமைதி வழியில் உறுதியுடன் எதிர்த்து போராடிய மதார் உயிர் துறந்துள்ளார். அவரது மரணம் சிரியாவின் இழிவான வன்முறை ஆட்சி முறையைக் காட்டுகிறது'' எனத் தெரிவித்துள்ளார்.

# ஆப்கனில் நேட்டோ, அமெரிக்கத் தூதரகம் மீது தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 6 பேர் மரணம்

காபூல், செப். 15

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள நேட்டோ தலைமையகம், அமெரிக்கத் தூதரகம் ஆகியவை மீது பயங்கர ஆயுதங்களுடன் தலிபான்கள் நேற்றுமுன்தினம் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 6 பேர் பலியாகினர்.

இந்த இரு அலுவலகங்களும் அருகருகே உள்ளன. இவற்றுக்கு அருகே கட்டப்பட்டுவரும் அடுக்குமாடிக் கட்டடத்தில் பதுங்கியிருந்த தலிபான்கள், அதி நவீனத் துப்பாக்கிகளால் சுட்டும் வெடிகுண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தியதாகத் தெரிகிறது.

அதே நேரத்தில் மனித வெடிகுண்டாக வந்த ஒருவர் பாதுகாப்புப் படையினரைக் குறிவைத்தும் மற்றொருவர் நாடாளுமன்றதுக்கு அருகிலும் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது. இந்த இரு தாக்குதல்களும் காபூல்.ன் மேற்குப் பகுதியில் நடந்தன. இந்தத் தாக்குதல்களில் 2 பொலிஸார், 4 அப்பாவிகள் பலியானதாக ஆப்கன் அரசு அறிவித்திருக்கிறது. பத்திரிகையாளர் ஒருவர் உள்பட பலர் காயமடைந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

5 மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த துப்பாக்கிச் சண்டையில், 4 தலிபான்கள் கொல்லப்பட்டுவிட்டதாகவும் மேலும் இருவர் தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டிருந்ததாகவும் அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. மொத்தம் 9 தீவிரவாதிகள் இந்தத் தாக்குதல்களில் ஈடுபட்டிருக்கலாம் என்றுகூறப்படுகிறது. விமானங்களின் உதவியுடன் எதிர்த் தாக்குதல் நடத்தப்பட்டதாக நேட்டோவின் சர்வதேச பாதுகாப்பு உதவிப்படை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆப்கன் பாதுகாப்புப் படையினர் நிலைமையைச் சமாளிப்பார்கள் என நேட்டோ படைகளின் தலைவர் ஆண்டர்ஸ் ராஸ்முசென் தெரிவித்தார்.

ஆப்கன் உளவுத்துறைத் தலைமையகம், ஐஎஸ்ஏஎஃப் அலுவலகம், அமெரிக்கத் தூதரகம், தேசிய பாதுகாப்பு இயக்குநரகம் உள்ளிட்டவற்றைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக தலிபான் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# பல்லை மாறிப் பிடுங்கிய மருத்துவர் பணி நீக்கம்

லண்டன், செப.15

தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த சொத்தைப் பல்லை விட்டு நல்ல பல்லைப் பிடுங்கிக் குப்பையில் போட்ட மருத்துவர் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பிரிட்டனைச் சேர்ந்த 44 வயதான கிம் க்ரீன் நீண்ட நாள்களாகப் பல்வலியால் அவதிப்பட்டு வந்தார். இதனால் அருகில் இருந்த மருத்துவமனைக்குச் சென்று, ஜஸ்டின் ஜார்ஜ் (34) என்ற பல் வைத்தியரிடம் காட்டினார்.

சொத்தை பிரச்சினை பெரிதாகி விட்டிருந்ததால் பல்லைப் பிடுங்க முடிவெடுக்கப்பட்டது. அதன்படி அறுவைச் சிகிச்சை நடந்தபோது வைத்தியர் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த சொத்தைப் பல்லை விட்டுவிட்டு பக்கத்தில் இருந்த நல்ல பல்லைப் பிடுங்கி, குப்பையில் போட்டதோடு வலி நிவாரணி உள்ளிட்ட மாத்திரைகளை கொடுத்து, காசை வாங்கிக் கொண்டு கிம்மை வீட்டுக்கு அனுப்பினார்.

வீடு திரும்பி நீண்ட நேரமாகியும் வலி குறையவில்லை. மாறாகத் தொடர்ந்து வலி அதிகரிக்கவே பொறுமை இழந்தகிம், மீண்டும் மருத்துவமனைக்குச் சென்றார்.

சொத்தைப் பல்லைப் பிடுங்கினால் சிறிது நேரம் வலி இருக்கும். இப்படித் தொடர்ந்து வலிக்காதே என்ற சந்தேகத்தில் மீண்டும் வைத்தியர் பரிசோதனை செய்தார். அப்போது தான் அவருக்குப் பல் மாறிய விஷயம் தெரிய வந்தது.

அவசர கதியில் சிகிச்சை செய்து சொத்தைப் பல்லைப் பிடுங்கினார். ஏற்கனவே பிடுங்கி எறிந்த நல்ல பல்லை குப்பைத் தொட்டியில் இருந்து தேடி எடுத்து கிம்முக்கு பொருத்தினார். ஆனாலும், வைத்தியரின் கவனக்குறைவால் தான் பட்ட அவஸ்தையை அவரால் மறக்க முடியவில்லை. பல் பாதுகாப்புக் கவுன்சிலுக்கு புகார் கொடுத்து விட்டார். இதனையடுத்து வைத்தியர் ஜஸ்டினை பதவியிலிருந்து கவுன்சில் இடை நீக்கம் செய்து விட்டது

# பாகிஸ்தான் வெள்ளப் பெருக்கில் 219 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் பலத்த மழை பெய்து கொண்டிருப்பதனால் அங்குள்ள 23 மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட மழை வெள்ளம் மற்றும் இடிபாடுகளில் சிக்கி இது வரை 219 பேர் உயிரிழந்துள்ளனர். 400 பேர் காயம் அடைந்துள்ளனர். 55 லட்சம் மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

45 லட்சம் ஏக்கர் நிலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. 17 லட்சம் ஏக்கரில் இருந்த பயிர்கள் சேதம் அடைந்துள்ளன என தேசிய பேரிடர் நிர்வாகத் தலைவர் டாக்டர் ஷபர் குவாதிர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
15 செப்ரெம்பர் 2011 வியாழக்கிழமை

செஞ்சிலுவைச் சங்க 75ஆவது ஆண்டு நிறைவு

# தேசிய மட்டக் கிரிக்கெட்டில் மாத்தறை அணி சம்பியனானது

யாழ்ப்பாணம், செப்.15

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திருகோணமலை கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தேசிய மட்டத்திலான 6 பேர் பங்கு பற்றிய 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மாத்தறை செஞ்சிலுவைச் சங்க அணி சம்பியனானது.

ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மாத்தறை செஞ்சிலுவைச் சங்க அணியை எதிர்த்து மொனறாகலை செஞ்சிலுவைச் சங்க அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மாத்தறை செஞ்சிலுவைச் சங்க அணியினர் 2 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் டிலான் 25 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றார்.

பந்து வீச்சில் மொனறாகலை செஞ்சிலுவைச் சங்க அணி சார்பாக சமித்த ஒரு ஓவரில் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பிரதீப் ஒரு ஓவரில் 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

60 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மொனறாகலை செஞ்சிலுவைச் சங்க அணியினர் 2 விக்கெட்டுகளை இழந்து 53 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

பந்து வீச்சில் மாத்தறை செஞ்சிலுவைச் சங்க அணி சார்பாக சுப்புன் ஒரு ஓவரில் 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் அசோலா ஒரு ஓவரில் 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்டத்தொடர் நாயகனாக திருகோணமலை செஞ்சிலுவை சங்க அணி வீரன் சத்தி பிரணவன் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த துடுப்பாட்ட வீரனாக மாத்தறை செஞ்சிலுவைச் சங்க அணிவீரன் டிலான் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த பந்து வீச்சாளராக மொனறாகலை செஞ்சிலுவைச் சங்க அணி வீரன் சம்பத் தெரிவு செய்யப்பட்டார்.

இறுதிநாள் நிகழ்வுக்குத் திருகோணமலை நகர சபை தலைவர் கே.செல்வராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ம-23)

## தேசிய மட்ட மேசைப்பந்தாட்டம்

வலி.வடக்கு,செப்.15

இலங்கை கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான தேசிய மட்டத்திலான மேசைப் பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 17,18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

கல்கிசை அத்துலத்முதலி வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் வடமாகாணப் பாடசாலைகளின் அணிகள் சார்பில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:

ஆண்கள்-யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வவுனியா வடக்கு சுந்தரபுரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, மன்னார் சென்.அனாஸ் மத்திய மகா வித்தியாலயம்.

பெண்கள்-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி (ம-86)

## கிரிக்கெட் சுற்றின் சனிக்கிழமை ஆட்டம்

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு அவை நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

வல்வெட்டித்துறை ஈக்கிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் சென்றல் விளையாட்டுக்கழகம் (ம-23)

* * *

யாழ்ப்பாணம், செப்.15

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கு இடையே நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* சனிக்கிழமை - காலை 8.30 மணி ஓல்ட்கோஸ் விளையாட்டுக் கழகம் எதிர் சென்றல் விளையாட்டுக்கழகம். (ம-23)



வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற வவுனியா வடக்கு சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வீரர்கள். (ம-86)

## பாடசாலை அணிகளிடையே பூப்பந்தாட்டப் போட்டிகள்

இலங்கை கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள் பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 17,18 ஆம் திகதிகளில் கல்கிசை சாந்த தோமஸ் வித்தி யாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வடமாகாணப் பாடசாலைகள் அணிகளின் சார்பில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு :

ஆண்கள்- மானிப்பாய் இந்துக்கல்லூரி, உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

பெண்கள்- யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம். (ம-86)

## தேசிய மட்டத்தில் தெரிவாகியுள்ள விளையாட்டுகளுக்கு பயிற்சிகள்

வலி.வடக்கு,செப்.15

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டை அதிகரிக்கும் முகமாக கல்வி வலய மட்டத்தில் ஆறு விளையாட்டுப் போட்டிகள் தேசிய மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட ஆறு விளையாட்டுக்களையும் வலய மட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பயிற்றுவிக்கவும் ஊக்குவிக்கவும் உடற் கல்வி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வலிகாமம் கல்வி வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

ஜிம்னாஸ்ரிக் - எஸ்.நாகநாதன் (இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி),

கரப்பந்தாட்டம்- எஸ்.கமலமோகன்(தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி),

வலைப்பந்தாட்டம் கே.ஜெயகாந்தி (மரு தனார்மடம் இராமநாதன் கல்லூரி),

உதைபந்தாட்டம்- கே.உதயநாத் (மானிப்பாய் இந்துக் கல்லூரி),

மெய்வண்மை- கே.பாகீஸ்வரன்(அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

றக்பீ - கெ.யூட்நிரஞ்சன்- (மானிப்பாய் மெமோரியஸ் ஆங்கிலப்பாடசாலை). (ம-86)

## 50 ஓவர்கொண்ட கிரிக்கெட்; கொக்குவில் அணி வெற்றி

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக்கழகம் 47.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அனுரதன் 72 ஓட்டங்களையும் மனோபவன் 30 ஓட்டங்களையும் சஞ்சீவன் ஆட்டம் இழக்காமல் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி சார்பாக சுஜிதரன் 2 விக்கெட்டுக்களையும் பிரதீஸ் 3 விக்கெட்டுக்களையும் கிருபவன், சாம்பவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

203 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணியினர் 40 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

இதில் உமாநாத் 67 ஓட்டங்களையும் ஆதித்தன் 37 ஓட்டங்களையும் கிருபவன் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி சார்பாக உமைசுதன் 3 விக்கெட்டுக்களையும் அசோக் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (ம-23)

## மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி,செப்.15

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் விசேட தேவையுடைய (மாற்று வலுவுள்ள) மாணவர்களுக்கான மெய்வன்மைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த-207)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.15

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

பி.ப.3 மணி: நொடிய காடு இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம்.

* மாலை 4 மணி: இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம் எதிர் வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக் கழகம். (ம-23)

## நாளைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப்.15

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் 7பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்கள் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம்:


பிற்பகல் 3.45 மணி

விக்னேஸ்வர விளையாட்டுக்கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்.

மாலை 5 மணி

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் எதிர் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீழ்ந்தது நடப்புச் சம்பியன்

அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார். நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் இறுதிச்சுற்றில் 6-4, 6-2, 6-7 (3:7), 6-1 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் ரபேல் நடாலை வீழ்த்தி பட்டம் வென்றார். இது அவரின் நான்காவது கிராண்ட்ஸ்லாம் பட்டம்.

இதன் மூலம் இந்த ஆண்டில் ஆஸ்திரேலிய ஓபன், விம்பிள்டன் ஓபன், அமெரிக்க ஓபன் என்று மூன்று கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பட்டம் வென்று சாதனை படைத்தார் ஜோகோவிச். இந்த ஆண்டில் பிரெஞ்ச் ஓபனில் மட்டுமே அவர் பட்டம் வெல்லவில்லை. இந்த ஆண்டில் விளையாடிய 66 போட்டிகளில் 64 இல் வெற்றிபெற்றார் ஜோகோவிச். இந்த ஆண்டில் 6 முறை நடாலை சந்தித்த ஜோகோவிச் அனைத்திலும் வெற்றி கண்டார்.

இறுதிச்சுற்றில் முதல் செட்டின் ஆரம்பத்தில் நடால் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றார். இதன்பிறகு அபாரமாக ஆடிய ஜோகோவிச் 3-2 என்ற கணக்கில் முன்னிலை பெற்றார். மீண்டும் நடாலின் சேர்வீஸ்ஸை முறியடித்த ஜோகோவிச் அந்த செட்டை 6-4 என்ற கணக்கில் கைப்பற்றினார். பின்னர் நடைபெற்ற இரண்டாவது செட்டில் சிறப்பாக ஆடிய ஜோகோவிச், அந்த செட்டை 8 கேம்களிலேயே முடிவுக்குக் கொண்டு வந்தார். இதனால் அந்த செட் 6-2 என்ற கணக்கில் ஜோகோவிச் வசமானது.

பின்னர் நடைபெற்ற மூன்றாவது செட்டில் நடால் கடுமையாகப் போராடினார். இதனால் அந்த செட் சமநிலையில் முடிந்தது. இதையடுத்து வழங்கப்பட்ட டை பிரேக்கர் வாய்ப்பில் நடால் 7-6 (7-3) என்ற கணக்கில் வென்றார்.

பின்னர் நடைபெற்ற 4 ஆவது செட்டில் சுதாரித்துக் கொண்ட ஜோகோவிச், வேகமாக பொயிண்ட்களை தன் வசமாக்கினார். நடால் கடுமையாகப் போராடிய போதும் ஆட்டம் ஜோகோவிச் வசம் திரும்பியது.

இந்த செட்டை 6-1 என்ற கணக்கில் கைப்பற்றினார் ஜோகோவிச். இதன்மூலம் அவர் 6-4, 6-2, 6-7 (3 : 7), 6-1 என்ற கணக்கில் நடாலை வீழ்த்தி பட்டம் வென்றார். இந்த ஆட்டம் 4 மணி நேரம் 10 நிமிடங்கள் நீடித்தது. மைதானத்திற்கு வந்திருந்த 23,000 ரசிகர்களுக்கும் இந்த ஆட்டம் விருந்தாக அமைந்தது. (15)

US OPEN

# வீணான வாக்குவாதம் தந்தது அபராதம்



நடுவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதற்காக அமெரிக்க ரெனிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸுக்கு ரூ.95 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில் செரினா வில்லியம்ஸ் -ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசரை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் ஒரு கட்டத்தில் செரினா பொயிண்டை வெல்லும் சுழ்நிலையில் இருந்தார். அப்போது நடுவர் அறிவிக்கும் முன்னதாகவே ஆக்ரோஷமாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இது ரெனிஸ் விதிகளுக்கு மாறானது. எனவே அந்த பொயிண்டை சமந்தாவுக்கு அளிப்பதாக நடுவர் அறிவித்தார். இதனால் நடுவரிடம் செரினா கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனால் அவருக்கு ரூ.95 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பெரிய அளவில் அபராதம் விதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சிறிய அளவிலான அபராதத்துடன் தப்பித்துள் ளார் செரினா. (15)

# ஐ.சி.சி. விருது வழங்கல் இந்திய வீரர்கள் புறக்கணிப்பு

லண்டனில் நடந்த ஐ.சி.சி விருது வழங்கும் விழாவை இந்திய அணி வீரர்கள் புறக்கணித்துள்ளனர். அழைப்பிதழ் தாமதமாக கிடைத்ததாலேயே புறக்கணித்ததாக வீரர்கள் தெரிவித்துள்ளனர். பி.சி.சி.ஐ.க்கு ஏற்கனவே அழைப்பிதழ் அனுப்பிவிட்டதாக ஐ.சி.சி தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதால், புதிய சர்ச்சை வெடித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) சார்பில் ஆண்டுதோறும் சிறந்த வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டுக்கான விருது பெறுவோருக்கான பட்டியலில் இந்திய வீரர்கள் பலர் இடம் பெற்றிருந்தனர்.

நேற்று முன்தினம் விருது வழங்கும் விழா லண்டனில் நடந்தது. இந்த விழா நடந்த இடத்துக்கு மிக அருகில் இருந்த ஹோட்டலில்தான் இந்திய வீரர்கள் தங்கியிருந்தனர். ஆனாலும் விருது நிகழ்ச்சியை புறக்கணித்து அதிர்ச்சி அளித்தனர். ஏற்கனவே இங்கிலாந்துக்கான இந்திய தூதர் கொடுத்த விருந்தை புறக்கணித்து, டோனியின் அறக்கட்டளை நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இப்போது ஐ.சி.சி. விழாவையும் தவிர்த்து சர்ச்சையில் சிக்கியுள்ளனர்.

யார் காரணம்?

இந்தப் பிரச்னைக்கு அழைப்பிதழ் தாமதமாக கிடைத்தது தான் காரணம் என்று வீரர்கள் கூறுகின்றனர். இதனை மறுத்த ஐ.சி.சி. ஏற்கனவே அழைப்பிதழை பி.சி.சி.ஐ.க்கு அனுப்பிவிட்டதாக தெரிவித்துள்ளது. இதனை வீரர்களுக்கு முறைப்படி பி.சி.சி.ஐ ஏன் தெரிவிக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது. இப்படி ஒருவர் மீது ஒருவர் பழிசுமத்துவதால், பிரச்னை பெரிதாகியுள்ளது.

அழைப்பு தாமதம்

இதுகுறித்து இந்திய அணி முகாமையாளர் ஷிவ்லால் யாதவ் கூறுகையில், விழா குறித்து மதியம் 12 மணிக்குத் தான் எங்களுக்குத் தெரிவித்தனர். அதற்கு முன் வீரர்கள் 'ஷொப்பிங்' மற்றும் பல இடங்களை சுற்றிப் பார்க்கச் சென்றுவிட்டனர், என்றார்.

ஐ.சி.சி. மறுப்பு

இதுபற்றி ஐ.சி.சி. தகவல் தொடர்பு அதிகாரி காலின் ஹிப்சன் கூறுகையில், இந்திய வீரர்கள் விழாவில் பங்கேற்க வேண்டும் என்று, சில வாரங்களுக்கு (ஓகஸ்ட் 26) முன்னதாகவே பி.சி.சி.ஐ.க்கு தெரிவிக்கப்பட்டது. இதற்கான ஈ-மெயில் ஆதாரம் உள்ளது, என்றார்.

இது குறித்து ஐ.சி.சி தலைமை நிர்வாகி ஹாரூன் லார்கட் கூறியதாவது:

விழா குறித்து பி.சி.சி.ஐ.க்கு ஏற்கனவே அழைப்பிதழ் அனுப்பியது எனக்குத் தெரியும். அங்கு வந்திருந்த அனைவரும், இந்திய அணியினர் ஏன் வரவில்லை என்று கேட்டனர். இது பெரிய அவமானமாக இருந்தது. மேலும் இந்திய வீரர்கள் விழாவில் பங்கேற்காதது எனக்கு மிகுந்த வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் அளித்தது. ஏனென்றால் எல்லோரும் அந்த விழாவில் கலந்து கொண்டனர். ஒவ்வொருவரும் விழாவில் பங்கேற்று இருக்கும் போது இந்திய வீரர்கள் புறக்கணித்தது ஏமாற்றமாகும். இது மிகப்பெரிய அவமானம். உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய வீரர்களை பார்க்க ரசிகர்கள் ஆவலுடன் இருந்தனர்.

அணித்தலைவர் டோனியாவது வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. டெஸ்ட் போட்டியில் இயன் பெல்லை திரும்ப அழைத்ததன் மூலம் டோனியின் வியக்கத்தக்க தலைமையை பாராட்டி எழுச்சிமிக்க விருதுக்கு தேர்வு பெற்றார். இந்த விருதுக்கு அவர் பொருத்தமானவர். ஆனால் அந்த விருது பெற்றுக் கொள்ளாமல் அவமானப்படுத்திவிட்டார்.

ஐ.சி.சி. தலைமை நிர்வாகி லார்கட்டின் இந்த விமர்சனத்துக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ) கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது. இது குறித்து பி.சி.சி.ஐ.யின் தலைமை நிர்வாக அதிகாரி ரத்னாகர் ஷெட்டி கூறும் போது, லார்கட் தனது விருப்பப்படி எந்த விதமான கருத்தும் தெரிவிக்கலாம். நாங்கள் இதுகுறித்து எந்த கருத்தும் தெரிவிக்க விரும்பவில்லை - என்றார்.

கிரிக்கெட் சபை செயலாளர் என். சீனிவாசன் கூறும் போது, கிரிக்கெட் சபை இதுகுறித்து சொல்வதற்கு ஒன்றுமில்லை. இந்திய வீரர்கள் வராதது குறித்து, விழாவில் பங்கேற்ற பி.சி.சி.ஐ. துணைத்தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில், பட்டியலில் இடம்பெற்ற வீரர்கள் மட்டும் பங்கேற்க வேண்டும் என்று நினைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். மற்றபடி வீரர்கள் பங்கேற்பது குறித்து அவர்கள் விருப்பத்துக்கு விடப்பட்டுள்ளது, என்றார்.

சங்கா கைப்பற்றியது இரண்டு விருதுகள்

2011 ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் விருதை இங்கிலாந்தின் ரொரட் தட்டிச் சென்றார். சிறந்த ஒரு நாள் வீரர், மக்களின் மனம் கவர்ந்த வீரர் விருதுகள், இலங்கையின் சங்ககராவுக்கு வழங்கப்பட்டது. குக்கிற்கு (இங்கிலாந்து) சிறந்த டெஸ்ட் வீரராகவும், வளர்ந்து வரும் வீரர் விருது மேற்கிந்திய சுழற்பந்து வீச்சாளர் தேவேந்திர பிஷுவுக்கு வழங்கப்பட்டது. நியுசிலாந்தின் ரிம் சவுத்தி ('ரி-20), ஐ.சி.சி. உறுப்பு நாடுகளின் சிறந்த வீரர் விருதை, தொடர்ந்து மூன்ர்வது ஆண்டாக நெதர்லாந்தின் டசாட்டே தட்டிச் சென்றார்.

டெஸ்ட் அணியில் சச்சின்

இந்த ஆண்டின் ஐ.சி.சி. கனவு டெஸ்ட் அணியில் இந்தியா சார்பில் சச்சின் மட்டும் இடம் பெற்றுள்ளார். இதில் 5 இங்கிலாந்து வீரர்கள் தேர்வாகியுள்ளனர்.

டெஸ்ட் அணியின் விபரம்:

இலங்கை சங்ககரா (அணித்தலைவர்), குக் (இங்கிலாந்து), அம்லா (தென்னாபிரிக்கா), ரொரட் (இங்கிலாந்து), சச்சின் (இந்தியா), டிவிலியர்ஸ், கலிஸ் (தென்னாபிரிக்கா), புரோட், சுவான் (இங்கிலாந்து), ஸ்ரெய்ன் (தென்னாபிரிக்கா), அண்டர்சன் (இங்கிலாந்து) மற்றும் இந்தியாவின் சகிர்கான் (12 ஆவது வீரர்). (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனை அபிவிருத்திச் சபை
## PALMYRAH DEVELOPMENT BOARD

# பதவி வெற்றிடம்

## கணக்காய்வு அலுவலர்

**(ஒப்பந்த அடிப்படையிலானது)**

எமது சபையின் மேற்படி பதவிக்குப் பொருத்தமான தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் 28.09.2011 அன்றோ அல்லது அதற்கு முன்தாகவோ தமது விண்ணப்பப் படிவங்களைப் பதிவுத் தபால் மூலம் கீழே காணப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தேசிய வீடமைப்புச் செயலகம்
கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/3927)(31)

**பசுபதி சிவரத்தினம்**
*தலைவர்,*
*பனை அபிவிருத்திச் சபை.*


## மூலதனச் சந்தை தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 15

கொழும்பு பங்குச் சந்தையின் யாழ்.கிளையின் ஏற்பாட்டில் மூலதனச் சந்தை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.கிளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

''பங்குச் சந்தை முதலீட்டு நடைமுறைகள்'' எனும் தலைப்பில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் ஆர்வமுடையவர்களைப் பங்குபற்றுமாறு அதன் முகாமையாளர் கேட்டுள்ளார். (த-10)


## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி பிரணவசொரூபி சிவகரன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் இளையதம்பி நவரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
உடுவில்.

நலன்புரி சங்கம்.

## யா/ சாவகச்சேரி, இந்துக் கல்லூரி இசை ஆசிரியை

**திருமதி கமலேஸ்வரி குமாரசாமி**

அவர்களின்

**சேவை நயப்பும் பாராட்டும்**

**15.09.2011**



இந்து அன்னை மடியிலே கல்வி கற்று
இன்றுவரை உயர்வான சேவை செய்து
எந்த இடர் உற்றபோதும் இணைந்து நின்று
எல்லோர் இதயங்களும் இசையால் வென்று
சிந்தையிலே மாணவரின் நலனே கொண்டு
சீரிய நற்பண்புடனே பணிகள் தந்திர்
நந்தாயே உம்பணிக்கு இணையே இல்லை.
நானிலத்தில் நலம் பெற்று இனிதே வாழ்க!!

ஆசிரிய சகோதரத்துவம்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## தவறிவிட்டது

புத்தூர் மேற்கு, கலைமதி எனும் முகவரியைச் சேர்ந்த ஆசையன் ரதீஸ்குமார் என்பவருடைய தே.அ.அ. (892882550 V), கடந்த 12.09.2011 அன்று அச்சுவேலிக்கும் ஆவரங்காலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உதவவும். T.P.: 0773248715

## தவறிவிட்டது

கைதடி, நாவற்குழி தெற்கைச் சேர்ந்த தட்சணாமூர்த்தி தனுராஜன் என்பவருடைய தே.அ.அ. (883520416 V), மற்றும் BOC, ATM காட் என்பன கடந்த 08.09.2011 அன்று யாழ்நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். T.P.: 0771770485,0779233380

## தேவை

வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு, பெண் பராமரிப்பாளர் உடன் தேவை.

தொடர்பு: 0771626876

## விற்பனைப் பிரதிநிதி தேவை

*பிரபலமான தனியார் நிறுவனம் ஒன்றுக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.*
(அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.)

**தகைமை:**
* க.பொ.த. உ/த சித்தியடைந்திருத்தல் வேண்டும்
* மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்

**நேர்முகத் தேர்வு:**
*காலம்:* 15.09.2011
*நேரம்:* பி.ப. 3.00 - 5.00 மணி
*இடம்:* லக்ஷ்மி ஏஜென்சி,
எஸ்-லோன் விநியோக நிலையம்,
4வது ஒழுங்கை, 23/1 பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.

## வசந்தம் நெற்சோன்

நெல்லியடி

சகல விதமான Photo Copy இயந்திரங்கள் மற்றும் Printer வகைகளின் தரமான Toner [டோனர்] வகைகள் (EOP- Japan) நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P- No- 0212263105, 0777563239,0778449725

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

A/L எழுதிய மாணவர்கள், உயர்கல்வி மாணவர்கள், தனியார் அலுவலர்களுக்கான

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் - 17.09.2011

பிரிவு 1 : காலை 8.00 - 10.00 பிரிவு 2 : காலை 10.00 - 12.00
பிரிவு 3 : மாலை 2.00 - 4.00 பிரிவு 4 : மாலை 4.00 - 6.00

ஆரம்ப வகுப்பு 17.09.2011 - மதியம் 12.30 - 2.00

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## விலைக் கேள்விகளுக்கான கோருதல்

### பிரதம பொறியியலாளர் அலுவலகம்
### *கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்.*

1. கட்டடங்கள் திணைக்களத்தின் சார்பில் தவிசாளர், பிராந்தியப் பெறுகைக் குழு அவர்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்காக தகவுடைய மற்றும் தகைமை பெற்ற கேள்விதாரர்களிடமிருந்து மூடிக் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகிறார்.
2. கேள்வியானது தேசிய போட்டிக் கேள்வி நடைமுறைப்படி நடத்தப்படும்.
3. ஒப்பந்த வழங்கலுக்கு தகுதி பெறுவதற்கு, வெற்றி பெறும் கேள்வி தாரர் கறுப்பு பட்டியலிடப்படாதவராகவும் நிர்மாணம், பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்தில் கட்டட நிர்மாணத் துறையில் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்கானகுறித்தபதிவை அல்லது அதற்குமேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த வழங்கலுக்கான தகைமையைப் பெறுவதற்குத் தேவையான தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தின் பகுதி 4இலும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வித் தரவிலும் (பகுதி-5) கொடுக்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை நிறைவேற்றுப் பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் (தொலைபேசி, தொலைநகல் இலக்கம் 021-222-2634)இலிருந்து பெற்றுக்கொள்ளலாம், அத்துடன் விலைக்கேள்வி ஆவணங்கள் மேற்கூறிய முகவரியில் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000.00 ஐ பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில் பணமாக செலுத்துவதன் மூலம் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), யாழ்ப்பாணத்தில் 15.09.2011 ஆம் திகதியிலிருந்து 22.09.2011 ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 15.30 மணிவரை ஆங்கில மொழியிலான பூரணத் தொகுதி கேள்வி ஆவணம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் இரண்டு பிரதிகளில் கீழ்வரும் பிராந்திய பெறுகைக்குழு முகவரியில் 23.09.2011 ஆம் திகதியன்று பிற்பகல் 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகவே, வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் திறக்கப்படும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பிடப் பட்ட செலவு (ரூபா) | ஒப்பந்த காலம் | தேவையான ICTAD தரம் | விலைக்கேள்வி பிணைப் பொறுப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை. | செல்லுபடியாகும் காலம். |
| NP/B/CE/J/02/2011 | கைதடி முதியோர் இல்லம் திருத்த வேலை | 1.85 Mn | 02 மாதங்கள் | M7/C8 | 18,600.00 | 08.12.2011 |

எந்திரி.க.குகநேசன், தவிசாளர், பிராந்திய பெறுகைக் குழு,
கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல-012-222-2634

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 02 * 11 * 1943

மறைவு 16 * 08 * 2011



**அமரர் ஆறுமுகம் குணரெத்தினம்**

(முன்னாள் உரிமையாளர், சரஸ்வதி விலாஸ் யாழ்ப்பாணம்)

மறைந்து மாதமொன்று ஆனாலும்
எங்கள் மனம் விட்டு மறையவில்லை உமது நினைவுகள்
இப் பூமிதனில் நாமிருக்கும் நாளெல்லாம்
உம் நினைவும் நிலைத்திருக்கும்.

எமது இதய தெய்வம் எமை விட்டுப் பிரிந்த வேளை எமக்கு உதவிய அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இன்று (15.09.2011) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நிகழவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொண்டு அதன் பின்னர் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

217/3, கடைச்சாமி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தவேளை அந்தப் பகுதியில் ஏ-9 வீதியில் ஊதா நிற 'ஸ்கூட்டி பெப்' மோட்டார் சைக்கிளில் ஒருவர் அங்குமிங்குமாகச் சுற்றிக் கொண்டிருந்தார். அவர் திடீரென மாணவிகளைத் துரத்த ஆரம்பித்தார்.

தரம் 10 இல் கல்வி பயிலும் 3 மாணவிகளையும், தரம் 6இல் கல்வி பயிலும் மாணவி ஒருவரையும் அடுத்தடுத்துச் துரத்திச் சென்ற இந்த நபர் அவர்களைக் கையால் பிடித்து இழுத்துள்ளார். அத்துடன் தனது மோட்டார் சைக்கிளில் ஏறுமாறு அந்த மாணவிகளை மிரட்டியுள்ளார்.

இந்த நபரின் பிடியில் இருந்து விடுபட்ட மாணவிகள் கூக்குர லிட்டுக் கொண்டு அருகில் உள்ள வீடுகளில் தஞ்சம் புகுந்தனர். அதனைத் தொடர்ந்து அந்த நபர் குறித்த தனியார் கல்வி நிலையத்துக்குள்ளேயும் செல்ல முயன்றுள்ளார். கல்வி நிலையத்தின் நிர்வாகத்தினர் அவரை நெருங்க முற்பட்டபோது அவர் ஓடித் தப்பி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவங்களினால் நேற்று பிற்பகலுக்குப் பின்னர் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பான நிலைமை ஏற்பட்டது. மாணவர்களுக்கு நடந்ததை அறிவதற்காக கல்வி நிலையத்தை நோக்கிப் பெற்றோர் விரைந்தனர்.குறித்த நபர் நீல நிறத்திலான ரீ-சேட்டும் கறுப்பு நிறத்திலான 'ஹெல்மெட்'டும் அணிந்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.இந்த மோட்டார் சைக்கிள் இலக்கம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்துப் பிரிவுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. (த-14)

## மரண அறிவித்தல்கள்

### அரியகுட்டி சின்னையா

(ஈழநாடு பத்திரிகை, ஓய்வு பெற்ற ஊழியர்)



வட்டு. வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி சின்னையா 13.09.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், பத்மாதேவியின் அன்புக் கணவரும், தவச்செல்வி, கலைச்செல்வி (சுவிஸ்), மோகனச்செல்வன் (சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும், புலேந்திரன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், வலிகாமம் பிரதேச சபை), நாகரத்தினம் (சுவிஸ்), ஜெயவதனா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், [illegible]கிலன், ஆரணி, வினித், விதுஷன், யதுஷன், ராகவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2011) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தம்பிராசா வள்ளிப்பிள்ளை



நீர்வேலி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா வள்ளிப்பிள்ளை நேற்று (14.09.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பறுபதம் தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், அன்னம்மா, நடராசா, தங்கம்மா, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் பரமேஸ்வரி, பிறைசூடி, ஜெய[illegible]ரி ஆகியோரின் அன்புத் தாயும், விநாயகமூர்த்தி, சின்னம்மா, [illegible]நசராசா, கமலாதேவி, தவலிங்கம், சிவஞானசோதி, சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியும், பிரபாகரன் (ஜெயராம் பிரின்டேர்ஸ்), [illegible]ரூபன், பிரதீபன், பிரியதர்சினி, பிரியரூபினி, பகீரதன், ஹரிகரன், [illegible]ஞ்சென்ற நிர்மலா மற்றும் ஜெனோமிலா, கபிலன், குகன், பவிதாஸன், [illegible]சிகன், ராகவி, கௌமிகா, விஸ்ணுகன், கௌசிகா, துவாரகன், அபிசயன், [illegible]தசுரபி, ரவீந்திரராஜா, சிவதாஸன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், [illegible]ஷிகனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் நீர்வேலி வடக்கு, சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி

தகவல்:
குடும்பத்தினர்.

### திருநாவுக்கரசு கண்ணகைப்பிள்ளை

(மகேஸ்வரி)



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு கண்ணகைப்பிள்ளை (மகேஸ்வரி) நேற்று (14.09.2011) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர், வித்துவான், சைவப்புலவர், சைவபிரசங்கமாமணி, இராமுப்பிள்ளை திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், பத்மாசனி (அதிபர், விவசாயக்கல்லூரி, குண்டசாலை), பாமதி (சார்ஜா), மகேஸ்வரகுமார் (உதவி திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட திட்டமிடல் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும், வரதராஜா, மயூரநாதன் (கட்டடக் கலைஞர், சார்ஜா), Dr. திருத்தேவி (பண்டத்தரிப்பு வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், வருண்பிரசாத், வருண்பிரசாந், வானதி (சார்ஜா), தாரணி (சார்ஜா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, கந்தசுவாமி (தமிழவேள், கொழும்பு தமிழ்ச்சங்கம்), இராஜேஸ்வரி மற்றும் அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, செல்லம்மா, இராஜலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), மற்றும் இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்) ஆகி[illegible]ரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.09.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்மவாசம்,
K.K.S. றோட்,
இணுவில் கிழக்கு.

தகவல்:
தி.மகேஸ்வரகுமார்
(மகன்)

## மாணவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தனிப்பட்ட முறையில் எங்காவது சென்றாரா அல்லது யாராவது கடத்திச் சென்றார்களா என்பது இதுவரை தெரியவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-86)

## வெளியேற்றப்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

நிர்வாகத்தினர் வற்புறுத்தலுக்கு இணங்க மறுத்த பத்திரிகையாளர்கள் ''சட்டவிரோதமாக தாங்கள் பணியில் இருந்து தடுக்கப்பட்டிருப்பதாக'' கொழும்பு முகத்துவாரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

கடந்த ஜூலை முதலாம் திகதி முதல் 'தினக்குரல்' பத்திரிகை '' ஏசியன் மீடியா பப்ளிகேஷன் பிரைவேட் லிமிட்டெட்'' என்ற பெயரில் பிரதமப் தமிழ்ப் பத்திரிகை நிறுவனத்தால் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது.

இக்காலப் பகுதியில் மேற்குறிப்பிட்ட நிறுவனமே தினக்குரல் ஊழியர்கள் அனைவருக்குமான சம்பளம் உட்பட அனைத்து கொடுப்பனவுகளையும் வழங்கி வருகின்றது.

இதேசமயம் தினக்குரல் ஊழியர்கள் கொழும்பு தொழில் திணைக்களத்தில் தம்மீதான ராஜினாமா வற்புறுத்தல் குறித்தும் வேலைக்கு அனுமதிக்கப்படாமை குறித்தும் முறைப்பாடு செய் துள்ளனர்.

இதனையடுத்து இது தொடர்பான விடயத்தில் விளக்கமளிக்க வருமாறு தொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் விக்கிரமசிங்க ஏசியன் மீடியா பப்ளிகேஷன் நிறுவனத்தின் பணிப்பாளர் பி. கேசவராஜாவை அழைத்த போதிலும் நேற்று தனக்கு நேரம் இல்லை என்று மறுத்து விட்டார் என்று தெரியவருகிறது.

இதனையடுத்து இந்தச் சந்திப்பு இன்று நடைபெறவிருக்கிறது.

ஆனால் தினக்குரல் நிறுவனத்திலிருந்து விலகுவதாக ராஜினாமா கடிதங்களை சமர்ப்பிக்கும் ஊழியர்களுக்கு மட்டுமே

ஏசியன் மீடியா பப்ளிகேஷன் நிறுவனத்தினால் நியமன கடிதம் வழங்கப்படும் என்ற நிபந்தனையை அந்த நிறுவனம் விதித்திருக்கிறது.

ராஜினாமா கடிதங்களை சமர்ப்பிப்பதற்கு நேற்று புதன் கிழமை வரை காலக்கெடு விதித்திருந்த ஏசியன் மீடியா பப்ளிகேசன் நிறுவனம் 25 பத்திரிகையாளர்களும் ராஜினாமா கடிதங்களை சமர்ப்பிக்காததால் அவர்களை காரியாலயத்தினுள் நுழைய அனுமதிக்கவில்லை நிர்வாகத்தரப்பு என்று கூறுகிறது.

அதேசமயம் செய்தி ஆசிரியர் மற்றும் பத்திரிகையாளர்களுக்கான பதவி வெற்றிட விண்ணப்ப அறிவித்தல்களை ஏசியன் மீடியா பப்ளிகேசன் நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. (ஒ)

## ஐ.நா.இராஜ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூத்த இராஜதந்திரிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். ஆனால், முக்கிய நாடுகளின் அழுத் தம் காரணமாக இலங்கைக்கு எதிராகத் தீர்மானமொன்றை நிறைவேற்றுவதில் இடையூறு ஏற்பட்டது.

இதனாலேயே குறிப்பிட்ட இராஜதந்திரிகளிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கெதிரான தீர்மானங்களை எடுப்பதில் தாமதம் காட்டி வருவதாகத் தெரிவித்து இந்த இராஜதந்திரிகள் ஐ.நா.செயலர் பான் கீ - மூனின் செயற்பாடுகளையும் கடுமையாக விமர்சித்துள்ளனரெனக் கூறப்படுகிறது. (ஒ-சி)

## அரசியல் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரண்டு நாட்களாக நான் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல சந்திப்புகளை மேற்கொண்டேன். கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள், சிவில் அமைப்பினர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேசினேன்.

2009ஆம் ஆண்டு மே மாதத்தில் நான் இலங்கையில் இருந்து புறப்பட்டுச் சென்றதை விடவும் இந்நாடு மிகவும் மாறுபட்டுள்ளது. இடம்பெயர்ந்தவர்களில் அநேகர் மெனிக்பாமில் இருந்து வெளியேறியுள்ளனர். ஏனையோர் மிதிவெடி அகற்றல் பூர்த்தியடைந்தவுடன் அங்கிருந்து புறப்படுவர்.

வடக்கில் முக்கியமான உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. 8 ஆயிரத்திற்கும் அதிகமான முன்னாள் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கும், உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், மிதிவெடிகளை அகற்றுவது தொடர்பிலும் கணிசமான பணிகள் இடம்பெற்றுள்ளன.

### அமெரிக்காவின் உதவிக்குட்பட்டவர்கள்

வடக்கு மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கும் வழமை நிலைமைக்குக் கொண்டுவருவதற்கும் துணைபுரியும் வகையில் அமெரிக்கா அதன் உதவித்திட்டங்களை முன்னுரிமைப்படுத்தியுள்ளது. வடக்கு, கிழக்கில் 20ஆயிரம் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்காக தனியார் துறையினருடன் இணைந்து 202 கோடி இலங்கை ரூபாவை நாம் முதலீடு செய்கின்றோம்.

இடம்பெயர்ந்தவர்களும் ஏனையோரும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச்செல்வதற்கு வசதியாக மிதிவெடிகள் அகற்றும் பணிகளுக்குத் தொடர்ச்சியாக நாம் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம். வடக்கில் இடைத்தங்கல் வீடுகளைஅமைப்பதற்காக கடந்தவருடத்தில் 15.4 கோடி இலங்கை ரூபாவை நாம் வழங்கியுள்ளோம்.

இருந்தபோதிலும் சமாதானம், ஜனநாயகம் மற்றும் சுபீட்சத்துடன் கூடிய இலங்கையை உறுதிசெய்துகொள்வதற்கும் யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்துவதற்கும் இன்னமும் பெருமளவு பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன.

அதிகாரப்பகிர்வு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான முக்கியமான பேச்சுகளை மீளவும் ஆரம்பிக்க ஆர்வத்துடன் அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இருப்பதையிட்டு அறிந்து நான் மிகுந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது கவனம் செலுத்தும் என நாம் நம்புகின்றோம்.

### மனித உரிமைகள் குறித்து கரிசனை

மனித உரிமைகள் தொடர்பில் நான் கரிசனை கொண்டுள்ளேன். நல்லிணக்க செயற்பாடுகளிலும், வடக்கில் மீளத் திரும்பிச் செல்கின்ற மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதிலும், மனித உரிமைகள் விடயத்திலும் முன்னேற்றம் காணப்படவேண்டியது மிகவும் முக்கியமானதொரு பாகமாக விளங்குகின்றது.

### அரசியல் தீர்வு பேச்சு

யுத்தத்திற்குப் பின்னரான நிலைமையை ஆராய்ந்து அதற்கேற்ப அரசியல் தீர்வை முன்வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இன்னும் 10வருடங்களில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்குவதற்கு 60வீத சாத்தியம் உள்ளது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். இது யுத்தம் இடம்பெற்ற எல்லா நாடுகளிலும் உள்ள நிலைமையாகும்.

அந்த வகையில் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்காக அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையிலான பேச்சுகள் 13ஆம் திருத்தச்சட்டத்திற்கு அப்பால் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்கும் சாத்தியத்தைக் கொண்டுள்ளன.

அரசுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் நான் மேற்கொண்ட சந்திப்பின்போது இதை என்னால் உணர முடிந்தது. நல்லதோர் அரசியல் தீர்வு முன்வைக்கப்படுவதையே நாம் விரும்புகிறோம்.

அத்தோடு அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதிகாரப் பகிர்வு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் மீண்டும் பேச்சுகளைத் தொடங்கவுள்ளன என்று இருதரப்புகளும் என்னிடம் கூறின. இதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கை தொடர்பான ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கை ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அந்த அறிக்கை இப்போது அங்கு ஆராயப்படுகின்றது. இந்த ஆராய்வு இலங்கைக்குச் சாதகமாகவே அமையும் என்று நாம் நம்புகிறோம்.

இதேவேளை, தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இன்னும் பூர்த்தியாக்கப்படாததால் அது தொடர்பில் எமக்கு எதுவித கருத்தையும் கூறமுடியாது.

ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் இலங்கை தொடர்பாகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பதில் சொல்லும் என்று நாம் நம்புகிறோம் - என்றார் பிளேக்.

Free 5
Diploma Course fee
Ms Office, DTP
Accounting, Web Design
Business English
6 கற்கைநெறிகளில் ஏதாவது
ஒரு கற்கைநெறியை தேர்வு செய்து
ஏனைய 5 கற்கைநெறிகளையும்
கற்கைநெறிகட்டணமின்றி பயிலும் வாய்ப்பு
MCS 324 Palaly Road, Parameswara Junction
பதிவுகள் இன்று மட்டும்

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1942 * 04 * 10



உதிர்வு 2009 * 09 * 07

திதி-திருதியை

**அமரர் கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்**

*(உரிமையாளர், கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்)*

*ஆண்டுகள் இரண்டு மறைந்தனவோ*
*உங்கள் மறைவு மறப்பதற்குரியதுவோ*
*நாம் வாழும் காலம் வரை*
*உங்கள் நினைவும் வாழும்*

குடும்பத்தினர்
க.செ.கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்
948, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

*78, சட்டநாதர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AFTER A/L? WHAT NEXT?

STUDY IN UK

IELTS இன்றி

Spot Admission & Seminar

இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்

Jaffna

காலம்: 18th September 2011: 10.00a.m.-1.00p.m.

இடம்: Exponet -Jaffna Branch, 197,Arasady Road,jaffna (Between Kantharmadam Junction & Jaffna Hindu Ladies College)



உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

பதிவுகளுக்கு: Colombo - 011 7 555511, Jaffna - 021 7538395, Hotline - 0117 555514, Fax - 0117 555517

EXPONET Overseas Consultants

Head Office : 379 - 1/2, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197,Arasady Road, Jaffna.
London Branch : 56, The Gradens Harrow Middlessex, HA1 4EY, UK.
Web: www.expogroup.lk | Email: nimal@expogroup.lk

### கும்பாபிஷேகம்

வடமராட்சி, செப்.15

பருத்தித்துறை கற்கோவளம் பரந்தாவடி ஐயனார் கோயில் மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கும் 7.30 மணிக்கும் இடைப்பட்ட சுப வேளையில் நடைபெறவுள்ளது.(த236)

பழக்கப்படுத்தல் மூலமான ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி

புத்தகக் கற்றல், CD, இலக்கணம் எதுவுமின்றி மாணவர்களை நேரடியாக உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆங்கிலத்தை 3 மாதத்தில் சரளமாகப் பேசப் பயிற்சியளிக்கும் Saamson நிறுவனத்தின்

புதிய பயிற்சிப் பட்டறை ஆரம்பம்- 17.09.2011

சனி, ஞாயிறு பிரிவுகள்: 08-10, 10-12, 01-03, 03-05
வாரநாள் பிரிவு (திங்கள், புதன்): 08-10, 10-12, 01-03, 03-05
ஒரு பிரிவில் 20 பேருக்கு மட்டும் அனுமதி

SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ். TEL- 077621456

ஞானோதயா அக்கடமி — சாவகச்சேரி

புதிய பிரிவுகள் ஆரம்பம்

A/L எடுத்த மற்றும் பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கானது.

Lectures by Mr.K.Nishanthan [Dip.In.Eng.]

Spoken ENGLISH with Grammar

ஆரம்பம்: 16.09.2011
வெள்ளி at 9 am
(Tues, Fri- at 9 am)

அடுத்த பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறது — NIBM

அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள்

Certificate in Compueter Science (Week ends 9.00 am- 12.00, Week day- F
Certificate in English Language (Week ends 9.00 am - 12.00, Week day-
&
Certificate in Business Manager (Thursday, Friday 9.00am-12.00)

077 071 6974 , 021 222 0360
No-40 College Road , Jaffna

Special Offer 4000/=

DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIPLOMA IN COMPUTER SCIENCE
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN WEB DESINING

New Batches Start 17.09.20

Softview Computer Co
43, Arasady Rd, Thaddatheru J, Jaffna. T.P: 021 22

Seminar

DBF பரீட்சைக்கானது

Risk Financing & Management

காலம்
24-09-2011 சனி
பிரிவு I :- 10.30-1.30
பிரிவு II :- 4.00-7.00

இடம்
கல்லூரி மண்டபம்

வளவாளர்
Mr M.L.லலித் பெர்னாண்டோ
AGM- Risk Management & Compliance
Bank of Ceylon

• பங்குபெற விரும்புபவர்கள் 18-09-2011 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

For Furthur Details,
Director
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

யாழ் நகரில்..

IELTS

LMC is an effective & efficient learning centre in Sri Lanka

(IELTS EXPERT TEACHERS)

• IELTS: ACADEMIC & GENERAL

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

2011-09-19

(FULL TIME & PART TIME CLASSES)
WEEK/ WEEKEND DAYS: 9.30am - 01.00pm
• UK students visa செய்யும் மாணவர்களுக்கு இலவச IELTS classes.
• British Council test registered centre.

LONDON METROPOLITAN COLLEGE
197, Arasady Road, Jaffna
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
Contact no:0212227230, 0217538395
Web: www.lmcjaffna.com

புதிய பிரிவுகள் ஆரம்பம்-24-09-201

aat (SriLanka)
Foundation , Intermediate & Final
Medium :- English & தமிழ்
* க.பொ.த (சா.த) பரீட்சையில் 6 சித்திகளுடன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

Certificate Course in English
commenced on 1-09-2011
Day Classes :- Monday & Friday
Weekend classes :- Saturday & Sunday

Chartered Accountancy
Foundation level & Intermediate level (CAB-I & CAB-II)
Medium :- English & தமிழ்
Minimum Requirement :- GCE A/L 3 Passes
** இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் பதிவினை மேற்கொள்ளலாம்

வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான வங்கியியல் கற்கைநெறிகள்

CBF,DBF
அடிப்படைத்தகமைகள்
G.C.E.(O/L) 06 PASSES WITH 05 Credits including Maths/Commerce & Accounts, and Language (Tamil/English)

External Degree (Jaffna University)
G.A.Q, B.A 1 & B.A Final
1st in com,B.com (1&11), Final

Further Detail.
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.



IELTS வகுப்புக்கள் ஆரம்பம்

திருமணமாகி பிரித்தானியாவுக்கு செல்வோருக்கான A1 பரீட்சைக்கான பாடநெறிகளும் ஆரம்பமாகவுள்ளன...

பிரபல ஆங்கில ஆசிரியர் Mr.V.V.Varatharasan அவர்கள்

16.09.2011 வெள்ளிக்கிழமை 10.00am முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது

London School of Business & Finance (LSBF Highly trusted) கல்லூரியில் HND in Business Adminstration

முற்பதிவுகளை மேற்கொள்ள அழையுங்கள்... 021 222 0998, 077 607 0924.

ACG
788C, Muththeraichanthai, Point pedro road

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.09.2011 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org